554

[illegible]

[illegible]

[illegible]

554
10/9/18
14 NOV 1918

உ

முருகன் துணை

மடவளாகம்

இலக்குமண பாரதியார் இயற்றிய [illegible]

# சிவமலைக் குறவஞ்சி.

இது,

பழையக் கோட்டைப் பட்டக்காரர்,

ராயபகதூர் ஸ்ரீமான்,

உத்தமக்காமிண்ட நல்லதம்பி சர்க்கரை

மன்றாடியாரவர்கள்,

காங்கேயம் பட்டக்காரர்

ஸ்ரீமான், மும்முடிக் கனகதிரப் பல்லவராயரவர்கள்,

சிவன் கவுண்டன் வலசை

ஸ்ரீமான், வெங்கடசாமிக் கவுண்ட ரவர்கள்,

ஆகிய இவர்கள் விருப்பத்தின்படி,

---

விவேக திவாகரன் பத்திராதிபர்,

ஸ்ரீமான்,

தி. அ. முத்துசாமிக் கோனாரவர்களால்,

பரிசோதித்து,

இது,

திருச்செங்கோடு,

விவேக திவாகரன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பட்டது.

1918.

இதன் விலை [illegible] 1—0—0

Copy Right Registered.

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் மார்ச் வருடம் 83
செப்பனிட்டு முடித்த
மாதம் மார்ச் வருடம் 83
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்.

O-,191 MLB,5
H18

11918

உ

முருகன் துணை.

மடவளாகம்

இலக்குமண பாரதியார் பாடிய,

# சிவமலைக் குறவஞ்சி.

இது,

பழையகோட்டைப் பட்டக்காரர்,

ராயபஹதூர் ஸ்ரீமான்,

உத்தமக்காமிண்ட நல்லதம்பிச் சர்க்கரை

மன்றாடியாரவர்கள்,

காங்கேயம் பட்டக்காரர்

ஸ்ரீமான், [illegible] கணபதிப் பல்லவராயரவர்கள்,

சிவமலை கவுண்டன்வலசை

ஸ்ரீமான், வேங்கடராயசாமிக் கவுண்டரவர்கள்,

ஆகிய இவர்கள் விருப்பத்தின்படி,

விவேக திவாகரன் பத்திராதிபர்

ஸ்ரீமான்,

தி. அ. முத்துசாமிக் கோனாரவர்களால்

பரிசோதிக்கப்,

திருச்செங்கோடு

விவேக திவாகரன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

இதன் விலை ரூ. 1—0—0

Copy Right Registered.

14 NOV 1918

கணபதி துணை.

# முகவுரை.

"என்னிப் பென்னியபுன் கொந்துப கன்னுறுத்த
பண்ண லரியது படைத்த
அவன் பாதையின் கழுவப்பணி சேவடியே."

குறவஞ்சி என்பது தமிழ்ப் பிரபந்தங்களி லொன்று. இது குறத்திப் பாட்டு எனவும்படும். இதனை தொல்காப்பியத்துள்ள உறுப்புகளால் செய்யப்படும் நாடகத்தமிழ் நூலாகும். அகவல், வெண்பா, கொச்சகம், கலித்துறை, விருத்தம், இவைகளினிடையிடையே சிந்து, கண்ணிமுதலிய வற்றுட் பாடுவது. இந்நூல், பல்லவி, சரணம், பதமுதலியன அடங்கிய பாட்டுடைத் தலைவனுலாவாகவும், பவனிகண்ட பெண்களுக் கவ்வியுற்ற காமுறல், விரகத்தால் தென்றல், சந்திரன், கடல் முதலியவற்றை நிந்தித்தல், தலைவனிடத் தூதனுப்பல் முதலியன பொருந்திய தலைவியியலாகவும், குறத்தி வருதல், நாடு, நகர், மலை, வாசல்முதலிய வளங்களைக்கூறிக் குறிசொல்லலான குறத்தியியலாகவும், பறவைகளைக்காணல், கண்ணிகுத்தல், குறத்தியை நினைந்து வருந்தல், குறத்தியைக் காணல், வேடம் விளங்காமுந்தல் முதலியன உள்ள சிங்கன் இயலாகவும் நான்கு பாகுபாடுடையதாய்ப் பாட்டுடைத் தலைவன் சிறப்பைப்புனைந்துகூறுதல் தகுதி வாய்ந்தது.

சிவமலைக் குறவஞ்சி என்பது சிவமலையிலெழுந்தருளியுள்ள ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு கூறுவது என்க. இச்சிவமலை, பட்டாலி என்னும் ஊருடன் சேர்ந்த மலையாகும். ஸ்ரீ அருணகிரி நாதர் திருப்புகழினுள்ளார். [illegible] வரும் வழியின் முன்னே, காங்கயத்துக்கு வடக்கே மேலில் தூரத்திலுள்ளது. மடவளாகத்தில் பிறந்த வித்துவான்களுள் விளங்கிய இலட்சுமணபாரதி என்பார் இக்குறவஞ்சியை இயற்றியருளினார். சேது மன்னன் இவருக்குப் பரிசிலாக முத்துக்கொடுத்தனர் என்றும், அப்பழுத்தின் [illegible] சாலத்தில் சிவசபையில் [illegible] என்றும் கூறுகின்றனர். இக்குறவஞ்சியில் பலவிடங்கள் பொருந்திய திருப்பாடுடன் அக்காலத்தில் சிவமலையில் பூசித்து வசித்த ஆதிசைவர்களின் பெயர்களெல்லாம் பலவாகச் சேர்த்துள்ளன. பட்டக்காரர்களையும் மிக்கமேன்மையாகப் பாராட்டப்பட்டுள்ளது. காங்கேய

காட்டிலிருந்துள்ள ஒவ்வொரு கிராமத்தின் தெய்வத்தையுங் காணிக்குரிய கொங்கு வேளாளர்களின் குலங்களையும் அக்குலமுதியார் பெயர்களையும் விளக்குகின்றது. சில பிடாரிமுதலிய கோவில் அர்ச்சகர்களையும் கூறுகின்றது.

இக்குறவஞ்சிப் பிரபந்தத்தை அச்சிட்டுப், பத்திமான்களுக்குப் பயன்படுமாறு பிரகடிக்க வேண்டுமென்று பழையகோட்டைப் பட்டக்காரர் ராயபஹதூர், ஸ்ரீமான், உத்தமக்காமிண்ட நல்லதம்பிச்சர்க்கரை மன்றாடியாரவர்களும், குட்டப்பாளையம் ஸ்ரீமான் அர்ச்சன கவுண்டரவர்களும் என்னைத் தூண்டினார்கள். ஆனால் முற்றிலுமுள்ள ஒரு பிரதி அகப்படவில்லை. பல பிரதிகள் தேடிப்பார்த்து ஒன்று சேர்க்கப்பட்டது. மேற்கண்ட இரு கனவான்களின் பெருதவியால் தான் பலபிரதிகள் சேர்த்து ஒழுங்குபடுத்தித் திருத்தமாக்கப் பட்டது. தமிழினிடத்தும், தமிழ்நூல்களிடத்தும், பழையகோட்டை பட்டக்காரர் வைத்திருக்கும் மதிப்பும் ஆசையும் பாராட்டத்தக்கது. கொங்குமண்டலத்தின் பழய சரித்திரங்களைச் சேகரித்து அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்று சந்தித்த காலங்களிலெல்லாம் எனக்கூக்கமூட்டி மகிழ்செய்வதை மறத்தற்பாலதன்று. அவருக்குமேனுல்லாசத்தையும், தீர்க்காயுளையும் சிவபெருமான் கொடுப்பாராக. இதனைப் பிரசுரித்தற் குதவிபுரிந்த ஸ்ரீமான், முப்புறுடிக்கணாபதிப் பல்லவராயரவர்கள் ஸ்ரீமான், வெங்கடராயசாமிக் கவுண்டரவர்கள் நன்றி மதிக்கத்தக்கது.

இந்நூலைப் போலவே யான் பதிப்பிக்க எண்ணிய நூல்கள் ஒவ்வொன்றையும் எண்ணிய வண்ணம் நிறைவேற்றுதற் பெருந்திட்டம், பிரதியுதவி, பொருளுதவி முதலியன புரிவோர் பெருவாழ்வடையும் பொருட்டும் திருவருள் சார்ந்துபடி, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய இறைவனுடைய திருவடித் தாமரைகளைப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நூற் பரிசோதனைக்குக் கிடைத்த கையெழுத்துப் பிரதிகள்.

| | |
|---|---|
| பழையகோட்டை, ராமயபிள்ளை பிரதி. | 1. |
| காட்டுப்பாளையம், பெத்தான் காங்கயகவுண்டர் பிரதி. | 1. |
| சிவப்பகவுண்டன் வலசை, வேல்முனிப்புலவர் பிரதி | 2. |
| சிவமலை, கன்னிப்புலவன் வீட்டுப்பிரதி. | 1. |

பிங்கள-வருடம் பங்குனி-மீ
20—3—1918.
திருச்செங்கோடு.

இங்ஙனம்.
தி. அ. முத்துசாமிக்கோனார்.



சிவமயம்.

## நூலாசிரியர் வரலாற்றுச் சுருக்கம்.

காங்கேயத்துக்கு 8-மயில் தூரத்திலுள்ள மடவளாகம் என்னும் நகரில் சிவப்பிராமணரில் மார்க்கண்டேய கோத்திரத்தில் தேவராஜ பண்டிதரின் மனைவியார் நஞ்சுண்டம்மாள் வயற்றில் இரட்டைக் குழந்தைகள், சாலிவாகன சகாப்தம் [illegible] (இங்கிலீஷ் 1767ல்) பிறந்தன. இரட்டைக் யாகப்பிறந்ததால் இந்நாட்டு வழக்கப்படிக்கு முறையே ராம, லட்சுமண எனப் பெயரிட்டார்கள். இக்குழந்தைகள் பிறந்து 6-மாதத்தில் பெற்றோர்கள் விண்ணுலகடைந்தார்கள். தேவராஜ பண்டிதர் என்பவர் ஆந்திர பிரதேசத்தில் பிரசித்தராய் இராஜாங்கத்தில் இளவரசன்போன்ற நிலையில் அமர்ந்திருந்த செல்வாக்குள்ள வராதலாலும், மக்களைக் காப்பாற்றும் உரிமையுள்ளார் இல்லாமையால், தாயைப் பெற்றோர் தாங்கள் வசித்துவந்த ஊதியூருக்குக் கொண்டுபோய் வளர்த்து வந்தார்கள். உரியகாலத்தே எழுத்தறிவித்தார்கள். பிள்ளைகள் வடமொழி, தென்மொழி ஆகிய இருமொழிகளும் பயின்று வந்தார்கள். பாட்டனார் இல்லாத காலங்களில் ஊதியூர் உத்தண்ட வேலாயுத சுவாமியை அருச்சிக்க இவ்விருவர்களும் செல்வார்கள். அம்மலையில் சஞ்சரிக்கும் ஒரு அறவி, இலட்சுமணனை அழைத்து மடியில் இருத்தி அன்பாக ஏதோ பேசிவருவர். எந்த நூலை எடுத்தாலும் முன் வாசித்த புத்தகத்தை மறுபடி ஞாபகப்படுத்திப் பார்ப்பது போல, இளையவன், சொல்வதை உபாத்தியாயர் பார்த்து ஆச்சரியப்படுவர். சிலநாளில் சித்தர் நூல்களில் விசேஷ பாண்டித்தியங்கொண்டனர். சத்திபூஜை ஆரம்பமானார். ஆனால் வாமாசாரமாக இருந்தது. அங்கு நின்றும் கருவூர்ச் சித்தராலயத்தைச் சிலநாள் தங்கிப் பின்பு நவகோடி சித்தபுரமென்னும் திருவாவடுதுறை சென்றார். சிலநாள் தங்கி அங்குள்ள பெரியோர்களிடத்துப் பயின்று அத்திசைத் தவயாத்திரை புரிந்து கொண்டு மடவளாகம் வந்து தாயனுடன் சிலநாள் வசித்திருந்தார். பின்பு, சேதுயாத்திரை செய்து திரும்பினார். சேதுமன்னரால் பாரதியென்றபட்டம் அளிக்கப்பட்டது. அதனால் இலட்சுமணபாரதி என்றழைக்கப்பட்டார். சத்தி உபாசனைப் பலத்தாலிவருடைய சுருமங்களைப் போக்கினார். சில அற்புதங்களைக்காட்டினார். காங்கேய நாட்டிலுள்ள சிவாலயம், சுப்பிரம

னிய ஆலயங்களுக்குப் பலபிரபந்தங்களைப் பாடினார். இன்னும் அங்கங்கு படிக்கப்பசிங், ருர்ணிகை, கச்சரிக்கை, அம்பாரி அஷ்டகங்களெல்லாம் இவரியற்றியவே. மடவாலைக்கத்துப் புராணம் சொல்லியுள்ளார். இசைத்தமிழில் பயிற்சியுள்ளவர். தேவாரத்திய கர்த்தர்களின் சக்திதடம்பிரிய்ர், வண்டிக்கணக்கான ஏட்டுப்பிரதிகள் சேமித்து வைத்திருந்தனர். சங்கப்பாக்கள் கையுறக்கூடினார். தெலுங்கு, கன்னடம், மலையாளம், அரபி மொழிகள் தெரிந்துள்ளார். சொக்குமண்டலமல்ல மற்ற எம்மண்டலங்களிலுஞ் சென்று பழகியுள்ளார். கருர்முதல் பேரூர்வரை உள்ள 64 தேவஸ்தானங்களின் கிராமலிங்கங்கள் ஜப்திசெய்யப்பட்டிருந்த போது சென்னை சென்று இராஜாங்கத்தாருடன் வாதாடித் திருப்பிவைத்தனர். ஏன்பர், எச்சமுள்ள பதிகளுசொச்ச உரையாமிவர். சொல்லிய செய்யுட்களை இவர்தமையரை எழுதிவைப்பாராம். இவர் மிகுந்த புகழுடன் சென்னுறா வருடமிந்த உலகில்வாழ்ந்திருந்து காளியான சகாப்தம் (உக்ஷ) (இங்கிலீஷ்-1859.) காளயுக்திவருஷம், தைமாதம் கைலாசயாத்திரை கொண்டனர். இவர் அவ்வுலகு சென்று இற்றைக்கு 60—வது வருஷமாகின்றன. இவரியற்றிய நூல்கள் பல. இவரது பேரன்மார்கள் இருவர் இருக்கின்றனர். சுபம்.

இவர் இராமேச்சுரம் பர்வதவர்த்தனி மீது பாடியவை:-

தனதன தனதன தத்தனனு தனதன தனதன தத்தனனு.

சந்தப்பா.

அனங்கன்மதுரமோ புீசசலையோ படமகமுரலமலர்க் குழலார்
வனிதையர் காதமயக்கினிலே மருவிய டினையை நிப்படமோ
உனதியல் புகரு ஊக்கடலே வொளிதிகழ் கனசமலர்ப் பதமே
தினமரு டறுமசம் வர்த்தனியே செயமிகு பருவத வர்த்தனியே.

சேதுபதியைக் காணப் பெறுதுபாடியது.

தாந்த தாத்தன தான தனனு தாதந்த தத்தன தான தனனு.

ஆர்ந்தபாக் கவிகள் பாடிநிதமே யாசென்று கேட்பவரிசைக் கிடமே, தாமென்று மெக்கறுமனை குறுகியே நாணங்கள் போக்குவதற் காயமலவே, மானங்கள் பார்த்தடிமை பாரினிடையே வாழ்வொன்று பாக்யமுற நீயருளுவாய், தேவென்று வாய்க்குறாமி ஞானையுறவே சேருந் திவாகரிபில் வாழ்முருகனே.



வெண்பா.

நம்பாதே தேவைவதி ராமநாதன் மினகு
சம்பாவுண் டேலதனைத் தான்வாங்கி—உண்பதுவும்
உண்டோ விலையேயென் றேர்பெறுமை போற்புகலைக்
கண்டோங் கறுவொன்று காண்.

மறுநாள் சம்பாப்பொங்கல் அதிரசம் அளிக்கப்பெற்றுச்

சொல்லிய வெண்பா.

மெய்ராம நாதர் விடத்தையுண்டா ரென்றகதை
பொய் வயற்றிற் பாரும் புலவீர்காள்—செய்யினுகு
சம்பாவை யுண்டவிடங் கங்கிற்றுக் கண்டத்தி
லின்பா மதிரசத்தி லே.

மழைபொழிய வேண்டிச் சேதுவேந்தர் கூறச்சொல்லிய

வெண்பா.

தெண்டா யுதாபழனிச் செவ்வேளே யுன்கிருபை
யுண்டா வதுமுலகி லுண்மையேல்—விண்டுமழை
எங்கும் பொழிய விராமநா தன்மனது
பொங்க வருளே புரி.

பழனிக்காவடி கட்டியெடுக்கும் பொழுது மயூர நடனச் சிலம்

பொலியைச் சேதுபதி கேட்கப்பாடிய

வெண்பா.

அரவின் மிசை நடன மாடுங்க லாப
மரகத மயூரமே வைகா—புரியின்
மருவு பழனி மலைவாழ் வடிவேன்
முருகனைக்கொண் டோடிவா முன்.

கடுக்கனிட்டபோது பாடிய

வெண்பா.

கனிவுதெரி யாத கசடர்பாற் சென்றே
யினியதமி ழோதாதே யென்று—முனிவதாய்க்
கன்னத்தி லேயடிக்கக் காதிற் கடுக்கனிட்டான்
மன்னனெங்கள் சேதுபதி மால்

## திருச்செங்கோடு செங்கோட்டுவேலவர் மீது ஐந்துபாவை

ஆசிரிய விருத்தம்.

மதுரையை சகியொருகு கவிபாடி கவெசிடம் வந்துரைத்திடல் மெல்லிசை
மாட்டாட கோயமலை கண்டாவுவெனென்பர் வருகன்ன டக்குரைக்கில்
மலைமேவி ககிரெறல செந்தாமரை சங்கரோய் கிற்வை இல்லா
மதிதுறை கம்பமிக இரவிற்மறு வென்பார்கள் மலையான குக்குரைக்கிற்
பதாம் விளிபெடமே வந்தாறு காரியம் பாயானை வென்பர் குரு
பட்டாணி மாக்கன்பாற் சென்றமை மக்கள்வேட பாத்துரைத் காருமாபி
பர்தம்கு மாதுமை அர்ணபேக வென்பார்கள் பன்னூரற் தமிழ்த்தலைமை
பாடிற் கலிசேப்ப திலெவென்பர் கவிதனைப் பாடியவே யாமலைகுடா
விதுறு ஞாயபர குருபரக வம்சகுண விசைன கடாவு சகன
விபுகனை செவ்விடை வழாணன் கடுமொ சா விசித்ர புஷனை கோபிற
விறுமசி வடகுகு நகள வெவெவோபாத விசாடனை முருதாரக்கள
விப்ர காயாண குரபிறிகோச ஐய வேதவோரசக்குப
சிதருமுன முகுமைமிகு விருகர்ண கவமான வினையமுயர் விநயமறிவே
கிக்கிமமிகு தேக்கிரமபாக்கிய விமைசக்கியமும் யோகியமுமாக்கிய தன்வேவய்
சிவிலவுயிர் ககுசமை புவனமோ கக்கருத விவேகருனை லாடிமகிக்கு
கிமலி மைம கருணதல்ல பணிவிரிமே அவிலமுந்த கியமைனி திருமருகனே.

## மூலனூரைச் சார்ந்த சீலம்பூர்க் காளியம்மன் மீது

விருத்தம்.

குலவருக்கு மகிச்சிமிழி வைம்பைசக் கொழுமைன் சாக்
காரிசிட அதிக்கை கொட்டிப், பலபெருக்குக் கீக்கண்ணியெ
மூதாக் கேன்விப்பரைசமெயாரு கைக்குகும் விருதியமைப், பல
வருக்குக் காமெவிக்குகுசதிகாரி சீலம்பூர்ப் பத்திரகாளி, புல
வருக்கு வேணெதலாக் கருவாளின்னம் பக்குலைக் கமிழ்பாடிப்
போறறலாமே.

சிந்திநகவி,

நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியீது ஆனையடிச் சதுரங்கபந்தன

வெண்பா.

காலை பக்கன் மெய்யா துரைச் காதலிசைய சதிகு
மூலமைய மேய்சல்லா வால துரை—போரயெறு
டக்கபுக பேறிக்கு காதா சலதாப்பின்
சர்க்கரைமன் றாடியா சவ.

இவச்சமைப்பிகார மைக்கப்பெற்ற அறுபத்து நான்கறையில்
பாட்டை எழுதி அதுதலைமுதல் மூன்று கடையீறினிலும் வாசகம்
" காலையமதுரைசலதம்பிச் சர்க்கரை மன்றாடியரசன் " என்றம், மேற்



சொன்ன முதலறைக்கா தொடங்கிக் கீழேவர " சர்க்கய நகுடன், , என்
றும் அமைதல் காண்க,

## நல்ல சேனாபதிச் சர்க்கரை மன்றாடியின் மனைவியார் வள்ளியாத் தாளுக்குப் பிசித்த சீட்டுக்கவி.

திருமருவு பழனிமலை முருகேச சாமிக்கு செல்வமயமாகதி
யானைத், திரிகின்ற தண்டுமின் கொண்டு களிமலைசெழுத்தி
டச்செய்வசிராக், செயபகார்சுமைமறு வென்னவேமாதாரித செ
முக்தமிழ் சொரிக்கு மேகம், தென்பாவு மன்னகபுர வட்டசமண
பாரதி தெளிக்கெழுதி விட்ட திருபம், தருவுவைகாரையூர்
நல்லசே னுபதிச் சர்க்கரைமன் றாடிராஜன், தனதுமனை யாளி
னிய கற்பினி வருந்ததி சமானசற் குணபூஷணி, சக்கதிராம
பிள்ளை சிவமலைப் பல்லவன் றந்தசீ யந்தபுத்ரி, தருமமிகு பயிற
குல வள்ளிநாயகி மெலுமன் தாய்மன மகிழ்ந்து காண்க—அருள்
பாவு சிவனுமைமக் குக்கிருக்கல்யாண மானசப திலமலைமீசிய,
ஆகையால் மங்கலிய விரதபூசனை செய்ய ஆருமாதாவதிவேலன்,
ஐக்துவன் எப்பக்கை மரிசிய பொய்யறதர்குள்ளேயல முன்றிதி
ஆவினைப் பெல்லம் முழுந்த பாலதயிர் வெண்ணெய் மரிபுதயி
ரொன்று கறிகாய்—மருவுலை சந்தனம் குங்குமம் புனுகுஜவ்
வாதுபரி மளமுமுனாது, மருகமட் கோர்புடவை பாக்குவெற்
றிலை நல்ல வாழைபழமே யிவையாவுமே, வரைநுக் காதுபுமின
தெனக் கேட்பவர்கள் மனமகிமை மேறுகெக்க, மன்னர் புகழ்
சர்க்கரைத் துரைசாமி தக்கதென வரவிடுப்பி விட வேண்டுமே.

## காங்கேயம் பட்டக்காரர் மீது

கட்டளைக் கலித்துறை.

கடத்தைக் கிழித்துக் கடாசலக் கோட்டுடன் கச்சுமுத்து
வடத்தைக் குலிக்கும் குலிமுலையாள்கொண்ட மையலைப்பார்
கிடத்தைக்கிழித்துத் திசைப்பட நாகத்தை வெட்டிவெட்டிப்
படத்தைக் கிழிக்குந் தாங்கா இதப்பப் பல்லவனே.

மூன்று வெண்பாக்கள்.

மாசிலா நால்வரை யைப்புயமே றெப்பு தமிழ்
வாசிப்பார் மேன்மனமு வப்புறக—வீசகைக்கு
வால்வமை திப்ப வருகன் மன்னவன் சிங்கைக்கு
மால்கிதப்ப ரப்பல்லவன்.

இது நால்வரா என்பது தொடங்கி மாசிலாவரை, படிக்கறு வெண்

பாவாகவும், மைப்புயலினென்பது தொடங்கி நால்வரை வரைவாசித்த, மற்றொரு வெண்பாவா தலைபுக்காங்க,

விருத்தம்.

எங்கள் பெரியோர்கள் காப்பிழைத்தார்கள் கவிராய என்றீரே யன்
றங்கள் பெரியோர்கள் தந்த பொருள்கொட்ட வல்லீரோ வுண்மையாக
எங்கள் பெரியோர்கள் தரு தமிழ்கூறி யீர்க்கின்றீ ரிலையேற்றுமீர்
உங்களுயர் வெக்கன் மிட்டையென்றறியீர் பல்லைப்பே ருடையீரே.

தென்கரை நாட்டேப்பட்டக்காரர் வேளுவுடையார் மீது,

வெண்பா.

சேனுடர் போற்றுஞ் சிவகைப் பிரமேயர்
தாறுமி கொற்றையூர்த் திருமிசைக்கு — வேளுவுடையான்
அன்னையமிர்த் தாக்குத் தருவான் றருவெனவே
என்வெயமுநிக் காரடைந்தே னிங்கு.

பூசைக்குச் சாராயமில்லை என்றவன் வைத்திருந்த 10 மிடாச்சாராயம் தண்ணீராகவும், பின்அவன் வேண்டிக்கொள்ளப்பழையபடி சாராயமாகவும் பாடிய,

வெண்பா.

ஆத்தா ளருளே யடைந்தகவி ராயருந்தப்
பார்த்தாற் பிணிபோம் பாக்கியம் போம் — சேர்த்தமிடாச்
"சாராயம் நீராகும்" தண்ணீர் சாராய முமாம்
பாமேரா ரறியும் படி.

புரவிபாளயம், பாளயகாரர் கோப்பண மன்றாடியார் மீதுபாடிய,

விருத்தம்.

மண்டலத்திற் சமஸ்தான பதிகளெல்லா மறையவர்க்கு முத்திரிபோக வனைவீர்க்கும், தண்டமொடு கொடுத்தார்கள் கொடுக்கின்றார்கள் தானிதனிலதைப் புகலுஞ் சரிதமில்லை. தண்டமிழ்வா னருந்து நல்ல வார்த்தை தண்ணீர் தந்திடவுமழியாத தமிழ்பிறைதமிக், கொண்டு புகழ்தருவ ரெனப்போற்று மெங்கள் கோப்பண மன்றாடி யெனுங்குண சீமானே.

செருப்புத் திருட்டுப்போன போது பாடிய,

கட்டளைக்கலித்துறை.

இருப்பாக்கி வாளும் விளங்க சக்கர மேந்திபொரு
உருப்பணி றென்குய வன்கருப் பண்ணனென் றுன்னையுமே



பொருப்பருளி லம்பூர்க் காளியைப் பாடும் புலவரின்று
செருப்பைத் திருடி னவனைப் பிடிக்கத் திறமில்லையே.

குழிச்சிநகர்ச் சின்னத்தம்பிக் கவுண்டர் பேரில்,

விருத்தம்.

திருவுலவுமகமேரு வரையைக்குனித்தாகத் செவ்விளமிளையச்சினைத்தாச், சீதளைசந்தரும் பைப்பக்க மேசெய்து சிந்துரக்கிம் புரியினைச், செருத்தமணி முடியினை திறத்திவெட்டென வெட்டி செபச்சிரமனைத்தினைச், சிறையெனத் தன்னியே செய்பைக்கடைந்தபுஞ் செண்டைத்தடிக்குநிர்த்துச செய்ய தந்தச்சிமிழை விலைமதித்துலவினிற் றிரியக்கடைப்பமித்திச், திருகணிபறைந்தை நூற் கத்துக் கத்தினைச் சிறந்த மோதிப்புடைத்துச், செய்பொற் குடத்தைதபுலே யினிவைத்துருக்கி மாற்றதுவெனவுரைத் தானியாய்ச், சேர்த்து வில்வக்கனி தனைக்குடைச் சதனுளே சிந்தாக் கனையடைத்தே, அருணைகுக் குமகளப சந்தன கதம்பமாலித்து திதலைகள் பரந்து, மண்ணுாந்து விம்மியெழில் வீணையையனைத்தின்ற வனகாதியும் புணர்ந்தே, அதுபோக மதுசெயுங் கடாரமென்றுமுலை யரிவையே யுணைவினைந்தே, அங்கசன் கணையிலும் மணிமதித்தனைவீறு மலைகடன் முழக்கத்திலும், அருங்குயிற் றொனியிலுந் தென்வசந்தத்திலு மனைவிலிய மெழுகென்னவே, அகமுருகி சிறிதுமா மெனவருகவெறிதருக வாவின்மத சவதிபெருக, அருகக மெனுஞ்சொன்மொழிகொஞ்சியல் மிஞ்சிமன தஞ்சியபர த்திகெஞ்சி, அமுதமொழி குளறிபுடல் புளகமுற மினைவுமற அயர்வுகொடு மெலிவசனமாய், மருவுலவுரதிமதன னொத்துறை சமுகமதின் மருவியங்கிறுலமதிக, மங்கையர்நிரம்புவர்கள் சங்கித முழங்குவர்கள் வணகவிஞர் சங்கமொரு பால், மதிமுகியெனவரச புரியுமவை சொனுமந்திரி மார்கள் சன்மானமொருபால், மருமன்ன ரைச்சயஞ் செய்துவரு தனகர்த்தர் வரிசை பெற்றிவரொருபால், மகராசரெழுதிவிடு சனதுபதிமொப்பமது காக்குசம்பிரதியொருபால், மன்னுமக்குழிச்சி நகர் தன்னிலவ ரண்மனையின் வாசலமிது வனமெரிந்து, மாதனுப்பினன் தூதி தேதுபத்தினியீது வாதுவெயயத்தகாது, வனவனச மலர்பூறு சாமுதவு திருவனிதை வல்லவருசெயலிதெனவே, திருண கபகரசாரி, தினையினையமின்புய் தாமமைதயருள் புரிகுவாய், சரசகுணமுகுனைகன சபைவனித விறுவகுணை தானகர்குலவதாரா, கங்கு புகழ்மிக்கம் குழச்சுரகன சந்திர வசந்த வித்திரா, சங்கீத சாகித்ய சத்துவ விவேககுண சாம்பராஜ்யவட்சமீகர, தருமகரசிகிதி அவைசநிகம் திபிவெர்கள் சுதந்தமிக்குநாயக, சாந்தமைதாக்ஷிக ஆசாருகுண கேதந பிதிம் சமூகக்தரவீசாச, தருமகின்னத்தம்பி மகிபனருளியபால தமிழ்வாசர் சேனாபதிய, தனையருக்கம்பினிராசர்கள் மனமெக்னப் பொன்பதின் மேகனா தனகின்னத்தம்பி மகீபதியே.

விருத்தம்.

ஆர்த்தமிலாப் போலிப்பசாசம் பேசியதிருருடன் றமர்களை
யுபகலைக்துச், கஞ்தைசலந்தா மென்று செருக்குமந்தத் திற
லினோர்க்குயர்வுதந்த திறமையாளர், இத்தரையிற் றமிழ்ப்புலவ
ரலரோ வென்றே யென்றைநு மாநுகைப்பா மெனவோரா து,
சித்தமகிழ் இன்றுரை மதியா மேன்மை தெளிமதியா சின்னயசு
சிவனே.

கூனம்பட்டி மடத்தில் தங்கியிருந்தபோது புசித்தாயா? எனப் பாரதியார் கேட்க; இவர் கையேட்டுக்காரத் தம்பான் சொன்ன

வெண்பா.

மொட்டைச் சோழச் சோற்றின் மொத்தையிட்டுச் கத்தரிக்காய்த்
தட்டைச்சாற் றைத்தாக்கித் தாளிட்டார்—பட்ட முறு
மாணிக்க வாசர் மடாலயத்தா ரையாவுன்
றாணிக் கடிந்துவக்கேனுன்.

அறியாது செய்துவிட்டார்களென மடத்தார், அழைத்துப்போய் ஊண் பித்தபின் கேட்டபோது சொன்ன,

வெண்பா.

நாவையல் வருவன் தவட்டல் கறியு
மவியல் குழம்பிரச மப்பம்—அவல் வடகம்
பேணிவடை பாயசநெய் பேணியமுதளிக்கும்
மாணிக்க வாசர் மடம்.

அந்தியகாலத்தில் முடிவாகச் சொன்ன

வெண்பா.

என்னவென்ன நீமை வெளியே வியற்றிடினும்
அன்னைபிழை பொறுப்பாள் ரக்ஷியே—உன்னுடைய
பொன்மலர்த்தா ளிந்து புரக்க விதாசமயந்
தின்மயவு மேச சிவா.

---

உ

முருகன்றுணை.

# சிவன்மலைக் குறவஞ்சி.

## பாயிரம்.

காப்பு.

விநாயகர் துதி.

விருத்தம்.

சீர்பரவு சலதிதர பரம நந்த
நிஷ்கள நிராலம்ப நிமல ரென்னச்
சீர்பரவு சத்திசிவா சலத்தில் வாசன்
சிவசுப்பிர மணியர்பதந் தினமும் வாழ்த்திப்
பேர்பரவு சரவணப வாவெ னுஞ்சொற்
பேசுகுற வஞ்சிநா டகத்தைப் பாடக்
கார்பரவு மிபமுகவைங் கரன்கார்ப் பூரக்
கணபதித னிணையடிகள் கருதுவோமே. ௧

சத்தி துதி.

முரசதுந் திமிமுழங்க முதுமறை விளங்க விண்ணாட்
டரசபங் கயன்முகுந்த னமரரும் வணங்கு கங்கா
வரசுதன் சிவாத்திரிவாசன் மலைக்குற வஞ்சிபாட
சரசுவதி யிந்திரை போற்றுஞ் சத்தியை வணங்குவாமே. ௨

திருமால் துதி.

வில்லமங்கை யின்கொடருச் சனைதான்செய்து
வேணவரம் பெறுமியை வெற்பன்றந்த
நல்லமங்கைக் கோர்பாகர் தரும்பால்வண்ணா
நாதர்சிவ சயிலசடா னன்றன் மீது

செல்லமங்கை யாம்நீல வளகபாரஞ்
சிறந்தகுற வஞ்சிநா டகத்தைப்பாடக்
கல்லமங்கை யாக்ருபத வேங்கடேச
கரியமா லிணையடிகள் கருதுவாமே.

## பார்வதிதேவி துதி.

முன்சுண்டக் காய்ந்திடும்பா லின்சொன்மாதர்
மோகவலைக் குட்டியக்கா முனிவோர் யார்க்கும்
அஞ்சுண்ட வக்கரமார் சிவ சைலத்தில்
அகமகிழ வினவுவா மருள்வேலோன்மேல்
மஞ்சுண்ட குழல்நீல விழியே வைவேல்
மடந்தைகுற வஞ்சிநா டகத்தைப்பாட
நஞ்சுண்ட நாதர்பங்கில் வாழும் லோக
நாயகியார் பூம்பதத்தை நம்புவாமே.

## சரஸ்வதி.

மகர தோரணங்க டெருவீதி தோறும்
மங்கள விலாசமட மண்ட பங்கள்
சிகரகோபுர சித்திர மாட கூடஞ்
சிறந்துவளர் பட்டாலிச் சிவாச லத்தின்
தகரின்மிசை நடங்குலவும் வடிவேற் கந்த
சாமிமிசை குறவஞ்சித் தமிழைப் பாட
அகரமுதலைம் பத்தோ ரெழுத்தாய் வந்தென்
அடிநாவிற் குடிகொள்சரஸ் வதிகாப் பாமே. ௫

## அநுமார், கரியகாளி, துற்கை, சத்தகன்னிகள் துதி.

காரதண்ட விதிபூசை புரிசிவாத் திரிக்
காங்கயன்மேற் குறவஞ்சிகளிநடபாட
மரகதமால் தூதநுமந் தாரயர்
வனசமல ரடியிணையை வணங்கியேத்தி
யுரகதர டமருக கங் காளிகுளி
யுமைகரிய காளிபத முளத்தில் வைத்துத்
துரகதக்கண் டீரவத்தி வீரகாளி
துர்க்கை சத்த கன்னியர்துதி செய்வாமே. ௬



## பச்சோட்டநாதர், பத்திரகாளி, மற்றைத் தேவர்கள்.

பூங்க யனாட்டமதிவதன வள்ளி,
பூவைகுஞ்சரியை மணம்புணர்ந்து வாழ்கந்
தாங்கயன நாட்டமிடவருஞ் சிவாத்திரிச்
சண்முகன்மேற் குறவஞ்சித் தமிழைப்பாட
ஓங்கயன நாட்டவங்கள் செயவுகந்த
வுமையவன் பார்வதிபுரப்பச் சோட்காக்கக்
காங்கயன நாட்டமாயிசர் பத்திர
காளிமற்ற தேவரையுங் கருதுவோமே. ௭

## பழனிவேலர் துதி.

மறவஞ்சி வாயமிலெனும் வேதாந்த
மந்திரத்தை மனதுபற்றும் மறையோர்யார்க்கும்
பிறவஞ்சி னொடுபாசை பாசபாசப்,
பேதமைநீத்திடுஞ் சிவன்மா மலைவேலன்மேற்
குறவஞ்சி நாடகங்கள் பாடியாடிக்
குவலயமெலா மதிக்கக் கூறுதற்குத்
திறவஞ்சிக் கொடியிடைக்குஞ் சரியைத்தோயுந்
தென்பழனி வேலர்பதந் தியானிப்போமே. ௮

## அவையடக்கம்.

வானொரு மமரர்பிரான் கொடிவந்து வேண்டி
வழங்கவுப ரிபமகளை மணமுடித்து வெய்ய
கானுருந் தினைப் புனத்துக்கால் கடுக்கச் சென்று
கானவழியிற் குறமகளைக் கனிந்தணைந்த குகன்றன்
தேனொழுகும் பூந்தொடை நக்கிரனருணை கிரித்
தேவர் தமிழேறு திருச்செவிக ளினுமேலோர
யானொருஞ் சிரிப்புறச்சொல் புன்றமிழும்புகுது
மௌவுளத்தே யுளியிசைத்தே னென்னை வெறுப்பாரெவரே. ௯

பாயிரம் முற்றிற்று.

## தோடயம்.

இராகம் - நாட்டை.

நீர் மருவு செஞ்சடில நிமலர் சிவன்மலை யில்வளர்
நீப மலர் மாலையணி சேவல வன் மீதில்
வார் மருவு தனமங்கை குறவஞ்சி நடங் கூற
வாலை திரிபுரை புவனை மலர்ப்பத தங்கள் துணையே—
ஆ. ஆ. ஜய ஜய.

காஞ்சி நதியான் பொருநை காங்கய னன்னாட்டி லருள்
கதிக்குஞ் சிவ மாமலையிற் கந்த சுவாமி மீது
நான் நின்று குறவஞ்சி நாடகத் தைப் பாடுதற்கு
நாமகளும் பூமகளும் நான்முகனுந் துணையே—
ஆ. ஆ. ஜய ஜய.

அமரர் முனி சனர்பரவு சிவசைல குமரர் மிசை
அமிர்த மொழிக் குறவஞ்சி அருந் தமிழைப் பாடத்,
திமித வாரிதியை முன்பு தமதுகையில் வாரி யுண்ட
சித்தரகத் தியர்பதமுந் திருமாலுந் துணையே—
ஆ. ஆ. ஜய ஜய.

அந்தகர்கள் பண்பயிலு மைந்தரு நிறைந்து வளர்
வான சிவ பூதர சடான னன்றன் மீது
நஞ்சு மிழுஞ்சன மின்குற வஞ்சி நடனங்கள் சொல
நவ வீரருபய பத நளின மலர் துணையே—
ஆ. ஆ. ஜய ஜய.

ஆகம வேதாந்த ரசபாக சிவநாத முறு
ஆறுமுக சரவண பவ நந்தன் மீது
நாக ரிக சகமோக குறவஞ்சி நடங் கூற
நாவலூ ரர்லால நாவல னற்றுணை யே—
ஆ. ஆ. ஜய ஜய.



## மங்களம்.

பல்லவி.

மரகத மாயூரனுக்குச் சயமங்களம்—குற
வள்ளிமண வாளனுக்குச் சயமங்களம்

அநுபல்லவி.

பரசிவைகு மாரனுக்குச் சயமங்களம்—செல்வப்
பட்டாலி யூரனுக்கு சயமங்களம் (மரகத).

சரணங்கள்.

தாரகசம்மா ரனுக்குச் சயமங்களம்—வச்சிர
சத்திதரகர்த் தனுக்குச் சயமங்களம் (மரகத)

கதிருமிழ் கிரீடனுக்குச் சயமங்களம்—திவ்விய
காங்கயநன்னா டனுக்குச் சயமங்களம் (மரகத)

தேவகுஞ்சரி காந்தனுக்கு சயமங்களஞ்—சத்தி
சிவாசல வேந்தனுக்குச் சயமங்களம் (மரகத)

---

இராகம் மோகனம்.

சரவண பவகுக நமோ நமோ—சிவ
சைல காங்கயனே நமோ நமோ.

பரிபுர கிண்கிணி சதங்கை சிலம்பினொலி
பழமறையின் பொருளதென முழங்க
மரகத சிகிமிசை கைலைய கொடியினில்
வலம்வரு நாதா நமோ நமோ—சிவ (சரவண)

புங்கவர் பணிபத பங்கச மதகர்வ
பங்க சங்கர னருள் பாலா சுப
அங்க மயூரது ரங்க மங்கள கர
கங்கவர குமரா நமோ நமோ—சிவ (சரவண)

கோலாகல விசித்திர குஞ்சரி குறமகள்
லீலா விநோத கிராந்த ரனே
சாலோக சாமீப சாரூப சாயுச்சிய
தற்பரா நந்தா நமோ நமோ—சிவ (சரவண)

## கட்டியக்காரன்.

### விருத்தம்.

பரிதிமதி பிரபைமழுங்கத் திலதந்தீட்டி
பதித்தநவ மணிமகுடமுடி யிற்சூட்டி
விருதுபல ஆடையாபரணம் பூட்டி,
மேகலையி லொட்டியாண மிசைத்துக்கட்டி
கருதிவசனங்கள்பல வும்பாராட்டிக்
கம்புருசங் கீதமுறைச் சுதிகள்கூட்டி
இருநிதிசூழ் சிவன்மலைக்காங் கேயன்பாத
மெச்சரிக்கை பராக்கெனக் கட்டியன் சொல்வானே.

இராகம் சௌராஷ்டிரம், அடதாளம்.

### பல்லவி.

வந்தனன் கட்டியக்காரன் சபைதனில்
வந்தனன் கட்டியக்காரன்.

### அநுபல்லவி.

இந்த வுலகு சிவாத்திரி யிறைவன் காங்கய நாட்டில்
(வந்தனன் கட்டியக்காரன்)

### சரணங்கள்.

நவரத்ன மகுடங்கள் சூட்டி பிறை
நன்னுதலில் வெண்ணீறு திலதமுந் தீட்டி
பவவினை யகலவே ஓட்டி அருள்
பரமகுருவின் முத்திரைப் பிரம்புகை காட்டி
(வந்தனன் கட்டியக்காரன்)

வேலு மயிலுந்துணை யென்ன நாலு
வேத சாஸ்திரங்கள் புராணங்கள் சொன்ன
மாலு மயனுமிந்தச் சன்னதியின் முன்பு
வழிவிடுங்கள் பராக்கெச் சரிக்கை யென்ன
(வந்தனன் கட்டியக்காரன்)



சுரர் முனிவர்க ளடிவ ணங்க தேவ
துந்துமி பேரிகை தாளமத்த ளங்கள்
அர அர சத்தங்கள் மு ழங்க பா
மானந்த விபூதி யாவர்க்கும்வி ளங்க
(வந்தனன் கட்டியக்காரன்)

நவரச செந்தமிழ் விண்டு சிவ
ஞான ருத்திராக்ஷ தாவடங்கள் கைக்கொண்டு
சிவன் மலை வேலருக்குத் தொண்டு செய்து
திருவடி மகிமையும் அருளையுங் கண்டு
(வந்தனன் கட்டியக்காரன்).

## கட்டியக்காரன் பராக்குக்கூறல்.

குங்கு மாங்கித தேக குகனே பராக்கு
குமாரசர வணபவ ஷண் முகனே பராக்கு
சங்கரி யிந்திரைக்குமரு மகனே பராக்கு
சந்ததி சிவன் மலையினிற் குமுகனே பராக்கு

சதுமுகனுஞ் சரஸ்வதியும் பணிந்தார் பராக்கு
சசியிந்தி ரன்பதமலரைப் பணிந்தார் பராக்கு
விது ரவியுஞ்சுதி முறையின் றுதித்தார் பராக்கு
விண்ணுலக த்தவர் வாழ்வு கதித்தார் பராக்கு

அகில சனர் தோத்திரஞ் செய் கீதா பராக்கு
அநேக மாகியவ ரப்பிர சாதா பராக்கு
சகல பணியும் பரம குரு நாதா பராக்கு
சோதி மய மாகிய வ நீதா பராக்கு

அம்பு விழி லாறு படை வீடா பராக்கு
அருண் கிருத்த காங்கய னன் னாடா பராக்கு
பண்பு யர்ந்த பட்டா லி யூரா பராக்கு
பரம சிவன்மலை யினின்ம யூரா பராக்கு

இதுவுமது.

அகவல்.

நீர்கொண்ட நதியும் தார்கொண்ட மதியுஞ்
சீர்கொண்ட பதியும் பேர்கொண்ட நிதியும்
மூவர் சந்நதியும் தேவர்தன் பதியும்
யாவர் சந்நதியும் பாவினன் துதியும்
மெய்த்தவர் குகையும் பத்தியின் வகையும்
சித்தர் மூலிகையும் முத்தி யம்பிகையும்
நிறைந்திடு மிடமும் நிறங்கொள் பொன்புடமும்
சிறந்த மின்னடமும் சிரந்தரு வடமும்
மிகுநாக மரமும் வெகுதேவ தாரமும்
மகிழ்கோவி தாரமும் தருமாவிந் தாரமும்
அரம்பையின் வளமும் நிரம்பிய பளமும்
மருக்கரு விளமும் குருந்து கூவிளமும்
கருமுகில் படியும் மருமலர்க் கொடியும்
குரவர்கள் குடியும் முரசதிர் துடியும்
விளைந்த செந்தினையும் குழம்பிய நனையும்
விளங்கு தண்சுனையும் இளங்குமர னையும்
தாங்கிய தலமும் மாங்கரு வலமும்
பூங்குயிற் குலமும் ஓங்கிய புலமும்
சூள்பல கலையான் நாள்பல துலையான்
வேள்நிலை குலையான் வாள்சிவ மலையான்
பொன்னினங் குரியான் அன்னமென் பரியான்
உன்னினுந் தெரியான் சென்னியங் கிரியான்
முதிர்வனஞ் செழிக்கும் மதுமலர் துளிக்கும்
கதிரலை கொழிக்கும் சதுர்மறை முழக்கும்
சார்பவர் குளிக்கும் பாகதி யளிக்கும்
இருவினை கழிக்கும் வரமது வளிக்கும்
வெண்சங்க முரும் பெண்சங்கஞ் சேரும்
கஞ்சங்க ளாரும் வஞ்சங்கள் தீரும்
மூழ்குவர் யார்க்கும் வாழ்வதுண் டாக்கும்



ஊழ்வினை தீர்க்கும் வேள்பகை நீக்கும்
தினவளம் படைக்குங் கனகுவடுடைக்கும்
மனுநிதகடக்கு மனநடை கிடக்கும்
மதிநிகள் பெருக்கு மதிதவ ரிருக்குஞ்
சுதிபயில் துறைக்குங் கதிர்வயல் படைக்கும்
வருணாகீள் பதியாந் தருணமா நதியாம்
கருணைவா ரிதியாம் பெருனை மாநதியான்
மாவகில் தென்னையும் வாழையும் புன்னையும்
பூவலர் கொன்னையும் புனற்சடை வன்னியும்
பலவு மந்தாரம் பனைகன் னிகாரம்
நலசம்பு வாரம் நாவல் விஸ்தாரம்
இனியபிப்பிலியும் இளகு செவ்வல்லியும்
கனகநெல்லியுங் கற்பகவல்லியும்
செண்பகநாகமுந் தேக்குபர் பூகமும்
விண்படர் சோகமும் விருக்கமாகமும்
நந்தி மாதவியும் நலம்பெறு மடவியி
லுந்திமே யருவியு முழுக்கிடக்குவியும்
பழமதுவுடைந்தே பலாசங்கலந்தே
பழனம தடைந்தே பயிருயிர் தழைந்தே
செந்நெல்கள் விளையுஞ் சிவந்திங்களையும்
பொன்னினங்களையும் பொழியுமும் மழையும்
பாங்குடன் பொழிந்து தேங்கிய புகழெலாம்
ஓங்கிய சிறந்த காங்கய நாடன்
சிகர கோபுரமுந் தெருவிருபுரமும்
அகர சிகரமு மன்னசத்திரமும்
மாடமாளிகையுங் கூடகோளகையும்
நீடுறுகனத் தாடுகொடியும்
அந்தணர் வேள்வியுஞ் செந்தமிழ்க்கல்வியும்
உந்திய குடிகள் உலவு சந்தடியும்
பூமலரோடையு மாமணிமேடையும்
பூமிநாடனும் காமனூர் கூடனும்

இட்டாது வானமு கட்டோடு சோலையின்
மட்டார்ந்து வாழ்ந்திடு பட்டாவிபூரன்
நிரந்தரவசுரர் சிரந்துணிபடவே
பரவியநடனத் துரகம பூரன்
கடகளிறுடையான் கடம்ப மாலிகையான்
அடையலர் வெருவ வதிருமும் முரசான்
மரகதகலாப மயூரகே தனத்தான்
திரிலோக மெங்குஞ் செலுத்து மாணையினான்
சங்கரி புதல்வன் கங்காலாகதன்
ஓங்காரன் றுணைவன் செங்கண்மால் மருமகன்
ஐந்தருநாக னயிராணி தனக்குஞ்
சொந்தமா மருகன் சுரர்கள் சேனாபதி
மலைராசன் பேரன் மதனன் மைத்துனன்
கலையுணர் புலவன் கருணைவாரியான்
பன்னிரு புயத்தான் மூன்றுக் கயத்தான்
சென்னியாறுளான் பொன்னை மீராறுளான்
சூரசங்காரன் குமார கம்பீரன்
வீரவாகுவுக்கு மெய்த்துணையானோன்
புராதனபரம புத்திர விசித்திரன்
சராசரமனைத்துந் தானெனி நின்றோன்
பூதப்படையான் புகழ்திருவுடையான்
சோதிச்சடையான் றுங்கன வானவன்
தேவர்கள் சூழ்கச் செகமெலாம் வாழ்கப்
பூவுலகெல்லாம் போற்றியே துதிக்க
அந்தர துந்துமி யநேக வாத்தியங்கள்
பந்தி பந்தியாய்ப் பற்பல முழங்க
அரம்பையர் நடன வாவைத்திரேய்க்க
சாங்குலித் தெரிசிர கவிஞர் கொண்டாட
அந்தணர வேத வாகமம் புகல
இந்திர லோகத்த மெனப்படை சூழப்
பார்புகழ் விரைப்பட்டாவி யூரில்
தேரின் மீதிவர்ந்து செயசெய வெனவே



தவமுனி சுரர்க ளெவருமே துதிக்கச்
சிவமலைக் குமரர் பவனிவந்தனரே.

---

## சிவமலைநாதர் பவனி வருதல்.

தரு இராகம். பயிரவி. அடதாளம்.

---

பல்லவி.

சாரி வந்தனர் தேரின் மீதினில்
மேருகிரிமேன் குமாரிமகனார்.

அநுபல்லவி.

சீருலாவிய தேவர் கணமமர்; வீரைநகர்த்திருவீதிதனிலே.

(சாரிவந்தனர்)

கவரியிரு புறங் கவின வீசிடத்
தவள சத்திரந் தயங்க மேவிட
உவமை சொல வொணு தோங்கு விபவமாய்ச்
சிவபிரா னம்மை சிந்தை மகிழவே

(சாரிவந்தனர்.)

அமரர் பெருக்கமும் அரிஞர் பெருக்கமும்
விமல முனிவரர் விளங்கு பெருக்கமும்.
கமல விருகரங் குவித்துக் கனிவொடு
அமல குகவென விழுவோர் நெருக்குறச்

(சாரிவந்தனர்.)

வேதவொலிமிக விளங்கு முழக்கமும்
வித்வ ஜனர் கவி விளம்பு முழக்கமும்
கீத விசைகொடு பாடி யாடிட
நாத வாத்திய முழக்க முழக்கவே.

(சாரிவந்தனர்.)

இன்மை யருணோனே ரிலகு திருமுக
வொளி விளங்கிட மகுடமழகுற
தளவவின தந்தமிலக மெய்பிலனி
பளபளென வருள் பொழியவே.

(சாரிவந்தனர்.)

தேவர் பூமழை சிறந்து பொழிந்திட
மூவர் நான் மறை முறைகள் மொழிந்திட
அவலோடடியார்கள் மகிழ்வொடு
சேவை கண்டவர் வினைகள் கழிந்திடச்

(சாரிவந்தனர்.)

கலிக்கூற்று.

விருத்தம்.

மயிலேறுங்குமரர் சிவாசல விசாகர் வரும்பவனிகாணவிக் குவலயத்து வாசந், கையிலேறு மலர்வாளி செங்கே னல்கக் காலேறுமாரனுக்கும் படையா மாதர், கயலேறும் விழிக்கணை யின் புருவவில்லைக் காட்டியே விரகதாகக்கலகமூட்டி, மயலேறு மலையாளை யிரண்டுங்கூட்டி வருகின்றார் சிலம்பின் முரசறை கின்றாரே.

## சிவமலைநாதர் பவனியைக்கண்டுபெண்கள் மோகங்கொள்ளல்.

கண்ணிகள் இராகம் பூரிகல்யாணி தாளம் ஆதி.

குறமானைக் குஞ்சரத்தின் வருமானைக் கலந்துவந்த
முருகேசனைக் கலந்துவரு மொருகோடி மடவார்.
மறையோனென் பாரிவனும் மறையோனென்றால் கரத்தில்
வச்சிர வடிவேலுடன் செஞ்சேவலுமேதென்பார்.

திருமாயனென்பார் திருமாயனென்றால் பன்னிரண்டு
திருநயனம் புயமுங்கைப் புஞ்செவிபுமே தென்பார்
இறையான வடுகன்லவீசனென்பா ரீசனென்றால்
ஏதாறு தலையவனுக் காறுதலை யென்பார்.

அமரேசரதி பதி யென்பரிந்திரனில் வென்னை
யமனைப்பல்லா ஸ்ரீமயில் அவனுக்கேதென்பார்
கமலன் முகத்தேறவ சொல்லாம் இருபாக்கும் வருகையினால்
கர்த்தனிவன் சிவமலைமுத்தையனே யென்பார்.



ஒருகையினிலிட்டவளை யொருகைக்கிட மறந்தே
உதறுவார் சிறிது பெண்கள் பதறுவார் மனங்கள்
வரி விழிக்கு மையெழுதி யொருவிழிக்குத் தொட்டமையு
மையுமாய் மனதினிற்பிர மையுமாய் வருவார்.

காலில்விடு முடையெனவே ரவிக்கைகயினைத் தொடுவார்
கச்செனவே யுடையை முலைக்கணியத் தலைப்படுவார்
சாலைநிறை வீதியினில் இல்லையோ பெண்களுக்காய்ச்
சல்லாப வசனமொன்று சொல்லாரோ வென்பார்.

சரசகுண மாதருக்கு விரகப்பிணிக் கொருமருந்து
தாராரோ திரும்பித்தான் பாராரோ வென்பார்.
இரவு பகலுஞ் சுகந்தன் மார்பதனிலே யழுந்தி
இணங்காமல் கைக்கொண்டு கழுந்தழுவே யென்பார்.

### மோகினி வருகிற விருத்தம்.

மாலினிய மருகர் சிவமலையான் முன்போய்
வயனகல நாணமுங் தோற்ற மடந்தையர்க்குள்
நாலின் மருங்கினி வயனி கலிணிப்பன்னி
நூபுரப்பாடகச் சரணி சசிசமானி
பாவினிய தேன்மொனி மெருளிகாசி
மாதுமினி சந்திரவதனி பசும்பொன்மேனி
சேகினிரு நயனி காருணிமானி
செயமால மோகினிசபையில் வந்தாளே

தருசேதார கௌளம் தாளம். ஆதி

பல்லவி.

சுகமால மோகினி சபையில் வந்தாள்.

அநுபல்லவி.

செகமோகன கலியாண சிவமலைக்காங்கய நாட்டில் (சுக)

கனக மோகனமாலை காதிற்கொந்தள வோலை
அனகன் சாஸ்திர சாலை யதிகபுண்ணியசாலை (சுக)
குரும்பைத்தனம் கிடம் சொக்கோகரமுக பாடம்
அரம்பையர்க் கிவள் விசேடம் ஆங்கனை மதன்குருபீடம் (சுக)

திருநுதல் பிறையை யலங்க ரேகைகள் பளபளென
கரவளைக் கங்கண மொலிக்கக் காலிற் சதங்கை கலகலெனச் (சுக)
கவரச் சாட்டிய பல்லாக்கை யேந்தார தொளம்பாடிச்
சிவமலைக் காக்கையனைக் கூடிச் சேர்ந்து விளையாட நாடிச் (சுக)

இதுவுமது.

இராகம் பயிரவி அடதாள சாப்பு.

சிந்து.

மலரு மினகுருகும் வாரிச்சொருகுங் கருங்குழலினாள்-அமிர்த
வாரியினிற் பிறந்த நாரியினுஞ்சிறந்த வெழிலினாள்.

எள்ளினம் பூசாகிக் கேற்றவர்ண முத்துத் தருக்கினாள்-பனி
விளம்பிறை நுதலிலே பொழுதுஞ் சிலைத்தொனி விளக்கினாள்

கலையைக்காட்டிமானொத் துறத்தி மருண்டசெண்டை விழியினாள்-சக்
காமப்பாலுக்கிசைந்த சீனிசர்க்கரைக் கண்டின் மொழியினாள்.

முல்லையரும்பை முருக்கை முத்தைப்பழித்த வரிசைப் பல்லினாள்-மரு
முனைவி விழிவண்டைக் கதாவின்மூடித்த புருவ வில்லினாள்.

திருத்த மியமுரு சிறந்த முகக்கமலப் போதினாள்-பசிய
செவ்வியமுறு சலாபமின்ப வள்ளையிலைக் காதினாள்.

இளங்கமுகினிலே எண்குரல் முழங்கிய சங்கக் கழுத்தினாள்-மார்பில்
வெள்ளருக்காணில் மணிவிமைச்சை கொளுந்திதுலே பொழுத்தினாள்.

கழையைத்துளைத்து முத்த மாலையினையணிந்த புயத்தினாள்-தினஞ்
சக்கிரக்கிறுக்கமேவி வரிச்சிருக்கு மிரண்டு குயத்தினாள்.

பங்கயச் செக்காந்தள் மலரைப்பழிக்குமிரு கரத்தினாள் மெத்தப்
பாவைப்பொருத்துங் கடைவாவிலேபோதுமு தரத்தினாள்.

கொங்கை யமுதை பெறாம் புன்னை வொழுகுங் கோமப் பந்தியாள்-சீரிந்த
குமிழி பெண்வு மிருக்கவ் விசைதயுங் குழிக்கு முந்தியாள்.

வர்ணச்சேலையை செவினைத்து இடுத்திய துடியிடையினாள்-இன்ப
மாரன் கொதுவீருக்குத் தேரின் தோரண வாழைத் துடையினாள்.



அனிச்சமலரிற் சிறு சதங்கை யணுங்கிய செம்பதத்தினாள் சொன்ன
வானவ சிவமலையான் மோகித்திருக்கும் விதத்தினாள்.

---

வாலமோகினி பந்தடித்தல்.

விருத்தம்.

ஐந்து பந்தோர் செப்பதற்குயாடிய சிவாசலத்திற்
கந்தவேள் பவனி நாடிக் கழுங்கொடும் பாவையாடி
வந்தடி பணியுமின்ப வாலமோகினிப் பொன்மாது
பந்தடி யாடியாடிப் பாவனைபயில் கின்றாளே.

சிந்து, இராகம். கமாசு, அடதாளம்.

பைங்குழல் வண்டு மதுமலருண்டு பறந்து பறந்தாட—வளர்
திங்கள் வதனத் திருவிழிவண்டு இரண்டு இரண்டாட [சுப
கொங்கை மருமல ரின்செண் டாண்டுக் குழைங்கையைச் சுற்றிட
மங்கை கலியாணி வாலமோகினி வண்ணப்பந்தடித்தனளே.

கொத்துமலர்த்தொங் கல்முடிதாச் சாங்கள் குலுங்கியசைந்தாட-வலம்
மத்தளதாள சங்கீதப் பிரபந்த பாதங்கள் பாட
கைத்தலக் கந்துகந் தொந்தொமென் றெதுகை கண்டுவப்பொட்டக்-கன
உத்தம சற்குண வாலமோகினி பொருகைப் பந்தாடினளே.

தங்கவளை கரகங்கண சேடைந்து சரிகரி டெண்டாடக்-காலிற்
தண்டைபரிபுரங் கொதுக சதங்கை கலீர் கலீரென்றாட
இங்கினியென்செய்வ தென்று மருங்கி னிழைதூக்குதழுந்தாட-பசுந்
தங்க வங்கமெனும் வாலமோகினி தையல் பந்தாடினளே.

ஞாலம் புகழும் பட்டாலிச் சிவமலை நன்னகர் வீதியிலே-மனை
நாடிய சேடியர் தங்களுடன்கூடி நயந்து விளையாடி
கோலா கலசல் லாபவுல்லாசக் குலாவி நடமாடி-திவ்விய
கோகநகமுக வாலமோகினி கூர்ந்துபந் தாடினளே.

இதுவுமது.

விருத்தம்.

நீர்க்குளம் வாவி கூப நிறைந்த பட்டாலியூரிற்
சீர்க்குண வால சத்தி சிவமலை வீதிதன்னில்
வார்க்குடமுலை பசப்ப வாலமோகினி பந்தாடல்
பார்க்க நாலாயிரங்கண் படைத்திலன் வேதன்றானே.

சுருட்டி இராகம். மோகனம் திரிபுடைதாளம்.

பல்லவி.

பந்தடித்தனளே—வாலமோகினி பித்தனை போலவே—
பந்தடித்தனளே,

அநுபல்லவி.

கொந்தலர் மலரின் குழல்களாடக் குழையிரண்டும் பொன்னூசலாட
சந்திரவதனை வேர்வையோடத் தகுந்தித் திகுந்தி தகுந்தித்தோமெனப்
(பந்தடித்தனளே)

முந்திய தோகைகள் தனிப் பிடியேதோகை தி
ருந்திய தோவெனச் சிந்தைசேர் தேவன்னைக்
கந்தனை மோகித்தடித்தடித்தாடிக்
கன்னியருடன் கூடிக்கூடிப் (பந்தடித்தனளே)

மகிமை தோளா முனிவர்தேவர்
வணங்கியே சிவமலையைப் பாடி
அருணா சாசு வாலமோகினி
தோதிந்தத் தோதிந்தத் தோதிந்தமென்னவே (பந்தடித்தனளே)

வாலமோகினி சிவமலை நாதரைக் காணுதல்.

விருத்தம்.

சிவமலை வீதிதன்னிற் செயவால மோகனாங்கி
கவமணிப் பந்தொன்றுடி காலுபந்தாட் கொண்டாடி
மவுனமாயனேக ரூப வடிவமாஞான யோக
சுவன சித்தரும் விந்தைக்காரனை நேர்கண்டாளே.

ஐயம்.

சுருட்டி இராகம். பியாகடை ஆதிதாளம்.

பல்லவி.

விந்தைக்காரரிவராரோ தானை

அநுபல்லவி.

கந்தசாமி யென்பவரோ (விந்தை)



சரணங்கள்.

கையினில் வடிவேலும், ஐயகொடிச் சேவலுஞ்
செய்யமாய் மின்னார் கண்டாற்றியங்கவே—முரு
கையர் பங்கினிற்குறக் கையல் குஞ்சரி யிருக்க
மையல் கொண்டென்னாடி மயக்கமா சும்மா

(விந்தைக்கார)

ஆறுமுகத்தருகு மார்பிற் சந்தனம் புனுகுந்
தேறல் மிகுந்தொழுகுஞ் செங்கடம்புங்—கன
மீறக்குங்கும மெய்யும் விண்ணவர்யார்க்கும் வரங்
கூறுங் குதலை மொழிக்குழந்தை யென்றேவந்த

(விந்தைக்கார)

வணிகனென்றே வனீபூட்டி வன்னியைச்சனி யிற்கூட்டி
பணிந்தே யவன்முன் விரகப்பாம்பாட்டி—இவர்
கனிசம்பார்க்கி லெங்கள் தனிசிவமலை யான்முன்போய்த்
துணிந்தென் சொக்கின் மயக்குஞ் சொலவைக்கா தென்னெட்டம்

(விந்தைக்கார)

தோழிமார் சொல்லைக்கேட்டு வாலமோகினி மோகங்கொள்ளுதல்.

அசுரர் விநாதன் கண்டாயமருல கதிபன் கண்டாய்
விசுதமா தேவர்க்கெல்லாம் வேலவரிவரே யென்றே
ஒசியிளாடையின் மாத சோதிய மதுர வின்ப
வசவால மோகனாங்கி மாதிவன் மயல் கொண்டாளே.

கண்ணிகள் இராகம். சங்கராபரணம். ஆதிதாளம்.

கண்ணிகள்.

மருவுமுக மலராறே—சமத்—வாரகடப்பமலராறே
மலர் விளங்கு செங்கேதகே கண்டிமதிமபக்க வந்தாறே
குளவும் வடிவேல் முருகுச்-சேவற்-கொடியழகின் வடிவும்
கலைகவிழிப் பெண்கள் மனதிருப்புங் கல்லுங்கரைந்துருகாதோ

உருகுதைபோ பரவசமாய் உடல்—ஒருவிதமாய் வருகுதைபோ
விரகமென்ப திதுதானோ-இந்த-விதமென்று தானறிந்தேனோ
சரிவளையு மிழந்தேனே-பெற்ற-தாய்சொல்லையு மிகழ்ந்தேனே
உரியபணி பூணேனே துவி யுறுதாக்கங்கொணேனே.

## கலிக்கூற்று.

விருத்தம்.

முருக்கின் புளிதரான் வாலமோகினி விசையுறிற்
திருச்சிவ மலைவை வேலர் தேரின்மேல் வந்தமென்மை
பெருக்குறன் பெதிர்போய்க்கண்டு பேதைதன் மனதின்மையல்
உருக்கவே மதிமயங்கி உடையவிழ்ந்தயர் கின்றாளே.

## தோழிமார் ஆலோசித்தல்

கண்ணிகள். இராகம். எதுகுலகாம்போதி. அடதாளம்.

வாலகை மோக மானாள் சோகமோனாள் பெத்த
வருந்தினாள் பூமியில் வீழ்ந்தாள் மயக்கமானாள்
மாலையணி பூணோமென்று மனதிலே நோனாள்—சிவ
மலைவேள்பவனிகண்டாள் மருண்டாள் மதனையுங்காணாள்

என்ன பெருமூச்சிவளுக் கென்னமாச் சென்பார்-மோகனை
ச்ந்திரமோ வேளாகமம் மந்திரமோ வென்பார்.
கன்னிசொலி வென்னிறெடுத்து மந்திரியென்பார்—மசக்கோ
ஸ்துப்பிசகோ பேயோ பித்தோ சொற்பிசகென்பார்.

கோடங்கி குறிகாரர்களைக் கேளுங்களென்பார்-அம்மை
கோயிலிலே வைத்துத் தெளித்துப் பாருங்களென்பார்.
கன்னியு டெல்லாருங்கையைக் கைகையைநெரிப்பார்—சந்தனம்
கஸ்தூரி குங்குமம் பன்னீர் கலந்து தெளிப்பார்.

ஐயோ தெய்வமே சதென்ன மாயமோ என்பார்—சிவமலை
ஆண்டவர் கண்பார்வை செய்த ஞாயமோ என்பார்.



## வாலமோகினியைப் பாங்கிமார் உபசரித்தல்.

விருத்தம்.

ஆய்ப முமனைத்தடாக மலைசந்திர விதிதோறுந்
தேன்பொழிளிறைந்து வாழ்வு சிறந்த பட்டாவிபுரில்
வான்பணி மாடத்தன்னில் வாலமோகனியைச் சேர்ந்து
மீன்பொரு விழியின்மாதர் வெதுப்புவார் குளிர்ச்சியாலே

கண்ணிகள். இராகம். ஆனந்தபயிரவி. ஆதிதாளம்.

சிந்து.

சந்தன களபம் புனுகுபூசிப் பன்னீராட்டுவார்-சுற்றியிருந்து
தையலர் விசிறிவீசிவிரகத் தீயை மூட்டுவார்
பந்துமுலை வியர்க்கவிதே முகம் வாடிதேயென்பார்-மணவிகுமலர்ப்
பாயலில் வளர்த்துந் தேசியிழையுடல் காயுதே யென்பார்.

தரள மணிகள் பொரிந்து செரிந்துக் குதிருதேயென்பார்-தேகமுந்தளை
தருகுதே யுலைமெழுகென மனதுருகுதே யென்பார்
பரசிவமலை முருகர் மகிழ்ந்த வாலமோகினி—ஒளிவிடுமுழுப்
பனிமதியனற் கினியவசனம் மொழிந்து கூறுவாள்.

## வாலமோகினி சந்திரனைப் பழித்தல்.

விருத்தம்.

சதுர்முகன்பூசை செய்யுஞ் சத்தி சிவாசலத்தின்
முதுமறை முதல்வை வேலர் முகமதியானுங்கண்டு
மதிமறந்தயர்ந்தேத தற்சன் மதியமக்கான தென்ன
விதமிது பிரமைதானோ விண்ணிலாவெண்ணிலாவே.

கண்ணிகள். இராகம். ஆகந்தபயிரவி. அடதாளசாப்பு.

கண்ணிகள்.

மனதொருவுனிய மதியெனவளர்த்துத்
தேய்மதாகி லவை மதியே—முழு
மதியமென்று வக்கலை குறைந்த வயனமும்பார்
கனக்கமுந் சம் மதியே

வெண்ணிலவென்பார் சிறந்த
மெல்லியர் நகைப்பதாம் வெண்ணிலவே—பட்சம்
விண்ணை வருண்டது மல்லாமல்
விழுங்கிய திராகுவது வெண்ணிலவே.

வீரபத்திரன் படுத்தியதாம்
விமலர் சடைப்பதித்தியதந் சந்திரனே குறைசன்
போராதோ பூரணமதனான்
மதிதிக்குச் சந்திரனே.

வெம்பிறையே மேலெல்லாம்
வெதும்பிறையேமதியினம் பிறையே. மதன்
அம்பிறைக்கும் வேளையிலே
யழுவிறைக்க மனதுவரும் பிறையே.

கலையே நீசான்முபவின் கூடா
கலையோர்தா எதிலும்வெட் கலையே—காம
கலையும் பலகலையும் நிலையுந்
தந்ததின்றான் குருநாயகம் போ க்கலையே.

சத்தி சிவமலையில் வாசர்
சனமுத மேவாயுதரென் பதியே—என்னைச்
சரசஞ்செய்து மருவிடுவான்
இரசென்ன செய்யுஞ் சொல்லுமி பதியே.

வாலமோகினி கடலை நிந்தித்தல்.

விருத்தம்.

கடகரி முகனைத்தந்த கன்னகன் அடிய சிவாத்திரிக்
கடவுளைக்கண்டேன் சிந்தை கலங்கிய பிரமையாலே
மடவனல் போலவெந்து வாடிய கோட்டியாலே
யுடல் பாவுக்கொண்டோசை யொலிக்கடலினை வைவாளே.

இராகம். புன்னாகவராளி. தாளம். ஆதி.

கண்ணிகள்.

மங்கையர் மேலெல் மொழியொலிப்ப தென்ன வாரியே-உண்ட
வகையினை மறந்தாயே மலைமுனி யுனைக்கையால் வாரியே
மகாமேரு கொண்டுமதன் வானவர் கடைந்ததை தேடியே-இரு
மங்கையாலங்கையின் மட்டுஞ்செய்த பந்தனத்தை தேடியே.



கன்னியரைலோர் வேலைகாட்டிய மாதர்கள் வேலையே சொல்வார்
காலையல்லா தொருகாலை யுனக்கில்லை வேலையே.
விழியம்பு ராசியர் காதலில் மம்புராசியே---செய்தால்
மெத்தவுதாசின மென்றுபுகல்வா ரம்புராசியே
சத்தி சிவாசல சண்முகர்தா னதிபதியே—சேர்ந்து
தயவு செய்வாரென சிந்தைநேக நதிபதியே.

வாலமோகினி தென்றலை நிந்தித்தல்.

விருத்தம்.

பாலெனச மென்னு மொழி நல்லமங்கை
பயின்ற சிவமலை முருகர் பவனியாலே
மாலெரதி மதன்பிடித்த குடைபோதாதோ
வாரிமுசு சதிர்வகையால் மயல்மீறதோ
சேலின் விழிமாதர்கள் மேற்கொடுமை போதோ
தென்பொதி யத்திரியிலே செழித்த தென்றற்
காலிரத மேபுலிபோல் வந்து தாவுங்
காரியமென் வீரியமென் கழறுவாயே.

இராகம் நவரோசு. அடதாளம்.

பல்லவி.

வந்து விதுமென் மங்க யாருதமே

அநுபல்லவி.

கொந்தலர் மணங்கொணர்ந்து-சந்தனப் பொதியத்திருந்து (வந்துவிது)

சரணங்கள்.

வசந்தமாய் வீசுறாய் வசந்தமாய்ப் பேசுறாய்
கசந்துமாத நேசுறாய் காலிலாவிலாக்கூசுறாய்
முரகின் வாரியி லிடமே முன்பிறந்து முன்சடமே
அருவமாகிய மடமென்—அக்குல் கருமேவு மாடிடமே
மெலியுடைவார்காய—வேல்கினை செய்யுஞ் சகாயம்
புலிபோல் தாவு மின்னாயம்-போகுமோவுன் சம்பிரதாயம்

புனைமொழிப் பணிப்பூதிய பரிமள மெய்யர்
சிவகிரி முருகையர் சேர்ந்தாளன்று லேவென் செய்ய
வந்தவிதமே.

## வாலமோகினி குயிலை நிந்தித்தல்.

கலிப்பா.

பூவின் மணம் பாலின் மணம் பொருந்திய சந்தனவரையின்
மேவியந்த புலிபோலே தாவியதென் றலைவிசுழ்ந்து
பாவிரதர் நிறைந்த சிவ மலைவாலமோகினியாள்
கூவு கருங் கோகிலத்தைக் கூர்ந்து மொழி கூறுவளே.

தரு. இராகம்—பூபாளம்—ஆதிதாளம்.

பல்லவி.

கோகிலமே தொனி கூவிறாமே விரக

அநுபல்லவி.

வியாகுல மன்மதனைத் தூண்டு—மாகுலமே (கோகிலமே)

சரணங்கள்.

என்றுமவி றெவியும் பெண்கள் சொல்லும் பழியும்
பண் புகலும் பழகுதல் முறையினும்
கோகிலமே.

உன்னிட திறங்காளம் என்றாலும் மதனின் காளம்
என்ன சொல்வேன் பூபாளம்—இல்லையுன் மனந்தயாளம்
கோகிலமே.

திங்களாலைத்தூவத் தென்றல் புலிபோல் தாவ
கங்கள் சிவமலையாறுவல்—சன்னி என்மனம் நோவ
கோகிலமே.

## வாலமோகினி மன்மதனைப் பழித்தல்.

விருத்தம்.

வித்தகர் சிவாசலத்தில் விளங்கிய குமாரதை
நத்தின வாலமோகனாங்கி பெண்ணருபமான
கைத்தலக் கரும்பு வில்லும் கணைமலர்களுங் கொண்டு
சித்தசா நெறியாய்த் தென்றற் றேரினில் வரக்கண்டாளே.



இராகம் ஆனந்தபைரவி ஆதிதாளம்.

பல்லவி.

பஞ்சபாணா நீ போசாமற் போடா—மோக.

அநுபல்லவி

வஞ்சியர்கள் விழிக்கண்டுத்தன் விரிவில்லுக்கு நாணல்லடா (பஞ்சபாணா)

சரணங்கள்.

நசுரன்மேற் பூச்சரங்கள் தூவி நீதான்
என்னபலன் கண்டாய் பாவி
இழந்துபோன வுடலை ருபி (பஞ்சபாணா)

கதிர்மதிவென் … குடையறவுந் துணைச்—சிறு
கன்னியமோ வெல்லுந் சேனை
கைவல்லிய போவிரு னாளை (பஞ்சபாணா)

அரைத்தேகிறு னென்றுதெரி யாது—நீயி
தரைக்காய் தேர் கொண்டு பகைக்க வாகாது
பெண்பழிபோ காது (பஞ்சபாணா.)

செல்வப் பட்டாபியிற் பால்வண்ணர் பாலன். சந்தி
சிவாமலையில் வேலன்-முன்பு
முன்பு செல்லடா (பஞ்சபாணா)

## பாங்கி வருதல்.

விருத்தம்.

மாங்கனிகள் மலர்கள் வாவைழந்த சந்தி
மருவு சிவமலைக் குகன் காங்கய நன்னாட்டிற்
கோங்கின் முகிழ்முலை யிரண்டுந் தாங்கி யேங்கிக்
கொடியென வொல்கிய மருங்கி குலவுத்தங்கி
தாங்கிடத் தோங்கியெனுந் சதியை நோக்கித்
தான்கா முழங்கிய சங்கித சாரங்கி
வாங்கி யிருகையில் வீணையயில் ஏந்தி
வசீகரங்கிப் பாங்கியிதோ வருகின்றளே.

இராகம். நாகவராளி. ஆதிதாளம்.

பல்லவி.

பாங்கி வந்தாளே வாலமோக
னாங்கிமுன் பிணிலே சிலகிரி.

அநுபல்லவி.

காங்கயன் சபைமிற் சனகபக்தி பாடிப் (பாங்கி)

சரணங்கள்.

வானுலகில் இலங்கு மின்னாரிடையிலொட்டி
யானைமுகன் பயப சென்ன மனத்தாசைத்
துணியங்கள் பின்ருலே
தொடர்ந்திரு கால்கள் பின்னப் (பாங்கி)

கொங்கைகள் இரண்டுங் குலுங்க—பின்னற் சொருக்கில்
குப்பி முத்துத்தொங்க லிலங்க—பூங்கயக்
செங்கை வளைகள் கிலுங்கச்
சிலம்புகல கலென்னப் (பாங்கி)

வாருடன் மலர்கள் சூடி—நடனமாடிக்
கோகிலம் போற் சுதி கூடி. சத்திசிவ
நாத வேலவரைத் தேடி
நாக வாளிகள் பாடிப் (பாங்கி)

வாலமோகினி தான்கொண்டவிரகத்தைப்பாங்கியுடன் சொல்லல்.

விருத்தம்.

விரதவர் விரம்பிய பட்டாலி யூரில்
மேவு சத்தி சிவ சைலவீதி தன்னில்
இரத மிசைக்குறமகள் குஞ்சரி சமேத
னெழுந்தருளும் பவனி கண்டு மதிமயங்கிக்
கரவளைகள் நெகிழ்ந்து குழல் சரிந்துவர்ணக்
கலை நெகிழ்ந்து காம வெறிதலைமேலேறிச்
சாசகுண சுகபால மோகனூக்கி
தன்விரகஞ் சகியுடனே சாற்றுவளே.

இராகம். புன்னாகவராளி. அடதாளம்.

கண்ணிகள்.

வின்னுலகாதிபர் சிவமலைபால் வீதி வாசை—காண
விண்ணவரறும் வயனமும் வீக்கமாய்ப் பாங்கி
கண்ணீராய் வருங் காதல நாடகத்தைக்கண்டேன்—மிகு
தண்ணீராய் வரு தென்னிரு கண்போரு தாதே.



தோகைமயிலின் மேல்முருகேசனைக் கண்டேன்—என்
ஆகமுருகி யனல் மெழுகானேனிப்போதே
வாகன வள்ளிமணாளனை வீதியிற் கண்டேன். என்
மோகன மாலையும் முத்தாரஞ்சிதற விட்டேனே.

குழந்தை வடிவாய்க் குமரர் வரவு கண்டேனே. முன்பு
குளிர்ந்த மதியுங் கொடுங்கனலாகக் கொண்டேனே
தெளிந்த மதிமுக மாறாய் வந்தாரை நான் பார்த்தேன். மதி
யிழந்து மருங்கில் கலைவீழ நாணமுந்தோற்றேன்.

பால்வண்ணர் பாலன் பரஞ்சுடர்ச் சோதிமுன் போனேன்—போயென்
மேனுங் கழுத்து வெறுத்தேனையோ பாலுந் தேனே.
மாலைகடம்ப மலரணியுந் திருமார்பும்—கையும்
வேலினழகுமென் விழியை விட்டகலாதே

சத்தி சிவாசலர் முத்தப்பர் முன்பு நான்போனேன்—மலர்
மெத்தைதனில் சித்திரையுஞ் சத்துருவாக்கிக்கொண்டேனே
பத்தர் பணிபட்டாலிச் சித்தரென்றே யறியேனே—திரும்பிப்
பார்த்த விடமெல்லாந் தோற்று தவரைப்போற்றுமே.

இதுவுமது.

கலிப்பா.

தாமே கமழ்க்கமலச் சந்தனம் பன்னீராடேன்
காவே னிசைபயிலேன் கைக்கிளியுந் தோற்றுவிட்டேன்
தேனூர் கடம்பணியுஞ் சிவமலையில் வேலர்பதன்
மானே அனைத்திடம் மனது சகியேனே.

இராகம். நீலாம்பரி. ஆதிதாளம்.

பல்லவி.

சகியே நானினி விரகதாபஞ் சகியேன்—அரை
நிமிஷம் சகியேன்.
மகிமைசேர் சிவமலையில் வளர்வடிவேலாயுதன் மீதிலாசை
சகியே.

சரணங்கள்.

சொருகும் குழலுஞ் சோருதே
ஜாதிமுந்தாமை மீறுதே
ஆரின்மதச்சல மீறுதே
ஆசைப் பேய்தலை கற்றுதே (சகியே)

அன்னை யென்னையலாச்சே
ஆசையாலென் வெட்கம் போச்சே
என்ன சொல்வேன் பெருமூச்சே
எண்ணி எண்ணி மனதும்புண்ணாச்சே (சகியே)

தாய் வயிற்றிற் பிறந்த சேதர்
தலைவியன் விருப்பிரகாரந்
சேய் சிவாசல சொன்னோரந்
சேர்த்திடச் செய்வாய் பகாரந் (சகியே)

வாலமோகினியைப் பாங்கி பழித்தல்.

விருத்தம்.

வணக்குழி வினம்போல் வந்த வாலமோகினிப்பெண்மாதே
உனக்கென்ன பிரமைதானோ உரைத்திடு வயணக் கோதாய்
புனக்குற வள்ளிக்காசை பூண்டுமுன் வேங்கைபென்ன
வனத்தினில் நின்றவர்க்கா மனத்தினில் மயல் கொண்டாயே.

வாலமோகினி சிவமலைநாதரைப் புகழ்ந்து பாங்கிக்குக்கூறல்.

இராகம். காம்போதி தாளம்.

கண்ணிகள்.

சத்தி சிவமலையான் சேதிமெத்த மெத்தவுண்டடியோ—மானே
சத்தியைக் கைபிடித்தவர்க் கெத்தனைபெண் மோகித்திடார் மானே.
உத்தம வரம்பையரும் கீர்த்த யிடுவார்கோவிலில் மானே
அத்தனைக்கண்டே ரிஷிகள் பத்தினிமார்கற் பழித்தார்மானே—யவர்.
பத்தர்களுந் தவிரத்தர்களு மாலைகொண்டார் மானே துரை
முத்தயன் பதத்தைநானோ நத்தினேன் சொல்மானே.



இதுவுமது.

விருத்தம்.

கொங்குமண் டலத்தினி லாறு நாட்டுக்
கோட்டமோராறுசிக்கேகோட்டை தன்னிற்
தங்கிய வெண்கிரி சுகிப்பாரிவண் டு நாண
தருமுயர் சோமசுந்தர பன்னிரண்டு.

மங்கை தந்தவாம [illegible]
மசொருமுள்ளனை திருக்கரங் கெய தன்னுடனே
விண்ணவர் சிவாசலா மீதாவை கொண்ட
பெண்ணியரில் சாரிருபெண்ணியல் கண்டாயே.

பாங்கி வாலமோகினியை மோகம் வினவுதல்.

விருத்தம்.

முத்தெனும் நகையாள் வாலமோகினி பசப்புவார்த்தை
மெத்தவும் படைத்துக்கொண்டாய் வேலர்மீதாசை பூண்டாய்
சக்தி சிவாத்திரி வாசர் தற்பரா நந்தருண்மேல்
நத்திடக்கரும் மேகத்தை நன்மை [illegible] யாயே.

வாலமோகினி பாங்கிக்கு வருந்திச்சொல்லுதல்.

இராகம். சங்கராபரணம். ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஏழிசையமுதுண்டு தான மிசைத்துப்பாடுவார்—என்னிருகையின்
வாள்விழியமுதுண்டு நயத்தில் மருவிக் கூடிடுவார்.
வானக மீனவன் கடலாமிர்த்தி வெப்புத்தீர்த்தவர்-மங்கையர் கொங்கை
மதயானையை யமுக்கிவிரக வெப்பைத் தீர்த்திலார்.

பாத்திரம் பொருளை யகத்தியர்க்குபதேசித்திடுவார்—மோகமந்திரப்
பாவையர்க்கு தேசித்தாத்தினை பேசித்திடுகிலார்.
அரிக்குமாரர்க்கும் பிரமனுக்குங்குரு முறைகாட்டுவார், அரிவையர்க்குமே
ஆசைக்காமக் குருவின்பமது முறைதனை காட்டிலார்.

பாவந்தீர்த்த பட்டாலிச்சிவ ஞானகுருவார்—ஆறெழுத்திருப்
படைவீட்டிலு மருவார்மதன் படையை மருவிலார்.

தேவகுஞ்சரி கைப்பிடித்தேவள்ளி காலேப்பிடித்தார்—இறைபார்த்து
சித்த மிரங்குவர்யார்க்கு மெனக்கிரங்கிலார் கண்ணே.

### வால மோகனுங்கிக்குப் பாங்கி புத்திசொல்லுதல்.

* விருத்தம்.

மின்னு செம்பொன் சிவாத்திரி வேலர் மீதாசைபூண்டு
சொன்னவர்க் கிரைக்கமில்லாத் துணிவு நீகற்றுக்கொண்டாய்
என்ன [illegible]
இன்னியுன் மனதினின்ப விச்சையை யியம்பிடாயே.

### வாலமோகினி பாங்கியைத்தூது அனுப்புதல்.

தரு. இராகம். சகானு ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லி வருகுவாய் மாதே. மாதே
நீதானிப் போதே.

அநுபல்லவி.

செல்வச் சிவமலையான்ம இக்கத்
தேவர்சபை ரஞ் சிக்கச் (சொல்லி)

சரணங்கள்.

கண்ணில் நித்திரையும்வ ராதே—அவரையாரும்
காயக்கஞ் செய்யவுந்தீ ராதே—இரவுபகல்
எண்ணிமனம் புண்ணுய் நோகுதே. அரைசாமிக்
கெந்த விதத்திலும் பஞ்ச தந்திரவிதத்திலுஞ்
சொல்லி.

என்னடி. ஆசைக்கு ரோசம் இல்லைப்பெண் ஜன்மம்
எப்பதவும் பிர யாசம் இதவயணம்
அன்னையபிதா லும் மோசம் என்மேல்மன
தந்திரங்க ளிக வசமாகவே மோகவிசேஷம்.
சொல்லி.

வாரோமென்றுர் சபதின மின்றே—வருவாரென்று
வாங்கி வந்தாலும் நன்றே—பட்டாலியூரில்



ஆர்துணையுண் ருகா வென்றே—இளமும்வள்ளி
ஆறுமுகன் பாதத்துக்கு நாடிசலாஞ் செய்தாளென்றே
சொல்லி.

### வாலமோகினி சிவமலைநாதர் சமயத்தைப் பாங்கிக்குச்சொல்லல்.

விருத்தம்.

அவ்வேளைக்காய்ந்த பால் வண்ணநாதர்
அருள்வேளைக் காணவெண்ணு அமரர்கூட்டம்
எவ்வேளையிந்த முனிவர் சித்தர்சங்க
மிடைநீக்க மில்லாமலிருக்கும்வேளை
மூவ்வேளையிறுஞ் சிவமாமலையில் வந்து
மும்மூர்த்திகளும் பூசைமுடிக்கும் வேளை
செவ்வேளைக் காண்பதற்கு நல்லவேளை
செவ்வேளை யிவ்வேளை தெரிசிப்பாயே.

இராகம்-புன்னுகவராளி. அடதாளசாபு.

கண்ணிகள்.

சத்திசிவ மலையார்க்கு நித்திய மாறுகாலம்
ஸ்தபன சிவருத்ரகும்பாவபிஷேகஞ் சகியே
சத்திலிங்கபூசை யிருபத்தெட்டாகம மந்திர
ஷடாக்ஷரவுருச் செய்வ ராதிசைவ மறையோர் சகியே.

மெத்த மறையோர்கள் வந்து வேத சதிமுழங்கும்
வேதாந்தமுஞ் சித்தாந்தமு மிகவிளங்குஞ் சகியே
உத்தம காசிபரிஷிபூ சித்த முருகேச
ருத்தமபட்டன் பூசையிலாகத்திருப்பார் சகியே.

கோல கலாபமயில் லோலனுங்குற வள்ளி
குஞ்சரியுங் கணப்பிரியாள் கொலுவிருப்பாள் சகியே
வேலோர்க்குக் கந்தனைத்தஞ் சந்தனத்தின் குழம்பும்
வில்வக்குழம்புங் கரும்பின்பாலும் விபூதியுஞ் சகியே.

பாலாறும் நெய்யாறுந் தேன்பழஞ் சர்க்கரையும்
பலவின் கனி மாங்கனிபல் பழமினநீர் சகியே

மேளதாள தீபதூப சோடசவுப சாரம்
மிகமேவ நிற்காமல் நடக்குமடி சகியே.
மத்தமதி சூடியபால் வண்ணர் திருப்பட்டாளி
மாநகர் காசிமேகாத்திரன் பழனியப்பன் சகியே
புத்திரர்கள் கிப்பண்டிதர் பூசைபுரிசையதும்
பொற்பணியலங்காரஞ் செய்வான் சிதம்பரமையன் சகியே
சுத்த வன்னம் முதலான கைங்கர்யமனைத்துஞ் செய்வான்
சுவாமிக்கண்ண சுத்திரத்தின் வள்ளியப்பன் சகியே.
பத்திமுள்ள காயப்பனைக் கட்டளைதாரதிபமும்
பார்த்துக்கொண்டெ கண்டையன் காத்திருப்பான் சகியே.
நித்தியபடி பருவதிதிமா தப்பிறப்பமாவாசை
சேம சோமவாரஞ் சஷ்டி வாரதினமுஞ் சகியே
முத்தயற்கும் குறவள்ளிக்குந் தைப்பூசத்திருநாள்
முகூர்த்தமொரு பத்துநாளுந் மணக்கோலஞ் சகியே
காட்டுக்கனைக்கும் பட்டாளிகர் மாண்டவியகோத்திரன்
கனிமார்பன் நாத்தயன்கொலு பாலன்வருவான் சகியே
பூட்டு பணியாபரணம் பொன்சரநவரத்தினம்
பூசனை விசேஷதினம் புனையும்வகை சகியே.
சித்தர்களும் யோகிகளும் சித்திபெற யதீசர்
சிவி வேண்டிமலை சுற்றியு மேவியிருப்பார் சகியே
பத்தினிப் பெண்சடைச்சியம்மாள் பதினெட்டெனும் புராணப்
படிபதினெட்டாம் படியினிற் குடியிருப்பாள் சகியே.
இம்முடிக் குமார காங்கேய மன்றுடி ராசன்
இருவேளை யுத்தரிப்பாரதனை முருகவேள்சர் சகியே
உண்மையுள்ள மணிஜய ஆண்டகலதம்பிச் சர்க்கரை
உத்தமக் காமிண்ட மன்றாடியார் கண்டகப்படி சகியே
தன்மதுரை சிங்கச்சிதம் பரப் பல்லவராயன்
சந்தி திரி சந்திமிலும் வந்துபணிவார் சகியே
செம்மைத்திருக் காங்கேய நன்னாட்டார்வந்து கூட்டம்
தெப்பக்குளத்திற் கந்தர்க்குப் பூந்தோட்டஞ் சகியே



சந்திரமுகமாமின் கூடவிர்த்தருத் தரிசிப்பார்
சம்பந்த சுகாசிரவர் சாந்துக்கட்டளை சகியே
அந்தி பகல் வண்ணிகட்டுவன் சந்திப்பரி சனங்கள்
அநேக வாத்திய கீதகீர்த்த நாடகிப்பார் சகியே.
கந்தர் பன்னியரைற்யில்வள்ளி குஞ்சரியைக் கலந்தே
காவிரிப்பதிருக்கோயில் புகுமேகாந்த சயனஞ் சகியே
அந்தவேளையி லவருடனே எந்தன் மாலைசொல்லி
அவர் கடம்பமாலை வாங்கிவருவாய் பெண்ணே.

பாங்கிமாலமோகினியைத் தேற்றுதல.

விருத்தம்.

சந்தி சிவமலை முருகர் மையலாலே
தயங்கிய பெண்பால சுகமோகனுத்தி
சிந்துறு மெரழிகனலே யுருகல்தண்டு
சித்தமதில் பாங்கியவள் மனைதத்தேற்றி
பத்துவகையாகவுமே ஆறுதைத்துப்
பரவசமாய் வனையுன்னை வசமேசெய்வேன்
மெத்தவுங் கோபமும் வருந்த வேண்டாமென்று
விண்டுவாள் வீதனமெல்லாந் தன்றுவாளே.

இராகம், தோடி. தாளம். ஆதி.

பல்லவி.

மானே வருந்தவும் வேண்டாஞ் சொன்னேனே நானே

அநுபல்லவி.

தேனூர் கடம்பணியுஞ் சிவமலைக் காங்கேயர் வருவார் (மானே)
சாந்திரமோ காமகலை மந்திரமோ இந்திரஜாலத்
தந்திரமோ அவருடைய
சிந்தனைய அறிகுவாரோன் (மானே)
போக்கியமு மதிக சௌக்கியமும் சகல சௌ
பாக்கிய மென்மேலும் வரும் பஞ்சாக்ஷ——
மானே.

தெய்வபல முனைக்குன்றி சேடிய ரெல்லாருங்கொண்டு
செய்கலரு வார்திரண்டு சிந்தைதனின் மகிழ்ந்துகொண்டு.
மானே.

தோத்திரக்கள் செல்வி நல்ல பாத்திரமிவளென்றனைய
மூர்த்திமை அழைத்துவாரேன் பார்த்திடு சாமார்த்தியந்தனை
மானே.

பாலுந் தேனுங் கலந்தாப்போல-பட்டாலிச் சிவமலையில்
வேலரையநேகவிதமாய் வேண்டிக்கூட்டித் தருகின்றேன்
மானே.

வாலமோகினி * கூடலிழைத்தல்.

கொச்சகம்.

கொங்கை மெட்டியாருங் குமர காங்கெய நாட்டிற்
பொங்கிய பட்டாலிப்பூதர சிவசைலத்தில்
கங்கை சுதன் குகனை கண்டசுகவால
மங்கையிரதி மதனைநிகரானளே.

இராகம். சங்கராபரணம். தாளம் ஆதி.

சிந்து.

ஆரணப்பொரு ளாகிய நாயகர் ஆகம மந்திரமோகனநாயகர்
ஐந்தருவிநுவங் கதிபதிநாயகர் அமரர்கள் பரவுங் [வர்
கூரயில் வடிவேலினைப்பிடித்தவர் கொடியகிரவுஞ்சகிரியினைத் துளைத்த
குகசிவ கிரியினர் கூடுவாரெனிற் கூடலே கூடாயோ.

அஞ்செழுமெழுத் தாமெழுத்தானவர் ஆதிபரை கங்கைபாலகரானவர்
அரியயாபிரம குருவடிவானவர் ஆறிருகரத்தர்
குஞ்சரி வள்ளியை நேசித்தநாயகர் குறுமுனிக்குப தேசித்தநாயகர்
குகசிவ கிரியினர் கூடுவாரெனிற் கூடலே கூடாயோ.

---

* கூடலிழைத்தலாவது:—விரகங்கொண்ட பெண்கள் பூமியில் மணலைப்பரப்பி, கண்களை மூடிக்கொண்டு தம்முடைய நான்கு விரல்களையுமடக்கிச் சுட்டுவிரலால் வட்டமாகக்கீறி, கீறும்போது ஊன்றிய இடத்தில் சுட்டுவிரல் நுனிவந்து பொருந்தியதாவென்று பார்த்தால், அங்ஙனம் பொருந்துவது நாயகன் வருவானென்பதற்கும், பொருந்தாதது வரமாட்டானென்பதற்கும் அறிந்துகொள்ளுங்குறி.



குறிசொல்லுங் குறத்தி வருதல்.

விருத்தம்.

அறிவுவகை குணக்குறி முன்னுமைப்பூத
வாதாரக்குறியாறு மடுத்தாய்ச் சேர்க்கும்
உறிவகைக்குப் பன்னிருகாற் குறிகாணென்றே
உற்றகுறி மற்றகுறி யுரைப்பேனென்று
வெறிவகைக்கு மருந்துமூலிகை யநேக
மேலான சிவமலை முத்தயர் விசேடக்
குறிவகைகள் வாலமோகனிக்குச் சொல்லக்
குறவஞ்சி குறவஞ்சி வருகின்றாளே.

இதுவுமது ஆசிரியப்பா.

சீருமொ னுந்திரு வேரகமுமலை
மாவினன் குடியுமேவு செந்தூரும்
வெளிறலை வாயும் பழமுதிர் சோலையும்
திருப்பரங்குன்றுமா பொருப்பெலாமன்றது
ளோர்க்கறு வீட்டினிற் காங்கெய நாட்டிற்
கூந்தளிற் சொருக்குங் காந்தியின் பெருக்குந்
திருநுதற்பொட்டும் வரிவிழிச்சி மிட்டும்
தொழிற்கொரு பகட்டும் மொழிக்கொருயிரட்டும்
சடையணம் பழக விடைகுழைத்திழக
வார்முலையருகு மார்பினிற் குருந்து
தாங்கிய தொட்டியுங் கரங்களிற் சட்டியு
மிடைக்குயா ரடையும் பிடுக்கியகூடையு
மஞ்சளின் வரைடயுஞ் சந்திரக்கரடையுஞ்
செங்கை மாவிளையு மெச்சு மூலிகையும்
கனகுன்றிமணியும் புனையக்குமணியும்
மனுக்கிய அறுக்கும் பதுக்கிய பிறுக்கும்
பசபசிய பசிலு மிசைக்குனர்சியில்
பயிரிவிபாடி பொரியில் நடமாடு
பேர்த்திறையாருந் திடனை நோக்கி
வாட்டு அரடவர்க்கு வலதுனையாத்து
சேந்திரத்தாருங் குந்திரத்தறும்

பார்த்திடக்கையின் மாத்திரைக்கோலும்
பிணிவகை தீர்க்கக் கனிகுழிபார்க்க
அடிக்கடி மெட்டு உமிக்கையைக்கொட்டி
மெய்க்குறி வெல்லக் கைக்குறி சொல்ல
உலகெலாக் குறிக்கக் கல்விமேலோர் மதிக்க
எக்குறிப்புடன் முன் சக்கரத்திரின் மயல்
வெறியெனத் தெரிக்கக் குறவனைப்பிரிந்து
மின்சிவமலைக்குற வஞ்சிவந்தனளே.

தரு. இராகம் சௌராஷ்டிரம். தாளம், ஆதி.

பல்லவி.

வஞ்சி வந்தாள் சிவமலைக்குற
வஞ்சிவந்தாள்.

அநுபல்லவி.

பஞ்சின் மெல்லடியின் சதங்கை
மிஞ்சக் கிண்கிணி முழங்கவே
குஞ்சரி வள்ளியைப் மஞ்சலிகள் செய்த
நெஞ்சகனை முருகன் சிவமலைக்குற (வஞ்சி)

சரணங்கள்.

பஞ்சவர்ணத்துகிலுஞ் செஞ்சங்குறப் பாசிலாம்
பாப்பிளாறையும் செல்லவே
செஞ்சி தஞ்சைநகர் மதுரை மைசூர்
டில்லிவரையுங் குறி சொல்லியே குற (வஞ்சி)

அஞ்சன மைத்திலக மோகனத் தழிலும்
அட்டவசிக முலிகை கட்டியே
மஞ்சளை மார்பிற்கட்டி மாத்திரைக் கோலைக்காட்டி
வள்ளிக்குறவனைத் தேடியே குற (வஞ்சி)

வாடையுமன்மதாதி காடையுங் குன்றின்மணி
மேடையுந்தனியிற் குறக் கூடையுமாய்
பேடையனக்குலை மோனடையின் மாசுத
மேடையுயர் சாங்கிய நடையுமுடைய குற (வஞ்சி)



ஆடகக் கங்கணமுஞ் சூடகமுஞ்சரியு
அக்குமணிவடமு மமுர்த கொங்கைக்கூடமும்
வேடுவர் குலத்தொழில் விசேடமு மவர்க்குப்
பாடமுந்தமிழி னுடைகஞ்செய் குற (வஞ்சி)

உவமையிலாமப்பயர் பின்னுருவதியென் கையினோ
அவனுஞ் சமைதசொல்ல இவள் கனிசம்
அவனியெங்கணுஞ் சுற்றி யம்மே யம்மே யென்றெற்றி
நவநிதி சூழ்பட்டாவி நன்னகர்க்குறிய குற (வஞ்சி)

பவளவித பூரச திவலையென வெறுங்
கவிழ விரகர் மனத்தவிழ இடையவள
மவுன முனிவர்க்கென்று கவனகுளிகை கொண்டு
புவனம் பரவுந் தவ சிவமலைக்குரிய குற (வஞ்சி)

கலிக்கூற்று.

கொச்சகம்.

அகில் கமழுந் தென்னைபலா வாழை மந்தாரமுமாய்
பகலவனை வெயின் மறைக்கும் பட்டணமோர் நகரில்
முகிலனைய குழல்வாலை மோகினி முன் குறமாது
மகிமையுள சிவமலையான் வாசல்வந்து சொல்லுவளே.

இராகம், சங்கராபரணம் அடதாளம்.

ஐந்தருவின் பந்தலின செங்கதலி[illegible]

பலக்காரித் தேவதிற்
சந்திர சந்ததிய மந்தி பகலுக்
தபனனுந்தா னிருசுடர் விளங்க
சுந்தரஞ்சேர் குறவள்ளி குஞ்சரிக்குஞ்
சோபனஞ்செய் வாசலிது அம்மே.
மந்திரசைவா கமவேதாந்த
மறைமுழக்கும் வாசலிது அம்மே.
சந்தனம் பன்னீர் குங்குமங்கமழ்ந்து
தான் தெளிக்கும் வாசலிது அம்மே.
மந்திர சைவாகமவேதாந்த
மறைமுழக்கும் வாசலிது அம்மே.

நீர்பரவும் மாமுனிவோர்களர் நிறைந்து நிற்கும் வாசலிது அம்மே
பேர்பெறுஞ் சதுமுகத்தோன் வந்து பெருமைபெற்ற வாசலிது அம்மே
இந்திரனுஞ் சசியும் வந்தேதினமும் இறைஞ்சி நிற்கும் வாசலிது அம்மே
அந்திபக லோகத்த நடக்க வாடி நிற்கும் வாசலிது அம்மே.

வேதியரும் மாதிசைவரும் வாங்கன் வேண்டிநிற்கும் வாசலிது அம்மே
ஆதிபரமேசர்க்கு மந்த்ர மருள்புரியும் வாசலிது அம்மே
தீரவை வீருமேறுதி செய்துநிற்கும் வாசலிது அம்மே
நாரியரும் அரம்பையரும் தினமும் நடம்புரியும் வாசலிது அம்மே

பூரணரும் ஆசமுங்கறிந்தே அன்பர் நிற்கும் வாசலிது அம்மே.
காரணமா புலவர்கள் மெய்த்தமிழைக் கனிந்து சொலும்வாசலிது அம்மே
நக்கீரர் தமிழுரைத்தேயிக நலம் பெறும் வாசலிது அம்மே
பொற்புடனே அருணகிரி திருப்புகழ்படிக்கும் வாசலிது அம்மே

வாந்தவினை வல்வினை யகற்றவிர்த்து வாழ்வுதரும் வாசலிது அம்மே
அத்தமுள்ள தோனைகமலில் நடனமாடி நிற்கும் வாசலிது அம்மே.
அம்பிகையுமக்கனரு மந்திலைக் கருணைசெய்யும் வாசலிது அம்மே
கொம்பனையாள் குறவள்ளிக்கே மணக்கோலஞ்செய்யும் வாசலிது அம்மே

அத்தர் தந்தமி பெரிலைப்பல வதிர்ந்து நிற்கும் வாசலிது அம்மே
வித்தையுள்ள ஐங்கருவித்தொனி மிகமுழங்கும் வாசலிது அம்மே
மானமுள்ள வாசலிது அபிமானமுள்ள வாசலிது வம்மே
ஞானமுள்ள வாசலிது சுவர்க்கமுள்ள வாசலிது வம்மே.

சித்திரையிலே நினைத்து வந்தெல்லாஞ் செய்புத்திரு வாசலிது வம்மே
மைத்துனிலே பெண்டிர்க்குச் செல்வமகவு தரும் வாசலிது வம்மே
கங்கைகுல புமன்னர் முதலரும் காங்கயன் முட்டா செல்வோரும்
கொங்கு மண்டலாதிபரையுமை யொன்றாய்க் கூட்டி வைக்கும்வாசலிது வ
காவலர்க்கும் காவலர்க்குஞ் செல்வக் காட்சிதரும் வாசலிது வம்மே [ம்மே
ஏவலரும் போற்றிசெய் சிவமலை முருகர் மனைவாசலிது வம்மே
தேவர்கள் பெரன் பூமாரிமாரிதி நிலைப்பொழியும் வாசலிது வம்மே.
சேவற்கொடியாடிநிற்குஞ் சத்தி வேலையான் வாசலிது அம்மே.

வாலமோகினி குறத்தியை மலைவளங்கேட்டல்,

விருத்தம்.

வாகிலை மோகன் வாசல் வாழ்த்திய குறப்பெண்மாதே
பரிவுடனொப் இவினைப்பட்டாளி மோகனங்கி



யுரிய சந்தோஷவார்த்தை யுரைத்தது சரிகேகண்ட
வரைகிரி பர்வதங்கள் மலையெலாம் வழுத்துவாயே.

குறத்தி மோகனங்கிக்கு மலைவளங்கூறல்.

இராகம், தோடி. தாளம் ஆதி.

கண்ணிகள்.

மேருகிரிவளை பட்டபின் கடைப்பட்ட தெனவிடுத்தோம்
மேலான் குருவனுக்குச் சீதனமாய்க் கொடுத்தோம்
வேருடனேகைலாச மெடுபட்ட தெனப்பழித்தோம்
விமலர்க்குக் குடியிருக்க வில்லெனவே அளித்தோம்.

காருலவு மிமயகிரியிற் கன்னிகைபார்வதிப் பிறப்புங்
கண்டறிந்து கொண்டோமதி லென்றும் பனியிருப்புந்
தாருலவுங் கேதாரப் பொருப்பிற்பிறப்பிறப்புந்
தாரணியிற் பெரியோர்க்குண்டு கைலாசவாசப்பிறப்பும்.

தானறிவேன் கிரவுஞ்சகிரி முனிசாபத்தினாலே
தாருகனுக்கரணாகிப் பொடிப்பட்டது பின்பினிலே
நானறிவேன் மைந்தகிரி மிதிபட்டமலை யம்மேமை
நாககிரி கீர்ணிலே பதிப்பட்டமலை யம்மே

வானுலவுங் கோவர்த்தனங் குடைப்பட்டமலை யம்மே
வள்ளிக்காகக் கொடுத்திருந்த வெள்ளிமலை யம்மே
பாலிரத முருகனாப்படி பட்டமலை யம்மே
பரிவுள பூச்சக்கிரவாளம் வளைப்பட்டமலை யம்மே.

அஷ்டகிரி வடமலைக்குட் பட்டமலையம்மே
அருணகிரியனற் கொழுந்தாய் விட்டமலையம்மே
கொட்டிய காவேரிநதியை முடித்தமலையம்மே
குறுமுனிகையிற் பிடிபட்டமலை கொடுமுடிமலையம்மே

மட்டிலையும் தந்தகிரி காகமுனாகாத
மலைவிந்தோ மலைபோலே மதிப்பதாங்களம்மே
திட்டமுடைய திரிசிராமலை அரயின்மாமன் மலையோ
திருவேங்கடமெங்கள் கொழுநன் மாமன்மலை யம்மே.

சாமிமலை எனக்குச்சொந்த மாமன் குருவின்மலையே
தருவளதென்பழனிமலையென் கொழுநன்மலை யம்மே
கோயமலை முனிபொதியத் திருத்தவ குருவினமலை யம்மே
குற்றாலங் காளத்திரி கூடன்மலை யம்மே.

சேமமுனிவர்வசாக கிரியரன்மலை நீலகிரி
கேரான கொல்லிமலை சேரன்மலையம்மே
சோணகிரி நாமகிரி சங்ககிரி நாககிரி
கோணமலை - காளிமலை வாணிமலையம்மே

பத்தர்பணி விருத்தகிரி பழமலை இழமலையே
பவளமலை அவளமலை கவலைமலையம்மே
சித்தர்கிரி கொங்கனார் குறுநாவைத்து நியமலையே
திருக்கழுக்குன்ற மெங்கள் தந்தைகுருக்களுக்குற்றமலையே

வைத்தருடிமிரமலை ஆரவிமலை சொலமலை
மந்தரகிரி எங்கள்சிறு தந்தையார்மலை யம்மே
முத்திதருபரங் குன்றத்திலின்றிரு மாலிக்கும்
முருகருக்குங் கலியாணமுகூர்த்தஞ் செய்யுமலையே.

கொங்கிற் குன்று தோருடனிற் காக்கெய தன்னூட்டிற்
குலவும் வட்டமலைகலை தேர் புலவன்மலை யம்மே
எங்குடும்பர் பச்சைமலை புஷ்பகிரி யம்மே
எனக்கு முத்தாம்மன்னையார்மலை ரத்தமலை யம்மே.

மங்கை திருமணகிரியம் எங்களண்ணன் மலையே
வண்ணமிகுஞ் சென்னிமலை பண்ணன்மலை யம்மே
மங்கள சிவசத்திமலை யெங்கள் சொந்தமலையே
வழிவழி நாமலைமுறையாக வாழ்வது சிவமலையே.

நாங்களொரு குலத்தினிலே பெண்ணுங்கொடோம் கொள்ளோம்
நம்பியவேரைச் சதிபோம் நாயந்தப்பில் மதிப்போம்
தேன்கலந்த தினைமாவுங் கொழுநனுண்ணு முன்னம்
தின்றேமொரு தானியமை பச்சிலையுமன்றேம்.

ஒன்றுதினைப்புனங்காப்போ மெங்கள் குறக்குலத்தில்
ஒருகொடிக்காய் மாமனுரிமைக்குப் பெண்கொடுப்போம்
பாங்குடைய மலைகளெல்லாம் முருகர்க்காச்சி கொடுத்தோம்
பரமசிவன் மலையிலெங்கள் பரம்பரைகுடி யம்மே.



கவிக்கூற்று விருத்தம்.

உவமலை முலை கமக்கே யொசிக்கோசிச் திசைகளாட
நவமணியாலை தாங்கிடைஞ்செயுந்தாய் பெண்மாதே
தவமலை வளமேகம் சாற்றுதல் தன்றேயுகள்
சிவமலை பதிசயங்கள் செப்பெனச் செப்புவாளே.

மோகனவல்லிக்குக் குறத்தி சிவமலையதிசயங் கூறுதல்.

தரு. இராகம். கேதாரகௌளம். தாளம். ஆதி.

சிவமலையி னதிசியங்கள் சொல்லப்பலன்
சித்தியுண்டு சத்தியமலையே
மவுனமுனிகள் ரிஷிகள் ஜனங்கள் அமரர்கள்
வந்திருந்து செய்யுமலையே

தேனருவி பருவி சொரிக்
வானரங்கள் களிக்
கானவர்கள் குடியுந்தனை தினை விளைய
வானம் வந்து படிமலையே.

சந்தனஞ் சண்பகந் கொங்கிலவும்
மந்தாரம் நிறைந்த மலையே
பைந்தருச்செங்கதலி மா
சிந்தி விளைந்திடு மலையே

மாங்கனி பந்தடிக்கு மந்தி பலவின்கனியை
மத்தளமென்றடித்து நடிக்கும் மலையே
தூங்குவண்டு தேம்படிக்குந் தாண்மலர்
சூரியகாந்தம் வெடிக்குமலையே

சதுரயுகங்கள் கிழமையாய்க் கண்டமலை
சஞ்சீவி கொண்டமலையே
பதுமன் மாவிந்திரன் சித்தர்கள்
பணிந்து நிற்கும் வாசலிது அம்மே.

அதிகமான பசும் பொன்வெள்ளி
அரவைச் செம்பும் சலவடிவமான மலையே
மணமாங்கனிகள் மலர் சுரைந்தலை நாகமும்
வளைந்துழைக்கக் காட்சிமலையே.

கண்டதுண்டமான வுறுப்பும் பொருத்துஞ் சல்லிய
 கரணிகளுண்டெங்கள் மலையே
பண்டுள கிழவராகத் தி யிளமையாகப்
 பான்மரமுண்டெங்கள் மலையே.
தைத்த வத்திரத் தின்றனைக்கே கழந்தெழுந்த
 சந்தான கரணிமலையே
மெத்தவாள் தழும்பு தீர்க்குஞ் சல்லியகரணி
 மெய்யான தெங்கள் மலையே.
அஞ்சுகங்கள் கொஞ்சமொழியு மாங்குயிலிசையு
 மரிவையர்கள் விளங்குங்கிளியும்
மிஞ்சியதேன் மொழியும் வனமுமணமலர்
 மிக்கவுள்ள தெங்கள் மலையே.
மாதர்விழி வலையை வலைப்பார் கண்டதனை
 மாதவருமனது கலைப்பார்
ஆதுகள் மேலும் விளைப்பார் மனங்குழைப்பார்
 தோகையர் காப்பெங்கள் மலையே.
கரியமதயானை யிலக்கக் கரடி சிங்கங்கள்
 வெருவியொரு காதம்விலக
அரிய குழுவை வேங்கை வணங்க
 அதிசயமாயொரு கொடியுண்டெங்கள்மலையே
தக்கோலமேலம் லவங்கம் சாதிப்பெருங்காயம்
 கற்பூரமிஞ்சி மஞ்சள்
விற்போரும் வந்து விளைந்திழுக்கு வகை
 மெய்யானதெங்கள் மலையே.
கையாத எட்டிக்கனியு மானிடர்கள்
 காணுமல் மறைந்தானையும்
மெய்யான ரத்தக்கனியும் பொன்முன்னியும்
 விளைவுண்டெங்கள் மலையே.
கல்லானை மதுர கவிதைபடித்தாக்கச்
 சொல்லானைக் கொம்புண்டம்மே



அல்லான இருளும் பகலையாக்குஞ் சோதிப்
 புல்லானை புதையுண்டம்மே.
எருதும் பசுவும் புலியுமே தாவியினை
 ஏற்றுஞ்செடி யெங்கள் மலையே
கருதிய பொன்பது கண்டத்தின மேலுமே
 புல்லுருவிகளுண் டெங்கள் மலையே.
வச்சிர மரகதத்தின் கோனி காரயணி
 அச்சந் திறவாளிமலையே
எச்சவய திளமையாக் குருத்துங் கரு
 கொச்சிகளுண்டெங்கள் மலையே.
வச்சிரகாயஞ்செய்ய பொன்சகளை வெள்ளெருக
 மாணிக்க முண்டெங்கள் மலையே.
உச்சிதமாகவே பெச்சிச்சித்தர்கள் நிதம்
 உண்டாடித் தேடுமெச்சிமலையே
அந்தமகமேனா சசன் திரிபுரசம்
 மாருஞ்செய்யவிளக் குங்காலை
மூந்த கொடி முடி பொன்னாசி கிழிக்கு
 வந்தகிலமலை யிம்மலையே
அஷ்டதுர்க்கை அஷ்டபத்திர காளியுமே
 செட்டுநிற்குங்காவல் மலையே
அஷ்டநாக மஷ்டகுலங்கள் குலபருவதமே
 செட்டுஞ்சுற்றுந் தாக்குமலையே.
மருத்து சஞ்சீவி வேண்டியதுமத்தா
 கிஞ்சிசியான மலையே
வரம்புரியுக குழந்தை வேலிடும்பர்கன்னி
 * மாருக் வளருஞ்சேருமலையே.
வந்த வல்வினைகள் தீர்க்கும் விதரியமுந்த
 இந்திரிணியுண்டெங்கள் மலையே
சுந்தரவனருசிக் மகிமை மிக்குமெ வெகு
 காரண முண்டெங்கள் மலையே.

இதுவுமது.

இராகம். பூபாளம். அடதாளம்.

கண்ணிகள்.

அருவாசமர் தாரமுங்கன்னி காரமும் வில் — தாரம்
அன்னமே தெய்வக்கன்னியர் விளையாடுவாரத்தி — நேரம்
பாமாவுயர் சண்பகங்கள் படைமுந்தேல — தாரம்
பட்சி ஜாதிகள் மெத்தவேயதி னித்தமாகுந் தெரு — சாரம்.

பகலானது மிரவானதுந் தெரியாததன் — சாகம்
பலகாலமும் இல்லையாகவே விலகாததின் — மேகம்
மகாசர்கள் குறமாதர்க்காய் வருவார்கள — தேகம்
மலர்க்காவிடைக் கலந்தேமன மகிழ்வார்சம — போகம்.

பைந்தருக்களின் மந்திபெறிபு தெந்துதான் குதி — போடும்
பலவின் கனி பிளவானதுறுமின் குலைமீதினிற் — சாடும்
அந்த மாங்கனி விண்டதேன்வழியாறு போலவெள்ள — மோடும்
அறுகால்வண்டு அதிகூடி யநேக ராகங்கள் — பாடும்.

கானவேடுவர் களிப்பார் புனக்காட்டிலே விதைதெளிப்பார்
காலமே கன்னி வெடிப்பார் தினைக்கதிரே கொய்துருசிப்பார்.
தேனெடுத்தவர் யானைக்கொம்பினிற் றினைமாவினை யிடிப்பார்
தேன் வித்தையைப் பிசைந்தே துவித்தருக்கதைத் தெரிப்பார்.

மஞ்சிபோல் வெண்மையிருந் கருங்குஞ்சியாய் வளர்ந்திடவே
மைகள் செய்பவோர் தைலமுள்ளதெங்கள் வளமாகிய மலையே
வெஞ்சினப்புலி பசுக் கூட்டத்திலே மேவியே விளையாடவே
வேர்க்குருண்டது மேருவேனுமாய் விளைவதெங்கள் மலையே

சரிந்த கொங்கை பெருந்தமை எழுந்து கொங்கை சரிய
தார்களுந் தெவ்வார்களும் பலவேர்க்குருண்டெங்கள் மலையே
வருந்தி மகவில்லார் பெற மலருண்டதை மொந்தால்
மக்களைப்பெறுவார்கள் நிச்சயம் வளரும் எங்கள் மலையே.

சந்தபேதியால் கவலைகளுந் தங்கமாயுருகிடவே
சாறுவாங்கிட வொருமூலிகை தழையுண்டெங்கள் மலையே
நித்தியமே அயன் முனிவோர் சார்ந்துறைவதெங்கள் மலையே
நேமசஞ்சீவி ராயர் காவலுண்டாமதெங்கள் மலையே.

ஆதியாகிய பார்வதியொரு பாதியாமெங்கள் மலையே
அன்னதானமுஞ் சொன்னதான மிகுமுண்டெங்கள் மலையே



போதுபோனதும் பகலாக வோர் சோதிமாமரமுண்டு
தொல்லுலகினிற் கல்வியும் நலசெல்வமுந்தருமம்மே.

குரங்கானது புலியாகவோர் கொடியுண்டெங்கள் மலையே
குட்டரோகங்கள் மட்டடக்கவோர் கொடியுண்டெங்கள் மலையே
இரும்பானது தாதுகவுந் தூறுனது துரும்பாய்ச்
சொல்லவே கருநெல்லியேயொரு வல்லியுண்டெங்கள் மலையே.

மூன்றுலோகமிமைக்குட் சுற்றிமுன்போலெதிர்வரவே
முடிமேலணிந்திடவேயொரு மூலியுண்டெங்கள் மலையே
போன்ற வன்னியிற் செல்லவுமக்கினி புனல்மேல் நடந்திடவும்
புகழாய்வளர் சத்திசாரணைப்புதையுண்டெங்கள் மலையே.

வெடியுண்டதை நீக்கவுங்குத்து வெட்டுற்றுளதாக்கவும்
வெள்ளைக்காக்கனை மேனிமத்தை மிகவுண்டெங்கள் மலையே
அடையார் வந்து கேட்டசித்திகளியாவுமே தரவல்லிக்
கொடியுண்டதன் காரணஞ்சொலக்கூடாதடியம்மே.

வாலமோகினி குறத்தியை நாட்டுவளங் கேட்டல்.

விருத்தம்.

பாட்டுவள மிசைகாட்டும் பனுவல்வளம் பொருள்காட்டும் பருத்துயர்ந்த, கோட்டுவள முலைகாட்டுங் கரும்பின்வள மொழி காட்டுங்குறமினேமேல், வீட்டுவளங் காட்டுகின்ற சத்தி சிவமலை வேலர் விளங்குவரும், நாட்டுவளந் தேசவளம் நகர்வளமுந் தலவளமும் நவிலுவாயே.

தரு. இராகம். தோடி. தாளம் ஆதி.

பூங்கமழ் சிறுகாற்றேறிச் சில்லைப் புரவிகொண்டு பாவிவரக்கண்டே
மாங்குயிற் சின்னவெண்மதிச் சத்திரமதன் வந்தானென வூதும்விசித்திரக்
கோங்கிலவின் முகைமத குங்குமக்கொங்கையின் கலசங்கலையுங்கவே
ஓங்கிமாதரைத் தோலங்கரித்தலைவர் காங்கேய நாடெங்கள் நாடே.

மாங்கனிக் கொத்தின் றோங்கின் குலைகளில்
மந்தியேறி யுலுக்கி நடமாட
ஓங்கிய பலவின் கனியாட
வுதிர்ந்து வாழைக்கனிரசமோடத்

தேன்கள் சிந்தி யதிலுடன்கூடச்
செந்நெல் கன்னல் வயலெங்குஞ்சாட
வான்படிந்து விளையும் பலவு
வளருங் காங்கய நாடெங்கள் நாடே.

நடக்கண்டது மாகதிக்கள்
படிக்கக்கண்டது விதியெங்குந்தேர்கள்
தேடக்கண்டது தான தன்மங்கள்
செறிக்கக்கண்டது தேவத்தலங்கள்
ஆடக்கண்டது மன்னர்க்கொடிகள்
அதிரக்கண்டது முரசுதுடிகள்
பாடக்கண்டது வித்வான்கள் யாரும்
பகருங்காங்கய நாடெங்கள் நாடே.

முத்திரத்தம் விளைவுள்ள நாடு
முனிவர் வேள்வியைக் கொண்டநாடு
சத்திரசாலை மிகுத்துள்ளநாடு
தடத்தொடுந் தண்ணீர்ப்பந்த லுள்ளநாடு
நித்திய மங்கள கலியாணநாடு
நிறைந்த செல்வஞ் சிறந்துள்ளநாடு
மெத்த கவிஞர் விஜயம் புகழு
விளங்குங்காங்கேய நாடெங்கள் நாடே.

நாரணன் சதுமறை வேதனு
நண்ணிப்பாதமுங் கேசமுங் கண்டிட தொழ
வேதரூப மெடுத்து வரும்போது
விமலர் செஞ்சடை மீதிருந்தே வந்து
மாதுளைத்த பவளக்கனி தெரிக்கிட
மாதவம்புரிவோர் வனமேதிரு
நீறணிந்து சேர்த்திய தாளமுதன்
நிற்குங்காங்கய நாடெங்கள் நாடே.

விக்கிர காட்டு மதனுக் கப்பாலு
மேலவர்க்கும் பிறவிக்கிடஞ்செய்து
வல்லக்கா செய்பவங் கெடாக்கையும்
வகைகள் தான் தெரியாமல் மலர்ந்துமே
அல்லக்காவிதற் தென்செய்குதேவாமென
அயர்த்து நந்தகனைக் கொக்கொளுமே
பக்கலைக் காட்டியே கெஞ்சுவர் போன்றலை
படருங் காங்கய நாடெங்கள் நாடே.



* தங்ககட்டியுந் தந்தியின் குட்டியுந்
தாளமோசன மாலையின் பெட்டியு
முன்னைகட்டியே நெஞ்சம் பறைகொட்டி
முடிமன்னர் தினங் கப்பங்கள் கட்டியும்
எங்குமெட்டிய விருதுகள் கொட்டியும்
யானையன்னிரு கடைகளுங் கட்டியுங்
கொங்கை மெட்டிமேய யிம்முடிகுடிய
குமர காங்கேய நாடெங்கள் நாடே.

சாமத்தோக வெதிரியர் மீண்டன்
தக்கசோட்டை முனிவர்க்குக் கண்டன்
தாய்முனிற் கவிநோர்கலை தீச்
சவுக்கிலே படிபோடப் பொறுத்தமே
நாமிக்கப் புலவோர்க்குத் தொண்டனென
நல்லகாமிச் சருக்கரை யுத்தமன்
காமிண்டமன் றாடி மன்னன் கீர்த்தி
கதிக்குங் காங்கய நாடெங்கள் நாடே.

நிதம் பாப்பிய தான தன்மங்களு
நீதிசற்றும் வழாது வழங்கும்
புதன் பெருகிய புத்தியுங் கல்வியும்
புகசர்க்குச் செயுமுபசாரமும்
இதம்பரவு சிவபூஜை நேசமும்
யாவர்க்கு முபகாரங்களை செயுஞ்
சிதம்பரப்பல்ல வேந்திரனாக
செலுத்து காங்கேய நாடெங்கள் நாடே.

† காங்கயத்துடன் வல்லிதன் காடையூர்
கந்தர்மேவிய பட்டாலி சிவனார்
திக்கு பாரப்பதி நற்பரஞ்சேர்வழி
உற்றகாரை மருதுறை வெண்முத்தூர்

---

* இந்த அம்பலப்பனவெண்டன் குறவஞ்சியில் சில எழுத்து மாறுதலாக இருக்கிறது. எழுதினோரால் சேர்த்தெழு தப்பட்டிருக்கலாம்.

† கொங்கு மண்டலத்தில் "எனத்தொடங்கி வாலமேரினி கூறும் விருத்தத்தில், "கொங்கதேச பன்னிரண்டாம்" எனக்கூறப்பட்டிருக்கின்றும், இவ்விடத்தப்பதினொன்று ஊர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

தேன்று கன்னபுரம் கொன்னை கோவில்
 சிறந்தவாறு தெசமூன்றாமல் பாடிய
திங்கிலிவர்த் அங்காருள நாட்டார்
 செழுக்குங் காங்கேய நாடெங்கள் நாடே.

மறையவர்க்கு மெஞ்ஞானியர்க்குங்கவி
 வாணருக்குஞ் சிறந்திடு தேவர்க்குங்
குறைவில்லாமலே கொடுப்ப மெனக்
 கூர்த்து மொழிந்துயர் கவுண்டர்கள் கட்டிய
நிறைந்த செல்வச்சம் பந்தமுள்ள வேளாளர்
 நீதிமன்னர்க்கு மாமுடி சூட்டமே
இறையருடைய னென்னாயிரத் தேகத்தில
 திருக்குங் காங்கேய நாடெங்கள் நாடே.

## வாலமோகினி தேசவளம் வினவல்.

விருத்தம்.

வத்தவருக்கிட்டியினி வருபவருக்காக வளம் வழுத்துக் காக்கும்
மைப்பரு செருத்தயக் கவின்கொண்டுயர் நாட்டிவரு பாவையே நீ
செத்தமிழின் தேசமன்றி நான்கு திசைகளிலு மன்பாய்ச்சென்று கண்ட
விச்சையுறு தேசமெலாம் விசையமிழ்த்தினிமையுற விளம்புவாயே.

## குறத்தி தேசவளங் கூறல்.

கண்ணிகள். இராகம், காம்போதி. தாளம்.

சீனமுஞ் சிங்களம் யாழ்ப்பாணமுங்குறியம்மே
 செப்பிலே மச்சியக் கொச்சி தேசமும்
யானறிவேன் சுழுமலை யாளம் வங்காளம் சோழம்
 ஒற்றிலேமத் துலுக்கர் மலுக்க டில்லிபல்லவம்.

கேகயமாளம் கருநாடகத்தெலு சிகாசி
 கீசகம் சோனகம் வங்கை கொக்கணத்தும்
வாகுளன தெலுங்கலிங்க குலிங்க கொங்கணம்
 மகதங்குருநாடு அனுவந்தசாருவ மாளவதேசம்.

வங்கங்குச்சர பாண்டியம் பப்பர மொட்டியம்
 மல்லவஞ்சவ்வியங்கலிசொல்லி நிவல் துவேவாம்
எங்குமுள்ள எண்ணெழு தேசத்திலுங் குறிசொல்லும்
 எங்கள்தேசங் கொங்கிற் சிவமலையடி யம்மே

கங்கை யமுனை சரஸ்வதி சிந்து கோதாவரி—மணி
 கன்னிகை பொன்னிய வாணி துங்கபத்திரை பம்பையும்



## நதிவளம்.

கண்ணிகள். இராகம். புன்னாகவராளி. தாளம் ஆதி.

மங்கை திரிவேணி பெண்ணை சவுந்தர பாகதி—நல்ல
 மாதவர் மூழ்கவே பேதமை நீக்கு முத்தாநதி.

சங்கங்கொழிக்குந் தனுகோடிவைகை யாறதியில்—சித்தர்
 தானஞ்செய்தால் வெகு ஞானந்தருந் தாம்பிரவேணி
துங்க மிருகஞ் சிருஷ்ணையம்மை நருமதை தோய்ந்தேன்—வினை
 தொலைத்தேன் கரைந்த கழுநீர் போலோடித்தேன் பாவம்.

கொங்கினிலாம்பிரவதி யெங்கள் மாநதியம்மே—அதிற்
 குளித்தாற் பிறவி யொழிந்திடலாமடியம்மே
எங்கள் சிவமலைக்குத்தர பாரிசந்தன்னிற்—செழித்
 திருக்கின்ற காஞ்சி நதியின் பெருக்குங் கேளம்மே.

இங்கினையாவர் தீண்டிய நாளிற்படிந்தால்—முன்
 செனம்பிறவியுங் கர்மமும் நீரோட்டுமம்மே
பொங்கிய காங்கேய நாட்டினிற் பார்வதிபுரத்தில்—நாக
 புஷ்கரணி தீர்த்த மிக்க மகிமை காணம்மே.

சங்கரர் பால்வண்ணர் பட்டாலிச் சிவமலைக்குடக்கில்—நல்ல
 சம்புநதியது உப்பர் நதியடி யம்மே
சங்கத்தார் சூழ்கிய பொற்றாமரைப் பொய்கைக்கிணையாய்—சிவ
 சைலத்திலுண்டு சரவணப் பொய்கை மேலம்மே.

## தலவளம்

கண்ணிகள். இராகம். காம்போதி. தாளம்.

கயிலை திருக்காசி கேதாரங் கோகர்ணங் காஞ்சிமதுரைகாளத்தி-சீ
 காழி திருவாரூர் தில்லைச்சிதம்பரங்கண்டியூர் பூந்துருத்தி
சயமிகுந்திருவெண்ணெய்நல்லூர்பெண்ணைநாவலூர் தான்றுதிக்குந் தலவளம்மே, முத்
 சாருஞ்சிராப்பள்ளி யானைக்கா அருணை திருப்புடைமருதூரும் [தி

ஜயமிகுந்த மத்தியார்ச்சுனந் திருக்கச்சியும் நல்வேத வாரணியமும், கண
 நாதர்க்கான விருத்தாசலமதில் நன்று மிராமேச் சுரமும்
சுயம்பு குற்றாலந் திருவாலங்காடுந் தலக்குடந்தையும்—மிகு
 நல்லமான திருவிஞ்சோய் மலைதலங்களு சிவாலயத் தலமும்.

அருள்பெருகிய கொங்கிற் கருவூர் வெஞ்சைக்கறைசை அவிநாசிசென்னிமு
ரம்பல மேலைச் சிதம்பரமும் முருகன் பூண்டி செங்கோடு-மேன்மை
உரியஸ்தலங்களோ டாயிரத்தெட்டெனுந் திருப்பதியும் நான்
உவந்து தரிசித்தேன் காங்கய நாட்டிலுயர்ந்த ஸ்தலங்களாமம்மே

அரியசிங்கை நகரத்தில் மார்த்தீசருள் காடையூரிலிருக்கும்—பத்தி
யன்பர்பணியும் பால்வண்ணர் ஆதீசுரர் ஆருத்திரகபாலீசுரரும்
பெரியநட்டீசர் சயக்கொண்டாபட்டீசர் பொற்சோமேசர்-வெகு
பிரபலமாந்தீசர்விக்கிரமசோமேசர் பேராவயித்தீசர்

தெளிதமிழோங்கிய அக்கினீசுரருஞ் சிறந்த பசுபதியும்—நாங்கள்.
தினமுந்தொழு வீசுவநாதர் பதமலரை தெரிசித்திருப்போமம்மே
திரிசந்திய காலமும் நஞ்சுண்டேசுரர்பதஞ் சிந்தித்திருப்போமம்மே—நான்
தெரிசித்த தலங்களிற் சிவமலைமேலான திவ்வியஸ்தலங்களாமம்மே

## வாலமோகினி குறத்தியின் சாதிமுறைமை கேட்டல்.

கலிப்பா.

சோதி சத்தி சிவமலையிற் சுப்பிரமணியர் தன்னருளாற்
சாதிமொய்த்த முல்லைமலர் சண்பகமும் பாதிரியும்
கோதிவைத்த குழலணங்கே குறமாதே உங்களுடை
சாதியின்றன் குலவொழுக்கச் சங்கதியும் புகலாயே.

## குறத்தி வாலமோகினிக்குச் சாதிமுறைகூறல்.

கண்ணிகள். இராகம். சங்கராபரணம். தாளம்.

எங்கள் ஜாதித்தைத்திறங் கேளடியம்மே—யம்மே
எங்கள்குல தெய்வமுருக வேளடியம்மே
துங்கமதயானையைப் பிடிக்குளடங்க நாங்கள்
செல்வ மொருகுளிகை கொண்டு புல்கவுமம்மே

கொக்கினை மாவாக்கிப்பின் குதிரையாக்குவோம் பக்கியிற்
கோழியையும் மயிலாக்கிப்பின் கொடிகளாக்குவோம்.
குக்குடத்தை வாரணமதாக்கிப்போடுவோம்—பினங்
குமானையும் பச்சைப்பின்னைக் குழவியாக்குவோம்.



வானத்தைப் பிடித்துத் தூணைத் தூதிப்படிப்போம்—மணலை
வடித்தெடுத்துக் குழித்தயில மாகவடிப்போம்
பூனையினை யானைக்கேறுக் குடத்திலடைப்போம்—தேவர்
பூசாரிக்குந் திலைமாவிற் கலந்து படைப்போம்.
அம்மியை ஆகாசத்தினிற் பறக்க விடுவோம்—உயிரி
லாதவரைப்பகலிரவும் நடத்தியே வைப்போம்
தம்பியலாற் கம்பியர்செய் பம்பரங்களை—நாங்கள்
சாட்டையில்லா தாட்டிவைத்துத் தாட்டிகங்கொள்வோம்
புல்லும் புலியாகவொரு சொல்லையறிவோம்—நல்ல
பொற்புளருண் நீனக் கையால் வாரியெறிவோம்
வல்லமைசேர் வேங்கையினை மானதாக்குவோம்—மரத்தை
வைத்துவெயிலே முருக்கி யிரும்பதாக்குவோம்.
எட்டுமலையுஞ் சட்டியில் வறுத்துக் கொரிப்போம்—அம்மே
எழுகடலையுமொன்றாய்க் கலந்து பிரிப்போம்
அட்டவேழத்தையும் பிடித்துச் சுனைத்து விடுவோம்—நாங்கள்
யாவரையு முள்ளங்கைக்குளறியக் காட்டுவோம்.
மனிதரை யக்கிக்குட்புகுத்து மறுகாதறுப்போம்—இன்னம்
மந்திர வித்தை மெத்த நாங்களறிவோங்காணம்மே
இனியகுற வள்ளிபதத்தைத் துதித்துப்படிப்போம்—நாங்கள்
என்றுஞ்சிவ மலையிற் குடிலை கட்டியிருப்போம்.

## இதுவுமது.

கண்ணிகள். ஆநந்தபைரவி. அடதாள-சாபு.

எங்கள் குறச்சாதியின்குல வொழுக்கச் சங்கதிகேளம்மே—நாங்கள்
எப்போதும் வள்ளியம்மன்பொற் பதத்தைத் துதிக்குஞ்சாதியம்மே
அக்குமணித்தாவடமுஞ் சங்குமணியுங் கொங்கையிற்றரிப்போம்—எதிர்
தந்தியகற்று முகனிட செம்பதத்தை நெஞ்சிற்புசரிப்போம்.
கொக்கிறகுங் குன்றிமணிக்குச்சங்குமுற் றெச்சவிருதணிகோட்-அணிந்து
குறவனை கன்றுக்குடித்து வந்து தெருவீதியிற் சோபித்தாலுந் தணிவோம்
தாக்கும்சிறு புலிப்பல்லைச் சிறு தாலியாகக்கழுத்திற் கட்டிக்கொள்வோம்
சாதியின் கிம்புரியிற்றெய்வ சந்நிதியுங்கடனுஞ் செய்ய வின்றுவோம்.

கைவிரற் களிக்கியிலே கணையாழிமோதிரங்க ளிடுவோம்-இட்டுச்
சக்கமுலைக்கனியாமுன் மச்சினர் வந்தாலுந் தள்ளி விடுவோம்
அக்குற்றினைச் சோறுங்குறவ னுசாரங்கொள்ளாமுன்னன்றேயும்
ஆமைக்கறி பூனைக்கறி யாறுலுந் சோறுக்கிடாதுமன்றேயும்.

சாராயங்களென்றுமன் மெத்தப்பூசையமாய் மனம் விரும்பிக்கொள்வோம்-கொண்டாற், சாசஞ்செய்ய பரவசமாய்க் குறவனவன் தாலனுசரித்துக் கொள்வோம், எட்டளைக் களிறையொரு குட்டிப்பரி சமுர்ந்தருகச் சொல்வோம்-சொல்லி, சட்டிகொண்டு மணவாளன் வீட்டுக்குற முறையெல்லாஞ் செல்வோம்.

ஏழுநாள் முகூர்த்தம் நிறைநாழிவைத்து மணமுரசடிப்போம்-அடித், தெங்கள் குறவள்ளித்தாய்க்கோர் பொங்கலுமிட்டொருசக் கிபிடிப்போம், கங்கணமணிந்து மணப் பொங்கலிட்டுக் கலியாண முடிப்போம்-முடித்துக், கைகொடுத்த குறவனைத் தெய்வமெனவொருநிலைமை பிடிப்போம்.

சிங்கன் வேறோர்குடியிற் றங்கியிருந்தாலுங்கைகழிற்றிண்டோம் வழியிற், றெய்வ மெதிர்பட்டாலு மிது கைப்பலனென்றேன்னக் கண்டுவேண்டாம், ஆமக்களலாமலொரு காமக்கள் வரையுமுகம் பாரோம்-பார்க்க, ஆடாத கூத்தாடினாலும் அப்பாற் சிங்கனை விட்டுப் பேரோம்.

தமக்கை கணவனெதிரில் வந்தால் நமஸ்காரஞ்செய் தோரிடத்தில் மறைவோம்-மறைந்து, தாய்மாமனைக் கண்டபோதே தலைகுனிந்துபேச நாணிக்கொள்வோம், எங்கெங்குஞ் சரித்தாலுந் தங்கித்தரித்தங்கோரிட விருக்கோம்-இருப்ப, தெந்நாளுஞ் சிவமலைக் கந்தர் பருவதத்தினி லம்மே.

குறத்தி குறிசொல்லிப் பெற்றவரிசையை வாலமோகினி கேட்டல்.

விருத்தம்.

மவுனமுனிசனர் திருவும் வாசவனு மனுதினமும் மனங்குவிந்து
தவசுபுரி சிவமலையின் வேலர் மருவிய வள்ளித்தாயைப் போற்றி
நவரசச்செந்தேன் வசனம் பயிலுகின்ற குறமாதே நலமதாக
அவரவர்க்குக்குறிகள் சொல்லி வரிசைபெற்ற வகைவிபர மறைகுவாயே.



குறத்தி பெற்ற வரிசையைக்கூறல்.

தரு. இராகம். நாதநாமக்கிரியை. ஏகதாளம்.

பல்லவி.

எக்குறிகளுஞ்சொல்வோ மம்மே. அம்மே அம்மே—நாங்கள்

அநுபல்லவி.

கைக்குறி கனிக்குறிகள் கண்டு சொல்வோமம்மே (எக்குறி)

சரணங்கள்.

சசிக்குங் கனிக்குறிபார்த்தேன்—தேவ
குருநாதன் மருவவே சாகுறிகள் கொடுத்தேன்
பசுத்த தங்கக் கடயங் கொடுத்தாள்—குழற்குப்
பத்தரைப் மாற்றுத்தங்கக் குப்பிமுடித்தாள். (எக்குறி)

சந்திரமதிகையைக் கண்டேன்—அரிச்
சந்திரன் சேர்வாரென்று தான்குறி விண்டேன்
இந்தசவர்ணப் பட்டுடுத்தாள்—கொடி
யிடைகொட்டியாணமு மிங்கென்னையுடுத்தாள் (எக்குறி)

சீதைக்கு ரகுராமர் சேரக்—குறி
செப்பினேன் தொப்பிச் செவிக்கிட்டாள் கொப்பு
காதுக்குத்தோடொரு சோடு—நல்ல
கைக்கட்டுப் பவளமுஞ் சுட்டியு மீந்தாள். (எக்குறி)

தமயந்திக்குக் குறி சொல்லி—துரை
சாமி நளராசன் சார்குவனெனப் புல்லி
சம்போகந் தருவாரென் றுரைத்தேன்—அவள்
தந்தபதக்க முபர்ந்த தாமம்மே. (எக்குறி)

தேசமெங்குங்குறிபு கன்று—வெகுமானந்
சிவமலை முருகேசர் கிருபையால் வென்று
சாசராசர் மெச்சித்தந்த வரிசை
நவரத்நப் பணிகளநேகங்கள மம்மே (எக்குறி)

கவிக்கூற்று.

விருத்தம்.

புலவர்கள் புகழ வாழ்வு பொங்கு காங்கய நன்னாட்டில்
வலிமைசேர் சிவாசலத்தில் வாழுநற் கொடியையொத்த

உலகெலாங்குறி புகன்றே வுயர் வெகுமானம் பெற்று
ஷிலவின் மெல்லிதழின் வாயா லெனக்கொருகுறி சொல்வாயே.

சுறத்தி குறிசொல்லுதல்.

கண்ணிகள். இ. ம். புன்னுகவராளி. ஆதிதாளம்.

சொல்வேனு னென்ன குறி யாகிலுமம்மே—ராச
னரைசர் சபையிலிலும் வெல்லுவேனம்மே
சொல்லுவதுஞ் சிவமலைக் குறத்தி நானம்மே—பசி
தீரவே யெனக்கித்தனை கஞ்சிவாரம்மே.

நல்ல கூழிருந்தாற் சற்றே கொண்டுவாவம்மே—அம்மே
காலுங்குடிக்கை நிறைய மண்டுவேனம்மே
அல்லப்பாக் குழிலை மருந்தத் தாவம்மே—சற்றே
அருகு கிள்ளி கப்பற்சாக் கருவுதாவம்மே.

அம்மே யம்மே மேற்கனுகி யாகுதே யம்மே—உனக்
காக்கமும் பெருக்கமுந்தான் வருகுதே-யம்மே
அம்மையொன்று மாறுகலே தோனுதே யம்மே—ஆதி
ருக்கமாந்தை வீச்சிட்டேறு வாச்சுதே யம்மே.

வானைங் குரலிட்டது மேலேனாரம்மே—காகம்
வந்திடங் கூவுனது நலங்காணு மம்மே
பூரணத்திலே சரம் நடக்குதே யம்மே—பசும்
பொன்னென்னனி யித்தமிது சென்னேனு னம்மே.

உத்தம சகுனமெல்லாம் ஒக்குதே யம்மே—உன்
உள்ளத்தில் நினைந்த தெல்லாம் ஒக்குமே யம்மே
சத்தி சிவமலைவேலவர் தயவு வருமம்மே—வள்ளித்
தாய் கிருபையுனக்குண்டு பொறு பொறுவம்மே.

இதுவுமது.

விருத்தம்.

கலைகல வென்றே பல்லிசுழறுது சிவாசலத்தில்
உலவுவன் குங்குமம்போ லொளிதிகழ் மெய்யான் வீரைத்
தலைமதில் வாழ்வானுறு தலையுளான் கண்ணிராறுன்
கலவலுனக்குத்தக்க நாயகன்வருவா னம்மே.



கண்ணிகள். இராகம். சாவேரி அடதாளம்.

சந்தனஞ் சவ்வாது பன்னீர் குங்குமங்கள் கலந்து
தரைமெழுகிக் கோலமிட்டுக் கணபதியை யம்மே
கந்தமலராகுது புனைந்தக்கனதனை யம்மே
கடலைபொரி தக்கணையும் பாக்கிலையை யம்மே

முந்தவே தேங்காயு மெட்பொரியை யம்மே
முப்பழமும் அப்பம்வடை சர்க்கரையை யம்மே
விந்தை நிறை நாழியளக்குவையா யம்மே
மேலான தூபமுமெய் விளக்குமை யம்மே.

கும்பிடுவாயைக்கரனைக் குட்டிக்கொள்வா யம்மே
குலதெய்வத்தை நினைந்தகனே குந்திக்கொள்வா யம்மே
நம்பிக்குறி யின்னதென்று நினைத்துக்கொள் வாயம்மே
நான் சொல்வது சிவமலையான் கிருபையினு லம்மே.

வாலமோகினியைக் கைகாட்டச் சொல்லுதல்.

விருத்தம்.

அஞ்சிலேழன்றகூட்டியமுகத்தா ராறிலே யிரண்டு சேர்த்திய புயத்தான், மஞ்சிலே தினம் போர்த்தசிவாத்திரி வாசர் வால மோகினியேழன் வந்தவேலை, உஞ்சிலேட்டஞ்சுறின யிரவு நன்றே ஒன்றொடி நீலத்திருக்க தலமு நன்றே, நெஞ்சிலே நினைத் தகுறி யாட்டிதற்கு நீட்டுவா யுனதிடக்கை காட்டுவாயே.

கண்ணிகள். இராகம். சுரசாப்ரியை. அடதாளம்.

சொக்க கெளியிட்ட திருக்கையைக் காட்டா யம்மே
கஞ்சமலர்க் காந்திமேலுங் கையைக்காட்டாய்
தக்க கணையாழியிட்ட கையைக் காட்டாய்—பசுந்
தங்கக் கங்கண மிட்டகையைக் காட்டாய்.

சொக்க கொளயிட்ட திருக்கையைக் காட்டா யம்மே
குலங்கு சங்குரேகை யுற்றகையைக் காட்டாய்
மிக்க சிவமலைவீரை மாநகர்க்குள்ளே—நல்ல
மெல்லியருக்கரசே உந்தன் கையைக் காட்டாய்.

கைவரைபார்க்கச் சொல்லுதல்.

கலிப்பா.

மருங்கிறு மெல்லிடையினையாள் பாவை வள்ளியாசையினல்
செருந்தும் வடிவேலர் சிவ கிரியின் மிசைவாழ்வுகந்து
பொருந்துபசுங் கிளியின்மொழிக் குறமாதே கூறுமுது
அருந்தியுண்டவாயாலே கைக்குறிகள் சொல்வாயே.

குறத்தி வாலமோகினியைப் பார்த்தல்.

கண்ணிகள். பைரவி. ரூபகதாளம். இராகம்.

நித்திய மனதான வளஞ் சிறக்கு மிந்தக்கையே
நீனிலத் தென்னுளுன் கறமும் நிறைக்கு மிந்தக்கையே
புத்திரமுதம் போதுமனை பொலிவு மிந்தக்கையே,
புலவருக்குக் கவிதெரிய இலகுமிந்தக் கையே.

உத்தமனே பரம்புரிய வுற்றதிந்தக் கையே
உத்தமர்கள் நினைத்தபொருளுதவுமிந்தக் கையே
சத்திரபதியென வுலகை யாளவதிந்தக் கையே
சத்தி சிவமலைபாலருட் டழைக்குமிந்தக் கையே.

குறத்தி கைவரைபார்த்தல்.

வேறு. சிந்து இராகம். சகாறு. ஆதிதாளம்.

மிக்க துவரை ரேகையிருக்கிறு வம்மே
மேன்மைக ளுண்டடி யம்மே
தக்க சுபதி ரேகை யிருக்கண்டா யம்மே
சந்தான ரேகை யீரம்மே

இக்கு மொழியாமச்சிய ரேகை யிருக்கக்கண்டாய்
எவ்வுலகும் புரப்பா யம்மே
சக்கர ரேகையிரு யிருக்கக் கண்டாய்
சத்துரு பயங்களில்லை யம்மே.

டமருக ரேகையரு விருக்கக் கண்டாயம்மே
சாம்பிராச்சிய யோகமிரு வம்மே
அமுதமொழியாய் மகருச ரேகையிருக்கண்டாய்
அஷ்ட லட்சுமியுஞ் சேர்வாரம்மே.

சுழியமோ பதுமரேகை யிருக்கண்டாய்
தானிய சம்பத்துண்டடி யம்மே



விமலர் சிவமலையில் வேலர் கிருபையாலே
மென்மேலும் வாழ்வாய்நீ யம்மே.

கலிக்கூற்று.

---

விருத்தம்.

வகைக்குறி பார்க்கிவிக்த மாதினைக் கைபிடிப்பார்
நகைத்து முப்புரமெரித்த நாதர்க்கு மேலோனென்னுல்
மிகைக்கிடமாகு தென்ன வேசிவன்மலைக்குறத்தி
திகைத்து மெய்க்குறிகள் சொல்லத்தெய்வத்தைவணக்குவாளே.

குறத்தி குறிசொல்லத் தெய்வம் பராவுதல்.

அகவல்.

கல்வியின் கடலாய் வல்லமை மிடமாம்
நல்ல விநாயக நாரணன் மருக
செந்தில் வாழ் முருகா சிவமலை தனிதுறை
கந்தனே புனிதா கழலிணை சரணந்
தெய்வகுஞ்சரியே தேவர்கள் தனியே
வையகம் புகழ்குற வள்ளி நாயகியே
கலியுக வரதா கைலாச நாதா
இல்லருள் குமாரி சிவலோக நாயகி
பால்வண்ண நாதா பகர் சதுர் வேதா
மாலினி நல்ல மங்கை நாயகியே
நஞ்சுண்டலிங்க நதியணி துங்கா
மஞ்சுண்ட குழலி வல்லி பார்வதியே
ஆளியூர்கெளரி யாகிய கரிய
காளி நாயகியே கண்முன்வருவாய்
பார் முழுதாளி பகர் வீரகாளி
சூரி சாமுண்டி துர்க்கை பிடாரி
சயில மீதுறையுஞ் சத்த கன்னியரே
அயில் வேலனையரு ளாயி யாத்தாளே
பட்டாலியூர் வாழ் பாதிரிவிநாயக

கட்டாணியான கர்ப்பூர விநாயகா
அருச்சுனன் தேரி யருளிய தேவே
சதுர்வீராயா தயவு செய்வாயா
இடும்பா கடம்பா இனிய மாமுனியே
நடேசக்கு நல்ல சமுத்திர கணபதியே
குலசேகர் துக்கட சாமுண்டி
கால வயிரவா கருப்பண்ண சாமா
எக்காலத்தும் மைக்குழல் மாரி
சக்கரத்தினி துண்டகாடம்பரி
மலை காவலோ வனதேவதைகளே
வன்னையோ வேயடி வரும் பன்றி மாடா
இருதலமதிலே வியங்கிய புதுமை
கருதிய காட்டின் காளி விநாயகா
மைக்குழல் வள்ளி மங்கையாள் பகவதி
இக்கலாம் புகழுஞ்செய் சாக்கிருத்தயா
பெரிருந்திய மாங்காத் புரி நாட்டி சயா
விரும்பியோர் குறிக்காய் வேண்டினேனுன்னை
முன்வந்திருக்க மோகினியாள் மனை
அன்னியகாரிய முயிரோ பழியோ
தானுமோ தவசு தானிய வகையோ
மாதிவள் நினைந்தது வைப்போடு செப்போ
கலவையோ களப கஸ்தூரி வகையோ
சலவையோ பட்டோ தங்கமோ வெள்ளியோ
வட்டியோ செம்போ மாடோ மனையோ
கட்டிலோ மெத்தையோ சனதிஷ்டிதானோ
சூனியம் செய்த சூட்சமத்தின் பிசகோ
ஆனதோர் குலதெய்வங்கள் செய்பிசகோ
மருந்திட்டுச் செய்த வல்வினை மயக்கோ
பொருந்தாதோர் செயும் போட்டியில் வந்ததோ
மாதிவள் ஒருவன்மேல் மனது வைத்ததுவோ
மாதரா ஒருவர் சொல்லிவிட்டதுவோ
செந்நகையில் வந்தவர் சிந்திய நிலைக்கோ
மங்கைதான் மகிழ்ந்து மணம்பெறு குறியோ
இயம்பிய குறியை யெக்குறியாகிலும்
நயம்பெற வகுத்து நவின்றிடுவீரே:—



## வாலமோகினிக்குக் குறத்தி குறிசொல்லுதல்.

வடித்த செந்தமிழ்ச் சிவாத்திரி வாசர் மேலாசை நேசம்
பிடித்தது நிசமேயாரும் பிசகல்லவென்று வாய்மை
வடிக்குது சக்கா தேவி பதவியென்னுதடும் நாவுந்
துடிக்குது குறிகளின்னஞ் சொல்லுவேனென் சொல்லுவேனே.

கண்ணிகள். இ. ம். பூரிகல்யாணி-ஆதிதாளம்.

## குறத்தி சொல்லல்.

நல்லரு கல்லரு குறிசொல்லக் கேளாயம்மே—எல்லா
நங்கையர்க்கெல்லா மாசே சொல்லக் கேளாய்
செல்வச் சிவமலை வாலமோக னுங்கியே உந்தன்
சிந்தையில் நினைத்த குறி சொல்லக் கேளாய்

கொல்லத்தின் வெல்லமே குறிசொல்லக் கேளாய்—விக்கனும்
தொட்டாவிழுமாகுதே மயிற் கூச்செறிகிறே
மெல்ல மெல்லக்கண் சிவக்குதே உடல் வெளுக்கிறே—மயினும்
வேர்த்தாரத் தேறுதே மனம் விம்மி நிற்க

அந்தமடந்தை யருடன் தெருவில் கூடிக்
கொண்டே மென்று பந்தடிக்கும் வேளையிலே
தந்தி முகமிருந்தார் மன்னிக்கிறான் போல் வந்தான்
முன்னக்கண்டு மருண்ட குப்பத்தோனுமோ பயமே.

## வாலமோகினி குறத்தி சொன்னதைத் தடுத்து வினவுதல்.

வித்தை வித்தைக் குறவஞ்சி நாடகக்காரி—நல்ல
வேடிக்கையித்தை யிராங்கே தேடிப்படித்தாய்
மூன்று குறியொன்று தவிராமல் நன்றாய் பின்னை
மொழிகிறதாய் மாயாத் தொழிலறிவேன்

பந்தி பந்தியாய் வருஞ் சேனையக்கண்டால்—பெத்தப்
பாவையர்க்கெல்ல திறவிப்பு மயமுண்டோ
இந்த மயக்கமும் தியக்கமும் குளிருங் காய்ச்சலும்—வந்த
எந்தவகை பெந்தவகை மறந்து புகல்வாய்

சிந்தைபெண் போக புருடர் தேரின் மீதிலே—வருந்
திக்காப்பவனி கண்ட தெரிவையர்க்குள்ளே.
சொந்தமென தேவன்மேல் மோகித்தாயம்மே—பரு
சொல்லப்பயந்தே சிக்கிலேன் சொல்லிலே னம்மே.

கன்னல்மொழி மின்னரசே உனக்குவந்த வெப்புங்
காய்ச்சலல்ல காமக்காய்ச்சல் கண்டுபாரம்மே.
மின்னனையாய் கிறுகிறுப்பும் அன்ன வெறுப்பும்—அரு
வீரகத் திறுகிறுப்பே வித்தாரக்கள்ளி.

வாலமோகினி கோபித்துப் பேசுதல்.

கன்னகரில் கன்னியென நானிருக்கவே—பின்னோர்
காமம் வைத்தாய் காமியெனவும் காட்டியபினை
உன்னினைவிற் சொல்லனுறி வொப்பிப்பாயானால்—அவ
னாருஞ் சொல்லிப் பேருஞ் சொல்லித் தாருஞ்சொல்லடி.

குறத்தி சொல்லல்.

ஊரும் பேருந் தாருஞ் சொல்லவே யெனக்கவன்—சற்
றுனக்குப்போலப் பழக்கமோ அறிமுகமுண்டோ
தேருந் தெருவுங் கோபுரமுஞ் சூழும் பட்டாலி-நகர்ச்
சிவமலைக் காங்கேய னெனவும் நாணிக்குனித்தாள்.
வேரிகடம்பமாலை சானேயவருக—இனியுன்
வெட்கமெல்லாங் கத்திரி யிடுக்கிக் கொள்ளம்மே
பேர் பெறுவாய் சிவமலை வேலவனைச் சேர்ந்து—மெத்தப்
பிரபலமாய் வாழ்வாய் வாலமோகினிப்பெண் மானே.

கவிக்கூற்று.

விருத்தம்.

என்னவே குறி புகன்ற வியல்மிகுநல் மொழிக்குறத்தி
மன்னவன் சிவாசலத்தில் வாழ் குறவஞ்சிக் கேற்ற
பொன்னணியாபரணம் பூட்டிப் பூண்டவள் புகழ்க்கு நாடு
மன்னவர் தேரதும் சென்றாள் வென்றிட நடத்திட்டாளே.

இதுவுமது.

விருத்தம்.

அக்குமணி கொக்கிறகுஞ் சூடிக்கொண்டிட மலங்காரச்சிங் கிவரும் வழியைத்தேடி, மிக்கபுலி காடி சிக்கமரநெருங்கி வெருவிரட்டக் குருவிகொக்குங் கதறியோடக், கக்க ககவெனும் பட்சிபிடிக்க வேலன்டிக் கண்ணிவலை முதலான தெடுத்துக்கொண்டு, நெருங்கெங்கே திரிதிடென சடைநடந்து சயப்பு சிவமலைக் குறவன் தோன்றினனே.



* சிங்கன்வருகிற சன்னிகள். இ-ம். காந்தாரமணிரியை, அடதாளம்.

பரிக்குகொண்டே கொக்கிறகு தலையிலிற் சூடி
பட்படெனக் கண்ணிகொண்டு பட்சிவேட்டைகளாடி
அறிக்கெனவே பட்சிவேட்டைகளாடி நடமாடி
யவன் கயிலே பிடித்துக்கொண்டு எலிப்புலியைத்தேடி.

விருதுகட்டி மீசைமுறுக்கி வேங்கைபுலி சாடி
வில்லம்புங் கையிலெடுத்து விறும்பயில் பாடி
தெரிதமிழ்சேர் சிவமலையான் புகழினைக் கொண்டாடி
திக்கெனப் பட்டாலிக்குறவச் சிங்கனும் வந்தனனே.

இதுவுமது கவிக்கூற்று. விருத்தம்.

கோழியைப் பிடித்தனாதன் குலவிய சிவாசலத்தில்
கூளிபாய்ப் பூனைபோலக் குருவிகளொளித் தொழுந்து
ஞாளிபோலடிகள் தூக்கி நரியெனப் பதுங்கி மெள்ளப்
பேழைவாய்க்குறவ னென்னும் பெரியசிங்கனும் வந்தானே

சிங்கன் தன் வலிமை கூறுதல்.

இராகம் முகாரி ஆதிதாளம்.

மூவரிற் பெரியார் தேவர்கட் கரியார்
முத்தியங்கரியார் சத்தியங்கிரியார்
கோவிலைச் சுழலார் கால் நாம்பெடுத்தே
குருவிகள் பிடிக்குங் குறவனும் நானே.

ஆதியிற் பெரியார் ஆறெழுத்துடையார்
ஆரணப்பொருளாய் மருட் சிவமலையில்
சோதியைத்துதிப்பார் தோலினைப்புரித்தே
துடிமிகளடிக்குங் குறவனும் நானே.

தலைதலையுடையார் சிலையினிற் பெரியார்
கதிசிவமலையார் பதமதைத் துதித்தால்
பலனைப்பணியார் முடிமயிர் தரித்தே
பறவைகள் பிடிக்குங் குறவனும் நானே.

சம்பு குமாரர் அம்பிகை பாலர்
சரவணபவனு ரரிதிருமகனார்

---

* சிங்கன் என்பது குறசாதியிற் பிறந்தவனுக்குப் பெயர், குறவ னென்பதுவு மதுவே.

செம்பொனென் றோதுஞ் சிவமலை யானைத்
தினம்பணி பெரிய சிங்கனும் நானே.

* நூவன் வருதல்.

விருத்தம்.

அரவின்மேல் நடனமாடு மரிதிருமருக னென்று
இரதாப்க் குலவுஞ் சத்தி சிவமலை முருகர் முன்னே
காமதி விட்டிகொண்டு கவிகதை யநேககூறி
இருளெனக் கருத்தமேனி எலிப்புலி நூவன் வந்தான்.

கண்ணிகள் இ. ம். சாவேரி. ஆதிதாளம்.

காடைக் குருவிக்குக் கண்ணிகொண்டு
கதுவாரி பிடிக்கக் சட்டெடுத்துக் கொண்டு
ஓடைத்தட்டுக்கண் பல பண்ணிக்கொண்டு
ஓட்டகம்போல நூவனும் வந்தானே.

பெருச்சாளிப் பொறியினை யெடுத்துக் கொண்டு, பெரிய முயலினைப் பிடித்துக்கொண்டு, நரிக்காணவலைகளுந் தூக்கிக் கொண்டு, நட்டலைச்சலைக்க நூவன் வந்தானே.

ஒட்டை மிருகங்களை யுதட்டிக்கொண்டு, குறுவலிற்றிலை பிடித்துக்கொண்டு, சிட்டர்பணி சிவமலைவேலர் பதத்தைத்—தேடிப் பணி நூவனும் வந்தானே.

குலைவிட்டலரியுங் கூவிக்கொண்டு, குக்கலை நாய்கள்பின் றேவிக்கொண்டு, சிலைகட்டிய சிங்கனை மேவிக்கொண்டு, சிவமலை நூவனும் வந்தானே.

கவிக்கூற்று.

சிங்கன் பக்ஷிகளைப் பார்த்தல்.

காமேதாரி சருநுங் காங்கய நாட்டிலெங்கும்
வைதர் பட்டாலி யூரில் மருவிய சிவாசலத்தில்
பொருவிய நூவன் சிங்கன் பின்றொடர்ந்திட்ட
வருகின்ற பக்ஷிபார்க்க மாமரமேறினேனே.

* நூவன்—குறவர்க்குள் தோழமை யுடையவன்.



சிங்கன் பக்ஷிகளின் வரவு கூறுதல்.

இ. ம். கல்யாணி. ஆதிதாளம்.

பல்லவி.

வருகிறடையே—பறவைகள்
வருகிறடையே.

அநுபல்லவி.

வருகிறடையே, சிவமலை தனிலுறைந், வாலவேலவருச்சிக்கா லக்கட்டளையிட்டப், பருகிய பட்டாலிக் குளத்திலுள்வாயிலும், புறவாயிலும் மேய்ந்து குடிகுந்தாரக்களும், பெருவாரியாகவே கம்புகும் போத்தும், புறாக்கூட்டமுந் திருக்கோக் கூட்டம் போலவும், அரிதான சண்பகக் காவளஞ்சேர் காஞ்சி, ஆறு நிலை றந்து பெருகின வெள்ளம்போல
(வருகிறடையே.)

சிந்தையில் வைத்துச் சிவமலை வேலரைத், தினமும் பின்னைத் துத் துதிசெய்துகொண், டத்தி பகுநாகருளைக் கடவி, வருந்தமருக்கிய அன்பன் காங்கேய நகர், வந்த புராத செங்கண்ணாகோத்திர, வசந்தன் சிவமலை மாவைமாப்பிச் சுந்தர காங்கேயன் செங்குளத்துள் வாரிற், சுற்றிச்சுற்றியே மேய்ந்து வக்காக்கூட்டமிருந்து
(வருகிறடையே.)

கந்தன் சிவமலைக் காங்கேயருக்குக், கொத்த வனசத்திரத் தைப்படைத்தாப், பந்திச்செலவுக்கு மண்டபந்தன்னிற், பதித்ததனை விசைக்கற்பணி வேலைக்கும், முந்திப்பணியஞ் சொடுக்குஞ் சிங்கை நகர், முதன்மையிற்றார கோத்திரனுகமலே, பித்தாங்குமார சாக்சிமுத்து வயமோதம் போயமாய்ப் பக்கியோளமாகவே,
(வருகிறடையே.)

மாங்கொத்தி பச்சியும் சகணவாய்ச்சியும், வலியானுஞ் சிட்டிடன் மாடப்புறாக்களும், பொருந்திய வள்ளி நகர்க்குளத் தேரிப், புறவாய்ப் பறனத் திருத்தில் விலலேகுலத், தாந்தா நாட்டார் மகிபன் பண்ணைப்பற்றுச் சொல்லு மாங்கைதுலச் சிவமலைவயலிலும், திருந்தும் புல்லகுல நல்லான் சருமனான், செங்கரும்பின் தோட்டச் செய்யினிலே மேய்ந்து.
(வருகிறடையே.)

வாசன் திருமால் மருகன் சிவகுமரன் வள்ளிபங்கன் குகன் மண்டபக் கட்டளைத், தியாகராஜ வாசன நாகமுத்தையா, தரிசி னம் செய்யும் பொருளைக் கோத்திர, நாகரீகனைழைப்பிச்சமணி மனு, கல்பச்சை ராயனுடன் சாமிசேர்ந்திருக்கும், போகமிகுந்தி டும் காடை நகர்குளத் தூள்வாயில் மீன்கொத்தி புல்வாயிலே கொண்டு.

(வருகிறதையே.)

பட்டாலிச் சத்திரி மாத்தியி முருகர், படித்தரத்தாக்கும் செம் பச்சையரிசியுந், கட்டளைக வாத்துகொடுக்கும், காத லன் கொட்டிலச் சின்னையன் பாட்டத்தும், தட்டாமல் நித்திய மனைசத்திரத்தாக்குஞ் சமாராதனைக்குஞ் சகலமுங்கொடுக்கும், செட் டான கன்னகுலச் சின்னையன் செய்பில், சென்மொக்கிக் குக்கி விக்கிக் கக்கிப் பக்கிகள்.

(வருகிறதையே.)

சிங்கன் சொல்லுதல்.

கட்டளைக் கலித்துறை.

போனார் சத்தி சின்னய லிவலர் பெரினிலே
போனமயக்கலி போதும் புலவருக் கெப்பொழுதுங்
காரானர் காங்கேய நாட்டார்க சியுங் கனதனம்போற்
றூரானமாய்ப்பல பக்கிகள் தானிசை சாயுதையே.

இந்து ஸ்தானி. மங்கலியாணி. ஆதிதாளம்.

பல்லவி.

சாமி துணையே பறவைகள்—சாமி துணையே.

அநுபல்லவி.

ஆயன் மருகன் விசாகன் கார்த்திகேயன், அன்னதான சப் பாரயணம்பிசை மருகன், சேயன் சிவமலை வேலர் திருப்பணிக்குந், தேர்க்கும் பருவத் திதி யபாவரணக்கும், தோயுந்தயிர் பாலுந் தூய சாம்பிராணியுந் குடம்செய்யுந் தேங்காயுஞ் செக்கமிழை, ஆயுங்கிரைகை ராதிகுலக் குப்பண்ணனை, அத்திகிரி சந்தியு மனு பமுழுப்பை போலச்,

(சாமி துணையே.)



சத்திரங்கட்டித் தடாகங் குளம்வெட்டிச், சந்திகட்டித் தடம்படியுங்கட்டி, மெத்தக்கிணறும் சத்தவனமிட்டு, வேல வர் முன்னமுந் தேரமுங்கை கட்டிப், பத்தி மிகுத்த சடைச்சி யம்மானைத்தன், பாதத்திலே வைத்திடு நற்மிவாசலை, சாத்தன் பதமலர்க்கன்பன் இசை தகர்த், காடைகுலச் செல்லன் கருப்ப ணன் குளப்பத்திற்,

(சாமிதுணையே)

வேதன் பணியுஞ் சிவமலைவேலர் விசேடத்தாக்குங் கிரீடத் திக்குஞ் செம்பொன், மாதப்பிறப்புக்கு மஞ்சட்சேலைக்கு, வள் ளியம்மைக்குத் திலை மாவிளக்கு க்கும், போதப் பழத்தாக்கும் வாரித்தினந்தனம், பொழிந்திடும் பார்ப்பதித்தோ டைகுலத்தவர், நீதிச்செல்லயன் பெரியணன் முத்தயன், நிலத்தின் பொன்ன யன் செய் நெல்லக்கதிரைப் போலே

(மெயிதாம்.)

கோதுங்குழல் வள்ளி பங்கன் சிவமலை, குகனுக்குங் குந் தரப் பெண்மயிலுக்குமே, சாதிப மல்லிகை முல்லை விருவாச்சி, சண்பகம் புன்னை கடம்புங்கழு நீரு, வேதத்தவர் சாற்று வில்வ முஞ் செல்வம், விளக்கத் திலத்தரும் வேளாளர் பார்ப்பதி, ஆதிபர் கன்னக்கை குலசின்னத்தம்பிசெல் லையன் முத்து வேலையன் குளத்திற் கொக்கு.

(சாமிதுணையே.)

தேவர்கள் தேவன் சிவமலை வேலர், திருவடிக்கன்பு தினை ஞ்செயும் பூபாலன், நாவலருக்குந் தியாகம் பாக்கை நகாதிகா மஞ்செய் பமுதுல்லிப, காவலன் சின்னய பூபன் குளத்துள் கரைப்புற மாந்தோப்பிற் காலெம்மைக்குந், ஆனைகுலச் சென்னி மலைமால் குளப்பற்றும், அன்றியும் சேர்ந்து மிகமிகத்திரள்திரள்.

(சாமிதுணையே.)

காரை நகரிற் றென் காற்கிசதிக்கரைக், காவிலு மாவிலுங் கக்காக் கிக்கியென்றும், ஆரபாரத்துடன் பழகுகுந்தி, ஸ்தி பன் சேனைபதிமால் செங்குளத்திலும், போரான கொற்றவேல்

பூபனித் திலும், பெருகிய கந்தப்பவேள் பழனத்திலும்; காரா
ளர்கள் ஆந்தையுங் காடையுந், தாழைப்பிவோரை கூழைக்
கடாக்களும்

(சாமிநாமையே.)

வேழமுகவர்க்கிளைய சிவமலை வேலவருக்கினி தீருங்
கரும்புமெங், காளுந்தரும் பனம் காடைகுலத்தவர் கல்லுகப்பி
பூபனஞ்சைக்கு மேல்பாலில், வாழுமருதுறை பட்டீசர் கோ
வில் மாக்கோடபதியு நல்ல ஆந்தை குலத்தாள, வேளான் சிதம்
பரமால் பண்ணைப்பாட்டத்தும், மெத்தக்கத்திக் கொண்ட வாத்தி
வண்ணாத்தியுந்

(சாமிநாமையே.)

முத்தூர்க் குளத்தின் புறவாய் நிலத்தின், முதன்மைமணி
ய குமாரசாமிதன், பற்றும் பெருமாள் நிலத்துங் காளியண்
ணன், பாட்டத்தும் முத்துக் குமார கன்னகுலன், கற்றுங்கென்
காருமிநதிக்கரை யோரத்துங், துலங்கிய குப்பணவேள் தென்ன
ந்தோப்பிலுங், கொத்திரிவை மெத்துச் செல்லப்ப னஞ்சை
யிற், குலவிய வாழைமருதன் னும் வளமேயே

(சாமிநாமையே.)

அன்னப்பாரியும் பட்டாலிச் சிவமலை, யாண்டவர் பூசைக்கு
வேண்டு முன்றிறியும், பொன்னின் மணிகளும் பஞ்சவன்னப்பட்
டும், பூசுஞ்சவ்வாதும் புனுகுங் கதம்பமும், அன்ன முதனி
வேதனமுற்றிய, வராதனைக்குக் கற்பூரக்கனைத் தரும், பொன்னம்
பலக்கவுண்டன் பெயதால் கோத்திரப், புதல்வன் சப்பய்ய விசித்
திரன் வயலெங்குந்

(சாமிநாமையே.)

மெய்யர் சிவமலையிலவர்க்குச் செய்பணி, விடைக்கடிமையா
னென்று துணிந்து சந்தையுங் கட்டிச், செய்யலூர் நடேலாக்
கிரட்டி யெடுத்துக்கட்டித், தேர்மண்டபப்படிக்குஞ் செப்பொன்
முடிப்புக்கட்டி, உயர்மேற் செந்தமிழ்பாடும் புலவரை, யாதரி
க்கத்துசங் கட்டிப்புகழை நிலை, செய்யுங்கண்ணை நகர்ப் பொன்
னம்பல வேளருள், சேயனுகிய சுப்பராயன் குளப்பற் றெல்லாம்

(சாமிநாமையே.)



## சிங்கன் சொல்லுதல்.

கொச்சகக் கலிப்பா.

விண்ணாடரோ வளர்ந்த வித்தகச் சிவாசலத்திற்
கண்முகனைப் போற்றிக் குழுத்திடுமெல தான குளிர்
கண்ணாபுரந்தனிலே கதிக்குஞ் சக்கனையில்
வெண்ணிறக் கொக்குக் கூட்டம் மெத்த வந்து மேயுதையே.

இந்து. ஆம். கலியாணி. ஆதிதாளம்.

பல்லவி.

மேயுதுமையே பறவைகள்—மேயுதுமையே.

கண்ணைகர்ப்பற்றுநிலத்திலும், கருமலர் வாவிகளிலு
மிடத்தாந்தெங், கன்னகுலத்தி பெருமாள் மயிலன், கழனித்
திருத்த கானான கோத்திரப், புண்ணியவான் பழனிமலை மயி
லன், பூங்காவனத்திலும் பாங்காகவே வந்து, வன்ன வன்னம
க்களாய் மயிலின்கரைநம், மாக்கோடபதினைச் சேர்ந்து வாழுகின்ற
யிலைநமும

(மேயுதுமையே)

சாம்ப சிவமலைச் சரவணபவகுரு சாமிக்குக் கார்த்திகைச்
சோமவாரத்துக்குந், தேன்பாலுஞ் சக்கரை பால்தயிர் நெய்யுந்
திணப்படிக்குந்தருஞ் செல்வர் காங்கேய நாட்டில், ஆம்பிரா
வதிநீர் மாகியமெல்லாம் ஆந்தைக் குலத்து வேந்தன் பழனி
மலை, தேம்பொழிலெங் கெங்கும் குப்பண்ண பூபன் திருந்தும்
வயலெங்குஞ் செங்காலநாரைக் கூட்டம்

மேயுதுமையே.

என்றுக்கு சென்னிமேல் மெச்சும் நிறைந்த, விறைவனா
சிவமலைக் காங்கேய நாட்டினில், வெள்ளைக்குறாத்தி காரக்குட்டி
யனை, வித்தாரன் கட்டிய கல்லணைப் பாசனம், வீறுமாங்கரை
குல முத்தனன் பெரியணன், விளங்கிய அத்திக்குளத்துமன்
வாயிலும், தென் திருமிழ் சேர்ப்பிலேவைத்திசர் மேவல்தானப்
பற்றில் விராலருந் சுசப்பில்

மேயுதுமையே.

வள்ளி பங்கன் குகன் வாழுஞ் சந்நிதிவ, மலையின் கிழக்குத் துவாரப்படி முனைக், கெள்ளிபதாய்த் திருத்தேர் மண்டபங்கட்டியுந், தேவமாதேசை பூசைக்குத் தினந்தர, வள்ளுந் தனக்குச்செய கோத்திரர் வெள்ளைக, ஆராதிகாருஞ்செப் வேலாயுத பூபன், செல்வனைந் தையிற் செக்கெல் விளைந்து, செவந்த கதிருதிர்ந்து சிறந்த நெல்லினில்

மேழி நுகமே.

அம்பொருளை சதிக்குத்திர பரிச, மருகும் விளைத்தீர்த்தார் தேவஸ்தானப் பற்றும், திப்பளவோக்கிய் வெள்ளைகளூர்குளத், தின்புறவாய்த் தென்னக்கோட்டிலுஞ் சோழேனர், ஆம்பற் றடக்கோட்டிலுஞ் செய கோத்திரவே, வாயுதன் பாண்டைக்குப்பாயும் வாய்க்காற் பற்றுங், காப்பிரிய செல்லயன் கழனியிடத்துங் கருடன் பருந்து கதுவாரியுங் கட்டி

மேழி நுகமே.

ஆறுதொழுவிற் கருமலை நீதி வருளாய்வளர்ந்த பழனிமுருகனைக், கூறிப்பணிந்து சிவமலைமீதிற் குழந்தைவடிவேற் குகனை யின்றுதமே, நீறுபுனைந்து சகல செல்வத்து நிறைந்த பொருளந்தை கோத்திரன் பழனிமால், பாறுபாதிப்பூரப் பச்சோடைகாதர் படித்தாத்துக்குக் கொடுத்த வயலெங்கும்

(மேழி நுகமே.)

செஞ்சடை யீசர் சிவன் பச்சோடேசர்தென் தேவஸ்தானமென்று இக்கெட்டிலுஞ் சூல, மிஞ்சமாலம் பாடிப்பொருளந்தைகோத்திர வேளாளன் முத்துக்குமாரன் திருத்தினை, நஞ்செயிடத்திலுஞ் சந்தனத்தோப்பிலு நல்ல குமாரவிராசன் வயலிலுங், கொஞ்சுங் கிளிகளுங் காலுங்கோழிகளும் குளத்திலுள் வாயிலுஞ் அம்பணன் பாட்டத்தும்

(மேழி நுகமே.)

துன்னுமயிலின் அரைமுருகேசர் சுகந்த சிவமலை மேல் முருகையாற்கு, வெள்ளியின் சப்பிரமும் வெண்முத்துப் பந்தலும், வெண்குடை வெண்சாமரமுந் தினந்தரும், வெள்ளைகளூர் திருமாட கோத்திர வேளாளப் பண்ணைப் பற்றுகளிலெல்லாம், உள்ளான் வலியானுளானுரை செம்பூழ் ஒலஞ்சேய்பாகலையுங் காடைகௌதாரியும்

(மேழி நுகமே.)



## குறவன் கண்ணிகொண்டு வரச்சொல்லல்.

கலிப்பா.

தேங்குவளை மேவிச் செழித்திடும் பட்டாலி நகர்க்
காங்கேய நன்னாட்டிற் கழனிப்பழனந் தொறும்
நீங்காமற் பக்ஷி சிறப்புமே யுருகுறவா
பாங்கான கண்ணிகொண்டு பக்கல் வருவாயே.

சிந்து இ ம் கல்யாணி. தாளம். சாப்பு.

கொண்டு வாடா குறவா—இருக்கக்கண்ணி
கொண்டுவாடா குறவா.

விண்டலம் போற்றிய சத்தி சிவாசலர் மின்னொருகொக்குப் பிடித்தளித்தாரதைக், கொண்டாரொரு சட்டி கானமறையோருக் குறித்திடப் பின்னொரு கொக்குப்பிடித்திடக், கண்டாரதைக் கையிற் றேசைமாவிலைக் காவிலேயிக்கின்றார் பால்வண்ணநாதரும், பண்டாயோர் கொக்கை மேன்முடிமீதிற் பதித்ததரியப் பக்ஷி பிடிக்கக் கண்ணி

(கொண்டுவாடா.)

தந்திமுகவனர் தொந்திக்கொருபெருஞ் சாளிபிடித்தனரா மினைத்தகையர், சிந்தித்துக் கொண்டொரு செம்பருந்தல்லவோ, தேவதிவோ நான்முக னன்னத்தை, அந்தியகனு மனுசரித்துக்கொண்ட தாருமறியாரே வேறுபயமென்ன, பிந்துவதேதா பிதற்றுவதேதடா பேய்க்குறவா பக்ஷி பிடிக்கத் திருத்திக் கண்ணி,

(கொண்டுவாடா.)

கவிக்கூற்று.

கலிப்பா.

கிட்டப்பணி சத்தி சிவமலைக் காங்கேய நாட்டில்
அட்டிகள் சொல்லாமலைமுத்த குறச்சிக் கன்முன்னே
கொட்டகைத் தாண்பொற்காலைக்குத்திக் குந்தியே நூவன்
கட்டுகிட்டிக் கோலாடனே கண்ணிகொண்டு வந்தானே.

சிந்து. அடாணா. அடதாளம்.

கொணர்ந்த கண்ணியைத் திருத்திக் குத்தினால் கொக்குகளும் படுமே
குறவா கொக்குகளும் படுமே.
பிணைத்த கண்ணியை விரித்துக் குத்தடா பேசாமல் குறவா
மறைந்த கண்ணியை நிறுத்திக் குத்தினால் வக்காவும் படுமே
குறவா வக்காவும் படுமே.
நலம் பெருமைசேர் பட்டாலிச்சிவ மலைத்தின் குறவா.

கவிக்கூற்று.

கலிப்பா.

கட்டுபணியுந் திண்புயத்தார் கர்த்தர் சிவமலைப்பி
விட்டகுடி லீட்டி விருத்திடும் நாவன் றனைப்பார்த்
தட்டப்படி நீ பேசாதே ஓடிவிடும் பக்ஷியெல்லாம்
அடங்கட்டும் என்றே சிங்கன் அவன் புகல்வானே—

குறவன் ஊத்துப் போடாதே எனல்.

இ. ம். கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

செம்பாறடையே போரு போரு செம்பாறடையே.

அநுபல்லவி.

தம்பர் பாகிந்த சிவமலைப் பட்டாலி யூர்ருளத்தின் வாயில்
என்பாரில் பேசாதிருவன் சத்தங்கேட்டா
இருந்த குருவிக் கொழுக்கிறதுப் போகுதே (செம்பா.)

வந்த பாகிலு லவியான் வருகிறா டப்பறுவொரு தெட்டம் வருகுது, தெக்காலே நாறுது பக்ஷிகள் வருகுது, திருத்தின கண்ணி களெல்லாங் கவிழ்க்கக் கிட்டிக்கோல் கட்டித்தாரேன்.

சக்கா வுனக்கைக் கஞ்சிதந்தாரேன் காதுக்கு தொங்கிய வெள்ளேடறிஞை தாரேன், குக்காதே ஒர் சீக்கொம்பாகிறான் தாரேன் கறுத்த நாயென் நேராமாய்த் தாரேன்
(செம்பாறடையே.)

மஞ்சளில் லாடை பிடித்து கருங்குழல் வாரிச்சொருகி மலர் சூடிப்பொட்டு மிட்டு, மிஞ்சியணிவிட்டுப் பொன்னிட்டுக் கொப்பிட்டு, மின்னலிடைக்குயர்வன்னச் சேலைகளிட்டு, வஞ்ச



சக பொன்னிய லேவசையான சை வல்லிலகைப்படும் விரகர் தனைப் போறும், கிஞ்சுகமுக்குயிற் குஞ்சுகளுங் கொக்கும் கிடைக் கிறுவாரி யடைக்கலா நீசுறி
(செம்பாறடையே.)

கவிக்கூற்று. கலிப்பா.

பரிவாஞ்சேர் பட்டாலிப் பால்வண்ணர் பாதமலர்
தரிசனஞ்செய் சிதம்பரையன் றிருந்து நிலத்திட்டத்து
வரிசைகொண்டு கண்ணி வைத்தேன் வந்தசிங்கன் சாடையினால்
குருவிகளெல்லாம் பறந்து கொத்தி யெத்திப் போயினவே.

சிந்து. இ. ம். கேதாரகௌளம். ஆதிதாளம்.

போயினமையே பறவைகள் போயினமையே

போயினமையே சிவாசலவேலவன் பூசை நிவேதனம் பூசார் போசனம், ஆயினுமென்னளவுந்தாராமல் அபாயமாய்த் தேடித்திரவியம் போலவே, கோயிலிலேக்கண்டு கைகட்டிக் கும்பிட்டுக்கூர்ந்து வணங்கியே கொண்டு பஞ்சாக்கரம், செபத்துடனே நினைந்து சபஞ்செய்து நீறிட்டார் பவம்போல மாறிட்டகன்றோடிப்,
(போயினமையே)

ஆயிரங் கொக்குக்கே கண்ணிவைத்து நான் ஏகாந்தமாயொருதாவிலிருக்கையில், போரயமாகிய பக்ஷிகள் பட்டது, பின்னொரு நாரைவிளைத்தது போலவே, ஆராட்டமாகக் கிடந்து நான்கண்டு தாவுங்கதிக்கென் றெடுத்து நிலத்தினிற், பாரமற் போட்டேனொரு கன்னங்காட்டிப் பறந்தோடிப்போச்
சுதங்கிருந்த பக்ஷிகளெல்லாம்.
(போயினமையே)

கவிக்கூற்று—விருத்தம்.

சிலகண்ணி வேட்டையாடுஞ் சிவமலைச் சிங்கன் முன்னே
பலபல பட்சியெல்லாம் பறந்து தானோடும்போது
நலவனத் தானோர் பேட்டை நாடியே தொடர்தல் கண்டு
விலகிய குறத்தி மீது மெத்தவுமயல் கொண்டானே.

இதுவுமது.

மயல்கொண்ட வேளைதன்னில் மன்மதன் மலரின் பாணந்
தைசயிலெதிர்த் தெய்யப்போது காமநோய் தனிலுழன்று
வயனமா தாகப்பட்சி வகைவகை பணிக்கவேண்டி
நயமுள குறத்திதன்னை நாடியே தேடினானே—

## குறத்தியைக் காணாது குறவன் வருந்தல்.

௧௫. இ ம். தோடி. ஆதிதாளம்.

பல்லவி.

வஞ்சி வரக்காணேனே ஐயே ஐயே குற
வஞ்சி வரக்காணேனே.

அநுபல்லவி.

குஞ்சரப் பெண்மணம் வளர் சத்தி சிவமலை வேலர்
குலவுங் காங்கேய நாட்டில் மகிழ்சாயற் கன்னாட்டி
குயிலின் மொழிமடந்தை குயிலினடை நடந்தே (வஞ்சி)

செம்பவள வாயினிதழால்—எந்தனுக்குண் கத்
தம்பலந்தருவாள் இருகாள்—முகங்கடுத்து
வெம்பி நின்றுந் பகர்ந்திடுவாள்—விரும்பினலே
உண்பதினும் பகர்ந்திடுவாள்—இளைக்குதென் மனம்

உருகி நெருங்குவகையாய் வருகிறது உடலதனை
தருகிற மதவெறி பெருகுது ஆடியிடை (வஞ்சி)

ஆதினத்துக் கோவோர் குருந்து—சிறுமதலை
பருவையுங் கட்டியே சுமந்து—பிரிந்து போயோர்
மாதமாயினேயே மறந்து—மூத்த குறத்தி
வார்த்தையால் வந்திதன்றுயிர்த்து—கன்னிவெறியாள்.

வலிய வலிய வந்து கவிக்கிக்கொள பழிப்பாள்
பாட்டேனென்று ஆதைகள் போட்டிடுவாள் முகத்தில்
மதாதிக்கவலை சுரத சமயத்தில்
வனிதை சொன்னபடி மனதுசகியே னின்னம் (வஞ்சி).



கலிக்கூற்று. விருத்தம்.

கருணை திகழ் காங்கேய நன்னாட்டில் வாழ்வு கதித்திடு
முத்தமன் பெட்டைச் சவுக்கை முன்பாய், இருந்திடுகொண்டு
வளைகருவுக் கட்டி யிருந்தனர் கண்டே மகிழ்ந்தாரவர்க்கு
வேறு, மருந்து மூலிகை அறிந்து கொடுத்தேனங்கே மலைக்கு
வேண்டிய சரக்கு மெய்ம்மேலாந், தருதியென வாங்கியே சிவா
சலத்திற் குறவன்றுதன் பெண் மயக்கஞ் சாற்றுவானே.

## குறவன் வருந்திக் குறத்தி அடையாளங் கூறல்.

கன்னிகள். இ ம், புன்னாகவராளி. ஆதிதாளம்.

தோகையைக் காணேதென் தோமுருகி யுடையே-அவள்
கொழிது பெரிதுந்தேன் செய்வேனேயே.
பாகு மொழியாள் பயிலு மொழியுங் கண்டேயே—மெத்தப்
பதறித் தியங்கி பொருவகையாய் வருதே

மோகந் தவிர்க்கு முகாரி யரிவை காணேயே—இந்த
மூத்த குறத்தி தன் வார்த்தைப் பிசகினாலேயே.
தேகம் பரவசமாக வருகின்றதே—எந்தன்
சிந்தையிலே குரும்பைத் தொடுபோற் கனுறையே.

வஞ்சி குறிஞ்சி பயிரவி பாடுவாளேயே—குற
வனத்திற் குயிலுங் கிளியு முன்னே வருமையே.
கொஞ்சுவள் பஞ்சவர்ணக் கிளிக்குஞ்சுபோயிலேயே—யிவள்
கொவ்வை யிதழ்ச்சுக் கற்கண்டினும் ருசியையே

மஞ்சளில் வாடை திமிர்ந்த பொடிமயக் கையே—என்
மையற் பிணிக்கு மருந்தவள் சஞ்சீவி யையே
அஞ்சாறு மாசமவளைக் காணேமலே ஐயே—மோக
அங்கசன் கைக்குளகப்பட்டுக் கொண்டேனே ஐயே

மாடப்புறு வெச்சங் கோழியடையின் மஞ்சளுமே—குழல்
வண்டு மதேனு இன்னகக்கம் யானை பதுமமே.
நீடிய கீரிப்பழம் பெரு மாடையொட்டியுமே—பூவில்
நின்று சிறுக்கியு மந்தியின்பிச்சுக் கூட்டியுமே

தேடியரைத்துண்டை சேர்த்திட்ட மருந்திலுமே—குறச்
சிறுக்கி மயக்கிலே சித்தப்ரமை கொண்டேனேயே.
மோடியாகப் போனதோ தகிலையைக் கூடும் நாளில்—நான்
சாந்தியாகப் [illegible]

எட்டு செருக்குறப்ப சேமிவளுக் கிட்டானே—காரிக்
கேற்ற குலத்தின் சிறபி யென்கை கொட்டேனே—மீர்தப்
பொட்டிக்கு நல்ல பொருத்த மித்தாக கேட்டேனே—வேத
புராணிகர் சொன்ன முகூர்த்தத் திருநா ளிட்டேனே.

அட்டிகை கொடுத்த வுடிகைக பொன்னிலிட்டேனே—சிவ
னாசையினுல் குலதெய்வத்தையுங் கும்பிட்டேனே
மட்டார் குழல் வள்ளிதாய்க்குப் பொங்கலு மிட்டேனே—சிவ
மலையில் முருகர்க்குச் சேவலும் பாலுமிட்டேனே.

சந்தி விராயர்க்கு வெண்சாமரை வாங்கிக் கொடுத்தேன்—மலையில்
தாய் வீரகாளிக்குச் சிங்கக் குதிரையுங் கொடுத்தேன்
குஞ்சரித் தாய்க்கு குறிஞ்சிமலர் மாலை தொடுத்தேன்—திருக்
கோலங்கொண்ட திருகாலும் பனிக்கு நடைகொடுத்தேன்.

வஞ்சி யிந்த நகர்ப் பசுபதியர்தத்தைப் படித்தேன்—செல்
வாயிலுக்குச் சல்வளத்துக்குப் போகவுந் திடமெடுத்தேன்—
பஞ்சவர்ணப்பட்டு காட்டிராயர்க் கெண்ணெடுத்தேன்—நல்ல
பச்சைபொருக்கு சந்திர செவ்வாய் விரதமும் பிடித்தேன்.

கம்பர் குலத்தில் வடிவேலர் சொல் குப்பையாண்டி—கையிற்
காணிக்கை பூட்டுமும் பூணிக்கையாய்த்தந்த வேண்டி.
அன்பாகவே காச்சி முத்தப்பரைத் தரிசித்தேன்—மாமுனி
அன்னைக்கும் சுட்டுக்காய்ப் புளியும் வைத்தேனே

பண்பான கள்ளியக்காட்டுக் கறுப்பண்ணற்கையே—ஒரு
பட்டுக்கடாய் நேர்த்தும் வெட்டிப் பொங்கலிட்டேனே
அம்பிகைப் பார்வதி பெரியநாயகி கிருபை பார்க்கவே—பிரமன்
டாலே யகவம்பிட்டுக் களிபாட்டனு செய்தென வட்காகவே

வல்லவி யானூராட்குக் கல்லெற் பூசனு செய்வித்தேன்—அந்த
மண்டபத்திலப்பிள்ளைக முஸ்தீதியும் கிளைத்தேன்
செல்வக்குமாரர்க்கு வில்லைச் சாமோன்னு கொடுத்தேன்—வேண்டிச
சின்னப் பூசாரிக்குச் சன்னக்கம்பிச் சேலை கொடுத்தேன்

வெள்ளகலூரில் விளங்கிய வீரகுமாரர்க்கு—பழனி
வேல் வெற்றியாண்டி யவர் சொன்னபடி கவர் தேர்க்கு
ஒன்னிய நிலைத்தம் பிடித்தேனே நூலாயிரம்—செம்பொன்
ஒளிக்குமதிர் வெடி போட்டொலிக் காணிக்கைக் காயிரம்

செல்லிபடைவான் கத்தக்காளம்மைக்கோர் சேலையும்—வெகு
திட்டமாய்ப் பொங்கலிட்டுத் தந்தேன் முத்துமாலையும்



கல்வி புகழ் திருக்காடையூர்ப் பாளத்தில் வாழு—முத்துக்
கருப்பண்ணற்குக் காவ்கும் கச்சையுங் கருக்கறுவாளும்.
அல்லும் பகலுமே பூசைசெய் முத்துவீரப்பட்டன்—கையி
லந்த பொங்கல் தந்தேன் முன்செய்பவ மெலாத்தீர
இல்லையே தெய்வந்தானென் றிருப்பட் சந்தயாள—மொத்த
மிருக்குமையே யிந்தக்குறத்திக்குத் தானமையாளம்
ஒருத்தியின் மீதிலொரு பச்சமுண்டிட்டபாக—மதில்
ஒண்டொடியாளினைக் கண்டவர்க்கே நவியாகம்.
வஞ்சி சாராயங்க வென்றுற்றுடிப்பாள தேசு—குற
மங்கையைக் காணுமலைகம் பதறுதே மோகம்
முன் சிநேகத்தவள் மோடிசெய்வாளோ காமினியே—உறவின்
முறையாரோ பெண்ப்பரையவே செய்வந்தாளே.
குஞ்சரி வள்ளி குலவு சிவமலைக்கையே—வரக்
கூட்டிவர் சுந்தி சிவமலை வேலவனையே.

குறத்தி வருவதை நூவனிடங் குறவன் கூறல்.

இ ம். தோடி ஆதிதாளம்.

---

பல்லவி.

வஞ்சி வரக்கண்டேனையே—மோகக்குற
வஞ்சி வரக் கண்டேனையே,
பஞ்சினு மெல்லடியினை சஞ்சரிபெண்டு முழக்க
மஞ்சகனிலங்கி வளமிகுந்திய சிவமலையில் (வஞ்சி

சந்தன களபந்திமிர்ந்த—தனமதுக்குத்
தங்கப்பணி தானமென்க—வகைவகையாய்க்
கொத்தன வோலைகள் குலுங்க—வகை வகையாய்க்
கொக்குக்கழி யணிந்த புண்க—
குஞ்சரி குறவன்வியையுடமத்மவிசெய்தே குகனை
வந்தகனை புரிந்தவைடயில் மந்தனை யிடுக்கிக்கொண்டு
(வஞ்சி.)

தலையினிலே குறக்கூடையும்—மருங்கினிலே
சந்திர காவியின் பட்டாடையும்—சமதை சொல
மலர்மகளினைமேல சாடையும்—சவ்வாது புனுகு
மஞ்சளின் கதம்பவாடையும்
கலகலென மொழியுங் கருங்குயிலின் கிளியும்
விலக விலக வொளிமிரண்ட மான்விழியுமாய்
(வஞ்சிவரக் கண்டேனே.)

செஞ்சி தஞ்சாவூர் மதுரை மைசூர் முதல்
டில்லி வரையினுமே நாடி—சஞ்சரித்துக்
காஞ்சி திருப்பாமூர்தேடி—கரூர் வந்து
காங்கயத்தின் வழிகூடி
மிஞ்சு வெள்ளகூர்க் கணக்கு வேளைவைத்திய நாதபின்னே
முன்னே வந்தாளென்று சொன்னார் சிவமலை மீதிற்
(வஞ்சிவரக்கண்டே.)

விருத்தம்.

மங்கள சிவாசலத்தில் வாழ்பால யோகனுக்கி
இங்கிதக் குறிகள் சொல்லியே வெகுமானம் பெற்ற
சங்கதி விவரமெல்லாந் தங்க பட்டாளி நீத்
இங்கிதம் வினவிக்கண்டு சிங்கனுந் தெரிகுவானே.

ராகம்: கன்னிகள் இடம் கண்டா அடதாளம்.

வந்ததேயா சிங்கி வகைக்காரி சென்ற
வயனவிவர மெல்லாம் வழுத்தடி சிங்கி
எங்கிருந்துத் தேசமும் கனிகள் குறிகள் சொல்லி
ஏற்றவெகு மானம் பார்ப்பாய் நீசிங்கா
கன்னக்கருத்த குழல் மின்மினி போலான
காரணமென்ன கழறுவாய் சிங்கி
அன்ன நடையாள் வாலமோகினி தந்தபொன்
னாக வொருதக்கிறுவா மடா சிங்கா
சேர்தாங் குழலிலே நாவிளம் பழத்தைக்
கோர்த்துக் கொத்தாய் வைத்த கொள்கையென் சிங்கி



மாதயிராணியென் குறிக்கு மனமகிழ்ந்து
வைத்த பவளக்குச்சுக்குப்பிகாண் சிங்கா
ஆத்திமலரிசைத்து நெற்றி மீதிலணிந்த
சூட்டியி தென்னநீ சொல்லடி சிங்கி
சத்தி சிவமலை யோகனுக்கி செய்து
தந்த செய்யான் கட்டி தானடா சிங்கா.

சங்கம் பழமிசைந்த செரிஞ்சிப்பூவை மூக்கில்
தரித்த வயணமென்ன சாற்றடி சிங்கி
மங்கை புலோமிசையென் குறி கேட்டு
மகிழ்ந்து கொடுத்த மூக்குத் தனுக்கிது சிங்கா

கண்டைப் பழத்தைக் கோர்த்துக் கண்ட சரமதாகக்
கொண்ட வயணமென்ன கூறடி சிங்கி
மண்டலம் புகழ்ந்திடச் சீதைக்குக் குறிசொல்லி
வாங்கிய பவளத்தாவடமடா சிங்கா.

இருகையிலே வட்ட வளையம் தாகவே
செருகியிட்ட தென்ன தோகை சிங்கி
அரிவை சந்திரமதி குறிகேட்டு மேதந்த
அஸ்த கடகமிது தானடா சிங்கா.

சங்கம் பழத்தைக் கோர்த்துத் தாவடமாகவே
கொங்கை மீதிலணிந்த குணமென்ன சிங்கி
மங்கை தமயந்தி யென்குறி கேட்டு
மகிழ்ந்து தந்த முத்து மாலைதான் சிங்கா

பிரப்பங்கொடியைப் பின்னி யிடையில் தரித்ததினால்
பெருமை வந்த தென்ன பேசடி சிங்கி
திருந்தக் குறிகள் கனிமிருதிக்குச் சொன்னதால்
சேர்த்திய மேகலா பரணங்காண் சிங்கா.

மாவழி கட்டின மருங்கிலிசைந் தாக்கட்டும்
மாக்கவன மனதிலேர்க்கச் சொல் சிங்கி
பாவைக்குக் குறிசொல்லி னோனவன் கொடுத்த
பட்டைத்தங்க வொட்டியாணங் காண் சிங்கா

இருதலையொன்னை போலிரண்டு காதினிலு
மிட்டவகை யிதென்ன திட்டங்காண் சிங்கி
சாரபதி யென்குறி வினவி மகிழ்ந்து தந்த
சொன்னத்தின் தண்டைபடா வடா சிங்கா.

இந்தப் பழத்தைக் கோர்த்தே யிருக்கிற் கட்டிய
  தென்ன விவர மதைப்பண்ணடி சிங்கி
துலங்கவே மதனர் கிளுட்டிக்குக்கான் குறி
  சொல்லியே வர்ச்சின பலனாச்சான் சிங்கா.
கலக்க மில்லாமலே யென்னைப் பிரிந்து போன
  காரிய மருமென்ன விரியஞ் சிங்கி
இலக்க மில்லாமலே யிவ்வாள் மருந்திறுவே
  என்மேல் வெறுப்புனக் கென்னடா சிங்கா.
ஆறுது மென்னமுன் மீறிவன்க்கு மெத்த
  ஆசையுன் மென்ன தியிருந்ததோ சிங்கி
ஆதிவொருதிவேணந்த மாமலைக் கன்னிமே
  வாசை புனக்குண்டு பேசாதே சிங்கா.
மாமலைக் கன்னி யென்றுன்னை நீபேசு
  மர்மாரிவேர் யிரு தெரியாதோ சிங்கி
தெரியத் தெரிய [illegible] செப்பியபிடேர்ந்தக்
  சிறக் [illegible] தெரியாதோ சிங்கா.
தெரியு [illegible] வே
  [illegible] மனைவிருந்தா [illegible] ன் சிங்கி
சேர [illegible] ந்தாற் போதவந்தோ [illegible] வைரச்
  சிறைப்பட் பழித்தது வரும்ப [illegible] குறவஞ்சி சிங்கா.

சிவாகமு [illegible] மென்கோர் போது [illegible] றர் மிகவாயிளிக்கி
உவா [illegible] த் தேசியார் [illegible] த்தமலன் மருதை
அவர்விய [illegible] ளிவின் பர்
இவாவிர வெ [illegible] க்கு வாழ்ந்திருப்பானே.
கார்வாழி பகவாழி காஜுமுயிர்கனத் திடத்தங்கருணை கொண்ட
பேர்வாழி மறைவாழி பிறந்த கணம்பினை குமரன் நடையம் வள்ளி
பார்வாழி பட்டர்வாழ்க் வாழி சிவமலை வாழுடையார் வாழி
சீர்வாழி யிக்குமண் பாரதிசொல் குறவஞ்சி செந்தேன் வாழி.

சிவமலைக் குறவஞ்சி,
முற்றுப் பெற்றது.

# விளம்பரம்

விவேகதிவாகரன் அச்சுக்கூடத்திலுள்ள,

புத்தகங்கள்.

| | |
|---|---|
| திருச்செங்கோட்டு மான்மியம். | 1—8—0 |
| பாம்பலங்காரர் வருக்கக்கோவை. | 0—2—0 |
| பூந்துறைப் புராணம். | 0—9—0 |
| மங்கல வாழ்த்து. | 0—2—0 |
| நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடி காதல் | 0—4—0 |
| பாப்பண கவுண்டன் குறவஞ்சி. | 0—8—0 |
| சிவமலைப் புராணம். | 1—4—0 |
| சிவமலைக் குறவஞ்சி. | 1—0—0 |

## அச்சிலிருப்பவைகள்.

கொங்குமண்டல சதக மூலமும் உரையும்-
இதில் ஒவ்வொரு செய்யுளிலுங் குறித்துள்ள சரித்திரங்களின் விவரமும். அதற்குள்ள பழய ஆட்சி, நாலாதாரம், சிலாசாசனங்களும் எடுத்து விளக்கப்பட்டுள்ளது. சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கு மெத்த உபயோகமானது.

கொங்கு மண்டலம். (24 நாடு, உபநாடுகளுக்குள்ள கிராமவிவரங்கள் கூறப்பட்டுள்ளது)

நாமக்கல் நரசிங்க சதகம்.

சிவமலைப் புராணம்.